கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 59 இதழ் : 09 டிசம்பர் 2024 விலை ரூ.25/-



## நான் உள்ள வந்தா என்னப்பா?

– ம.ரா.

## கணையாழி மின்னிதழ் சந்தா விவரம்

தனி இதழ் ரூ 25

ஓராண்டு சந்தா ரூ 275

சந்தா செலுத்துபவர்களுக்கு மின்னிதழ் அனுப்பப்படும்.

இணையத்தில் வாசிக்க

**www.kanaiyazhi.com**

**magzter.com, Magraan - Magazines**

அன்புகூர்ந்து பாருங்கள்..

## மின்னிதழ் சந்தா செலுத்த வங்கி விவரம்

Account Name - KANAIYAZHI,
Account No. 147202000000792
Bank - INDIAN OVERSEAS BANK,
VALMIKI NAGAR BRANCH,
CHENNAI-600 041.
IFSC CODE- IOBA0001472

G Pay

Kanaiyazhi Tamil Magazine

# கணையாழி

மலர்: 59 இதழ்: 09
டிசம்பர் 2024 விலை ரூ. 25/-

**நிறுவனர்**
கி. கஸ்தூரி ரங்கன்

**சிறப்பாசிரியர்**
இந்திரா பார்த்தசாரதி

**பதிப்பாளர்**
ம. இராசேந்திரன்

**ஆசிரியர்**
மய்திலி ராசேந்திரன்

**நிருவாக ஆசிரியர்**
உ.ரு. அரசவேந்தன்

**துணை ஆசிரியர்**
கவிதைக்காரன் இளங்கோ

**ஆசிரியர் குழு**
மு. ராமசாமி, ட்ராஸ்கி மருது
ஆ. பத்மாவதி, சாந்தி சித்ரா

**ஆலோசகர்கள்**
வ. ஜெயதேவன்
ரெ. பாலகிருஷ்ணன்
சு. சங்கரவடிவேலு
நா. சுவாமிநாதன்
தமன் பிரகாஷ்
கவிதா சொக்கலிங்கம்

**அயலக ஆலோசகர்கள்**
எம்.ஏ. முஸ்தபா (சிங்கப்பூர்)
கார்த்திகா பார்த்திபன் (கனடா)

**ஊக்கத்துணை**
தென்றல் கருணாகரன்
தென்னரசி பிச்சைமணி
எழில் சாலமன், இரா. உலகரசி

**இதழ் வடிவமைப்பு / உதவி ஆசிரியர்**
கோபு ராசுவேல்

**சட்ட ஆலோசகர்**
வழக்கறிஞர் சொ. சந்திரமோகன்


**கணையாழி மின்-இதழ்**
https://kanaiyazhi.net/
http://kanaiyazhi.emagaz.in
& www.magzter.com

படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புங்கள்

**மெய்ப்பு உதவி**
வேதநாயக்

**கணையாழி**
தொடர்புக்கு : +91 94432 69689
மின்னஞ்சல்: kanaiyazhi2011@gmail.com


உங்களுடன்



## நான் உள்ள வந்தா என்னப்பா?

*உள்ளே வந்தா என்னப்பா என்று
உறுமிக் கொண்டு வந்த
காற்றழுத்தத் தாழ்வு மண்டலப் புயல்
கரையைக் கடந்திருக்கிறது.*

*கனமழையைத் தாங்காமல்
காம்பொடிந்து கிடக்கின்றன
அடைமழையில் குடை விரிக்கும்
காளான்கள்!*

*சேதாரம் அதிகம் இல்லாமல்
மக்களைக் காப்பாற்றியிருக்கிறது
முதலமைச்சரின் நிருவாகம்!*

*ஆனால் கரையில்
மன அழுத்தத் தாழ்வு மண்டலத்தை
உருவாக்கி இருக்கிறது
இசைவாணியின்
உள்ள வந்தா என்னப்பா!*

*வைக்கம் நுழைவுப் போராட்டம் நடத்தி
வெற்றி கண்ட மாநிலத்தில்
எந்தச் சாதியாக இருந்தாலும்
உள்ளே வரக் கூடாது என்று
பெண்களுக்குத் தடை!*

*சபரிமலைக்குப் போகப்
பெண்களுக்குத் தடை இல்லை என்று
உச்ச நீதிமன்றமே 2018 இல்
அனுமதி தந்திருந்த போதும்
இப்போதும்
ஐயப்பனின் பக்தர்கள்
அனுமதிக்க மறுக்கிறார்கள்!*

*அரசமைப்புச் சட்ட நாளில்
சபரிமலைக்குப் போக வந்த
துருபதி தேசாய்
போராட்டக்காரர்களால்
விமான நிலையத்திலேயே
தடுத்து நிறுத்தப்பட்டார்!
பிறகு வந்த 10 பெண்கள்
திருப்பி அனுப்பப்பட்டனர்!*

*ஆதையும் மீறி உள்ளே சென்ற
பிந்து அம்மினி, கனக துர்கா
தாக்கப்பட்டனர்!
பிந்து அம்மினிக்கு
மிளகாய்ப்பொடி இரசாயன அபிஷேகம்!
ஆட்டோவில் வந்து தாக்கியதில்
அவருக்குப் பல் உடைந்தது.
இவ்வளவுக்கும் அவர்*

சட்டக் கல்லூரி விரிவுரையாளர்
ஆனாலும் என்ன
அவர் ஒரு தலித் இல்லையா?

மாநிலம் முழுதும் போராட்டம்
இரண்டு பேர் உயிர் போனது!

கனக துர்காவையும் விட்டுவைக்கவில்லை.
பத்துநாள் போலீஸ் பாதுகாப்பு!
பாதுகாப்பு முடிந்து
நான்
உள்ள வந்தா என்னப்பா என்று
வீட்டுக்குப் போனால்
மாமியாரால் தாக்கப்பட்டார்!
காயத்தோடு மருத்துவமனைக்குப் போனவர்
திரும்பி வந்தால்
உள்ளே வராதே என்று
சபரிமலையாய்க் கணவனின் அதிகாரம்!

நீதிமன்றம் சென்று தீர்ப்பு வாங்கி
வீட்டுக்குத் திரும்பினால்
வீட்டைக் காலி செய்துவிட்டு
கணவனும் மாமியாரும்
கனக துர்காவின் இரட்டைக் குழந்தைகளுடன்
தலைமறைவாகி இருந்தனர்.
இவ்வளவுக்கும் கனக துர்கா
அரசுத்துறைப் பணியில் இருக்கிறார்!

நான்
உள்ள வந்தா என்னப்பா என்று
ஆறு வருடங்களுக்கும் முன்
இசைவாணி எழுப்பிய கேள்விக்கு
இப்போதும் பதில் சொல்ல முடியாமல்
பாட்டையும்
பாடியவரையும் பழிதீர்க்க நிற்கிறார்கள்!

இவ்வளவுக்கும்
ஐயப்பன் வேறு யாருமில்லை
பாதி உடம்பைப்
பார்வதிக்குத் தந்து
மாதொருபாகராக இருக்கிற
பரமசிவனின் மகன்!
பரமசிவனின் பாதியாக இருக்கிற
பார்வதிதேவியின் வளர்ப்பு மகன்!

கங்கை எனும் பெண்ணைத்
தலையில் வைத்துக் கொண்டாடும்
பரமசிவனின் மகனை வணங்கப்
பெண்களுக்கு உரிமை இல்லையா? -

நான் உள்ள வந்தா என்னப்பா என்று
பாட்டில் கேள்வி கேட்டிருக்கிறார்
இசைவாணி!

இந்தக் கேள்விக்கு
இடமில்லை தமிழகத்தில்
ஏனெனில்
கோயிலுக்குள் வர மட்டுமில்லை
ஓதுவாராகவும் பெண்களுக்கு
உரிமை அளித்திருக்கிறார்
தமிழநாடு முதல்வர்!
ஆம்!
அனைத்து சாதியினரும்
அர்ச்சகராக ஓராண்டுப் பயிற்சி!

சென்னை, மதுரை
திருவரங்கம், திருவண்ணாமலை
திருச்செந்தூர், பழனி என்று
ஆறு இடங்களில் பயிற்சி மையம்!
ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களுக்கும்
ஆன்மீகத்தில் பயிற்சி!

பயிற்சி பெற்ற பெண்களுக்கு
முன்னுரிமை அடிப்படையில்
பணிநியமனம் வழங்கி
முன் மாதிரியை உருவாக்கி இருக்கிறார்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

விமானம் ஓட்ட
விண்வெளிக்குச் செல்ல
ஆண்களைப் போலப் பெண்கள்
அணிவகுத்து நிற்கிறார்கள்.
ஆனால்
அவர்களைப் போல முடியுமா
ஆண்களால் உயிர் சுமக்க!

அதனால்தான்
முதல்வர் ஆணையிட்டிருக்கிறார்
“கருவைச் சுமக்கும் பெண்கள்
இனி
கருவறைக்குள்!”
ஆகவே
இந்தியா முழுதும் செல்லட்டும்
அந்தத் தமிழ் முழக்கம்
“நான்
உள்ள வந்தா என்னப்பா?”

அன்புடன் **ம.ரா.**

# உள்ளடக்கம்

## கட்டுரை




## சிறுகதை



## கவிதை



## கடைசிப் பக்கம்



சிறுகதை
கவிஜி

# மோனலிசா புன்னகை

செய்தி கிடைத்து நாலைந்து நாட்கள் ஆகிவிட்டன.

வேண்டுமென்றுதானே இந்த இடைவெளி. இருந்த போதும் தூரத்தில்தானே இருந்தோம். இறந்துவிட்டால் மட்டும் என்ன அவசரம். தத்துவம் சுற்றி சுழன்றாலும்... யதார்த்தம் கேள்வி கேட்கத்தான் செய்கிறது. தெரிந்த சாவுக்கு துக்கம்கூட கேட்காத உள்ளத்தில் இருப்பதெல்லாம் பள்ளம்தானே. பள்ளத்தில் இருக்க விரும்பவில்லை. வேகமாய் ஏறிவிடும் மலை உச்சியில் போனோடு நின்றேன்.

பலமுறை டயல் செய்துவிட்டு ரிங் அடிக்க அடிக்க கட் செய்துவிட்ட மனநிலையை என்ன சொல்வது. சாவு வீடு எப்படி இருக்கும் என்று தெரியும். சங்கடப்படுத்திவிடக் கூடாது என்ற பதற்றம்கூட பாதியிலேயே பார்வையைத் திருப்பிக்கொள்ளச் செய்யலாம் தானே. அவர் கைபேசிக்குதான் அழைத்தேன். ஒவ்வொரு ரிங்கும் அவரின் குரலை கோர்த்தெடுத்து கட்டிவிடுமோ என்ற பயமும் நெஞ்சத்தில் குறுகுறுக்காமல் இல்லை.

யார் எடுப்பார்கள். யார் வேண்டுமானாலும் எடுப்பார்கள். எப்படி ஆரம்பிப்பது. எங்கிருந்து தொடங்குவது.

நான் இந்த மாதிரி... பேசறேன்... விஷயம் கேள்விப்பட்டேன். சாரி... எதுக்கு இந்த சாரி. அப்படியே தமிழ்ப்படுத்தினால் மன்னிக்கவும் வருமே. அவரின் இயல்பான முதிர்ந்த மரணத்துக்கு நான் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும். அதற்கு பதிலாக என் சோகத்தை எப்படி முதல் வார்த்தையிலேயே வெளிப்படுத்துவது. பக்கமாக இருந்தால் வீடேறி முகம் தாழ்த்திக் கொள்ளலாம். மும்பையில் அல்லவா அவரின் வாழ்வும் மரணமும். ஒருமுறை ஊருக்கு வந்திருந்தபோது... "மாப்ள... என் கட்டை பாம்பேலதான்டா வேகும். இனி எங்க நான் இங்க வர..." என்று சொல்லிவிட்டு வானத்தை பார்த்துக்கொண்டார். அப்போது வானம் போதி என்று எனக்கு தெரியாது.

கடைசி ரிங்குக்கு முந்தின ரிங்கில்... மூச்சு வேர்த்து குத்துச்சண்டை ரிங்கில் நிற்பது போல உணர்ந்தேன். மறுமுனை எடுக்கப்பட்டு விட்டது. பேசிய குரலில் கரகரப்பும்... மௌனத்தின் மொழிபெயர்ப்பும்.

அவள் எடுத்துவிட்டால் என்ன செய்வதென்ற படபடப்பு இருந்ததுதான். இதோ

எகிறத் தொடங்கிவிட்ட இதயத் துடிப்பு அவளை நிச்சயம் செய்துவிட்டது.

“ஆமா... அப்பா தவறிட்டார். நீங்க....?” என்ற குரலில் காலம் கூடிக் கிடந்தது. குரலுக்கு நிறம் உண்டென்று தோன்றியபோது... நானும் குரலை செருமிக்கொண்டேன்.

இன்னாரென்றேன். எப்படியும் ஒரு புள்ளியில் என்னை திறந்து காட்டத்தானே வேண்டும்.

சிறு இடைவெளி. மௌனத்தில் மூச்சு இயல்பாகிக்கொண்டிருக்கிறது. அவள் கண்கள் அங்கும் இங்கும் சரிந்து நிமிர்ந்திருக்க வேண்டும். பழைய காலம் நெற்றியில் படபடவென ஓடியிருக்க வேண்டும்.

என் நினைவுகளை அலசிக்கொண்டு சிதறு கல் ஓடுவது போல... அவளின் குரல் பரபரவென காதைச் சுற்றியது.

“ஹேய்... வெற்றி... எப்டிருக்கீங்க... ஹப்பா... இந்தக் குரல் கேட்டு எத்தனை வருஷம் ஆச்சு. சின்ன வயசு குரலுக்கு கலர் பூசின மாதிரி இருக்கு...”

“என்ன கவிதையா பேசறா... ஒருவேளை கவிதைக்காரி ஆகிட்டாளோ...” ‘ஹா....ம்...’ என்று நினைத்ததை விழுங்கிக்கொண்டு நினைவுகளையும் விழுங்கிக்கொண்டே பேச்சுக்கு கவனம் கொடுத்தேன்.

நல்லாருக்கேன் என்றது பதில். அனிச்சை நீங்க எப்பிடி இருக்கீங்க... என்றது.

நீ க்கும் நீங்களுக்கும் இடையே மும்பைக்கும் கோவைக்குமான இடைவெளி நொடி நேரத்தில் இருமுறை சுழன்று விட்டது.

நல்லா இருக்கேன்... என்ற அவளின் கண்களில் படபட இருந்திருக்க வேண்டும். அதை பறக்க விட்டுவிடக் கூடாது என்ற பதற்றமும் இருந்திருக்க வேண்டும்.

ஒரு கருப்பு வெள்ளை சினிமா ஓடிமுடிந்த ஒப்புதலோடு நின்றேன். ஆனாலும்... போன் பண்ணிய காரியத்துக்கு மனம் அதுவாகவே திரும்பியது.

“மாமா....?” என்றேன்.

“ஆமா வெற்றி. கொஞ்சம் உடம்பு சரியில்லாம இருந்தார். ஏஜும் ஆகிடுச்சுல. ஒரு வாரம் ஹாஸ்பிடல்ல இருந்தார்... அப்டியே...” அதற்கு மேல் பேச்சுக்கும் மூச்சுக்குமிடையே அவள் உழன்றிருக்க வேண்டும். சட்டெனத் தோன்றிய அமைதி எங்களுக்கான அலைபேசி அலைக்கற்றையில் புயல் வீசியது போல உணர்ந்தேன்.

எப்படி ஆறுதல் சொல்வது. செத்த வீட்டில் ஆறுதல் சொல்வது போல அறியாமை வேறுண்டோ. அப்புறம் எதற்கு போன் பண்ணினேன். அறியாத தோரணையில்... பழைய காதலியிடம் பேசிவிட்ட பதட்டத்தை எப்படி மேற்கொண்டு எதிர்கொள்வது.

அலைபேசி அணைந்த பின்னும் பேசிக்கொண்டிருக்குமா. இருந்தது. எனக்குள் அலைவரிசை குளறுபடி கரகரப்பாக கரப்பான் றெக்கை அடித்தது. ஏதேதோ எண்ணங்கள்... எங்கிருந்தெல்லாமோ என்னை நோக்கி நானே சுழன்றேன். அன்றிரவை ஆயிரம் முறை சுழற்றியது பூமி. ஆயிரத்தோராவது முறையும் சுழன்ற பூமிக்கு ஈர்ப்பின் வேகம் சற்று கூடுதல்தான். அடுத்த நாள் அந்த நேரத்துக்கு முன்னமே அலைபேசியில் வந்திருந்தாள்.

ஆர்வம் இருந்தாலும் காட்டிக்கொள்ள கூடாத அபத்தம் மெல்ல ஏழெட்டு ரிங் விட்டே எடுக்கச் சொன்னது.

“என்ன பிசியா இருக்கீங்களா... இன்னைக்கு ஏழாவது நாள் விசேஷம். நிறைய சொந்தக்காரங்க வந்திருக்காங்க. எங்க அத்தை பையன் வந்திருக்கான். யார்னு தெரியலயா... ஹலோ உங்க பிரெண்டுதான். நாம பேசினாவே முறைப்பானே. அந்த தத்திதான். இன்னமும் என்னை ஓரக்கண்ணால தான்

பாக்கறான். நேரா வந்து லவ் சொல்றதுக்கெல்லாம் தில்லு வேணும்... வெற்றிக்கு மாதிரி" என்றவள்.... 'இருங்க... தள்ளி வரேன்' என்றபடியே கூட்டத்தை விட்டு நகர்ந்து வந்தாள். அவளே ஒரு கூட்டமாக வந்தது போல ஒரு பிரமிப்பு எனக்குள்.

நானும் கூட சாவு வீட்டில் இருந்து இயல்புக்கு வந்திருந்தேன்.

இடையிடையே கொள்ளும் மௌனத்தில் ஒரு கால இடைவெளியை உணர முடிந்தது. படபடவென என்னவெல்லாமோ கேட்டுவிட முடியாது இல்லையா. கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கு பிறகான அலைபேசி சந்திப்பு இது. விட்ட இடத்திலிருந்து பேசலாம். இப்போதிருக்கும் இடத்துக்கு வந்துவிட முடியுமா.

என்னோட முந்தின புக்குக்கு மாமா வாழ்த்துரை எழுதினார் என்று பொதுவாக பேச்சை ஆரம்பித்தேன்.

"ஆமாமா... தெரியும். புக்ல பாத்தேன். அப்புறம் உங்க 'எதிர்காற்று' நாவல்கூட படிச்சேன். அப்பாக்கு அனுப்பியிருந்தீங்களே. அப்டியே அந்த காலத்துல நடந்த எல்லாமும்... கண்ணு முன்னால வந்து போச்சு. ஒயர் வாங்க... சிறுத்தை இருக்கற காட்டை கடந்து காப்பிக் காடுக்கு போனது... திரும்ப வந்து அவ்ளோ கஷ்டப்பட்டு கனெக்ட் பண்ணி... ஸ்விட்ச் போடற சமயத்துல நிஜமாகவே கரண்ட் வந்ததுனு அவ்ளோ நிகழ்ச்சி. எல்லாமே அப்பிடி அப்படியே கண்ணு முன்னால தெரிஞ்சுது..."

அவள் பேசப்பேச எனக்கும் ஆசை கூடி விட்டது.

"ஆமா நாம பிரிஞ்சு போன அன்னைக்கு உனக்கு கொடுத்த கொய்யா பழத்தை என்ன பண்ணின..." என்றேன். எனக்கு அதுதான் சட்டென நினைவுக்கு வந்தது. கேட்டுவிட்டேன்.

வாய்க்குள்ளாகவே சிரித்தவள்... சட்டென அலைபேசி அழகாகி விட்டது போல ஒரு எண்ண மிதப்பு எனக்குள். "அதை கொஞ்ச கொஞ்சமா அணில் கொறிக்கற மாதிரி பொள்ளாச்சி வரை கொறிச்சிட்டே வந்தேன். தீர்ந்திடுச்சு. அதுக்கு அப்புறம் அழுகை வந்துருச்சு..."

இப்போது கூட சிணுங்கும் போல இந்தக் குரலுள் ஒரு சிறுகுரல். எனக்குள் தீபத்தின் அசைவு. அதுவும் வேகமாய் காற்றடிக்கும் போது ஜுவாலையின் தகிப்பாய்.

"அப்புறம் உங்க ரோஸி நாய் என்னாச்சு" என்று அவள் கேட்டது ரோஸ் வண்ணத்தில் கேட்டது.

சட்டென பெரும்பாறையில் பிடி நழுவிய ஒளியெனச் சிதறினேன்.

அது... அது......

விஷயம் கேள்விப்பட்டு இன்று வந்திருக்கும் யாரோ உறவினர் கண்ணீரோடு கதறுவது அவள் உள்ளங்கை தாண்டியும் ஊடுருவி விட்டது. என் மௌனமும் அவளுக்கு பதிலைத் தந்திருக்கும். அவள் அந்த அழுகைக்குள் சென்றுவிட்டு என்னிடம் வர சில நொடிகள் பிடித்தன.

"ஆமா அடுத்த வருஷம் மே மாச லீவுக்கு கண்டிப்பா வரணும்னுதான நமக்குள்ள பேச்சு. ஏன் வரல....?" என்றேன் மெதுவாக விட்ட இடத்தில் இருந்து தொடர.

எத்தனையோ வருடங்கள் இந்த கேள்வி எனக்குள் சுழன்று சுழன்று ஓர் ஆயுள் மச்சமென என் இதயத்தில் விழுந்துவிட்டிருந்தது. மாய ஓட்டை... அதுவாகவே கேட்டும் விட்டது.

ஆழ்ந்த பெருமூச்சு. ஒரு சிறு சிரிப்பு. அவள் இப்போது கீழே கிடக்கும் இலையொன்றை எடுத்து திருப்பி பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அதன்மீது படும் வெளிச்சத்தின் துளிகளில் அவள் முகம் பிரதிபலித்திருக்க வேண்டும்.

ஏதாவது சீரியஸாக பேசும்முன் அவள் பலமுறை அப்படிக் கீழே கிடந்த இலையை எடுத்து திருப்பித் திருப்பிப் பார்த்த காட்சிகள் அதே வயதில் என் மனக்கண்ணில் ஓடின. கையில் இலை இல்லை. வெற்றிடம்தான் என்றாள்.

நாற்பது வயது பொதுவாகவே வெறுமைக்குள் சென்றுவிடும்தான் போல. அத்தனை விளையாட்டுப் பிள்ளையாக இருந்தவள் இத்தனை முதிர்வாக எதிர்வினை ஆற்றுவது என்னவோ போல இருந்தது.

"நம்ம விஷயத்தை அந்த மெண்டல்... அதான் உன் பிரென்ட்... வீட்டுல சொல்லிக் குடுத்துட்டான்" ரகசியம் உடைப்பது போல இருந்தது அவள் சொன்ன தொனி.

"அய்யய்யோ அப்புறம்...!"- நிஜமாகவே இப்போது மாட்டிக்கொண்டது போல பதற்றம் என்னில் மினுங்கியது. வேகமாய் கேட்டேன். "அப்ப மாமாவுக்கு தெரியுமா...?"

"அவருக்குதான் முதல்ல தெரியும். ஊர்ல நாம காடு காடா சுத்தும்போதே கண்டுபிடிச்சிட்டார். மாப்ள பெருசாகட்டும். பாத்துக்கலாம்னு சொல்லிட்டு அத பத்தி எதுமே கேக்கல. எங்கம்மாதான் நீங்க அந்த பேங்க்காரங்க, நாங்க இந்த பேங்க்காரங்க. இதெல்லாம் ஸ்டேட்டஸ் பிரச்சனைனு லூசு மாதிரி உளறிட்டு... அப்டியே விட்டுருந்தா பரவால்ல. அடுத்த லீவுக்கு தூத்துக்குடிக்கு அவுங்க அண்ணா வீட்டுக்கு கூட்டிட்டு போய்டுச்சு. அப்புறம் ஸ்கூல் முடிஞ்சு காலேஜ். ஓடற ஓட்டத்துல உன்ன எங்கன்னு வந்து தேடறது. சாரி உன்ன சொல்லிட்டேன்..."

நாக்கு கடித்திருக்க மாட்டாள். புருவம் உயர்த்தி இருப்பாள்.

எனக்கு அந்த 'உன்ன' ரொம்ப பிடிச்சிருந்தது. சடசடவென கொய்யா மரத்தில் அவள் ஏறுவதற்கு கையை பிடித்து தூக்கிவிட்ட காட்சி கண்களில் இருந்து குதித்து... குதித்துக்கொண்டே இருந்தது.

இதெல்லாம் தெரிஞ்சுக்கிட்டுதான் எனக்கு அணிந்துரை எழுதிக் குடுத்தாரா உங்கப்பா. திக்கென இருந்தும்... தித்திப்பு உள்ளே தவழ்ந்தது.

"உன்கிட்ட எனக்கு என்ன ரொம்ப பிடிக்கும் சொல்லு பாக்கலாம்..." அலைபேசியை அனிச்சை இறுக்கமாகப் பற்றியது.

"ஹலோ அதெல்லாம் மறப்பாங்களா... நாம பேசின ரெண்டாவது நாளே இந்த ரப்பர் பாவாடை உனக்கு சூப்பரா இருக்குனு சொன்னீங்க..." வெட்கம் தாங்காமல் வெற்றிடம் பூத்திருப்பாள்.

வண்ண வண்ண ரப்பர் பாவாடையில் அவள் வரும் தினங்கள் என் கண்களில் ராட்டினம் சுற்றியது.

"இன்னும் வெச்சிருக்கேன்" என்றாள். ராட்டினம் உச்சத்தில் நின்றது.

"ஒருநாள் ரசச்சோறு சாப்ட்ருந்தீங்க. நா நேரா கிச்சன் உள்ள வந்துட்டன். உங்க தாத்தா கூட உன் சிநேகிதி வந்திருக்குனு வாசல்லருந்து கத்துனார்ல... நியாபகம் இருக்கா..."

அவள் குரலில் உற்சாகம் தொற்றிக்கொண்டது. எனக்கும் அது பற்றிக்கொண்டது. காற்று வெளியில் என் புன்னகை... என்னை நீந்தச் சொல்வது போல ஒரு புது உணர்வு.

"அப்போ அவ்ளோ பக்கம் நான் வந்து உக்காருவேனு நீ நினைக்கவே இல்லல. என்ன பண்றதுனு தெரியாம முழிச்ச. அப்ப உங்க அண்ணி... எனக்கு சோறு போட தட்டு எடுக்க... நான் வேண்டானு சொல்லி உன்னையே பார்த்தன். அப்ப என்ன பண்ணின சொல்லு... பாப்போம். எவ்ளோ நியாபகம் இருக்குனு...!"

திக்குமுக்காடி போனேன். இத்தனை துல்லியமாக நினைவில்

கொண்டிருக்கிறாள்.

“வாய்க்கு கொண்டுபோன சோத்தை ரசம் சொட்ட அப்படியே உன்கிட்ட நீட்டினேன். சத்தியமா நீ கை நீட்டிதான் வாங்குவனு நினைச்சேன். ஆனா படார்னு நீ ஆஹ் காட்டிட்ட. நானும் ஒரு வேகத்துல ஊட்டி விட்டுட்டேன். ஒரு மாயாஜாலம் நடந்த மாதிரி இருந்துச்சுல.”

நான் கண்கள் விரிந்தேன். முகம் மலர்ந்தேன். கால்கள் ஓரடிக்கு மேலே தரை துழாவின.

சட்டென மௌனம் அவள் பக்கம். ஒருவேளை விசும்புகிறாளோ. எனக்கு சட்டென தொண்டைக்குள் விழுந்த நினைவுகளின் அவஸ்தை மூச்சை கவ்வியது.

“ஆழ இழுத்த மூச்சோடு... அப்போ ஐயயோனு நீ வேகமா திரும்பி உன் அண்ணிய பாத்த. ஆனா அண்ணி ஜெம். நம்ம பாக்காத மாதிரி திரும்பிக்கிச்சு...”

அவள் அந்த வயதுக்கே சென்றுவிட்டாள் போல. கன்னம் சிவந்திருக்க வேண்டும். சின்ன முகத்தில் சித்திரம் நிறைந்திருக்க வேண்டும். முன்பற்களின் இடையே இருக்கும் சிறு சந்தில் வெட்கம் விரிந்திருக்க வேண்டும். கண்ணோரம் நீர் கசிந்திருக்கவும் வேண்டும்.

கால்மேல கால் போட்டு போனி ஸ்டைல் ஹேர் குளிரில் சிலிர்க்க... ஒரு பொம்மை மாதிரி உக்கார்ந்து இருப்பல்ல. அந்தக் காட்சி ஒரு போட்டோ மாதிரி என் மனசுல பதிஞ்சிருக்கு. பாக்கறியா என்றேன். கொஞ்சம் அதிக உரிமை எடுத்துக்கொண்டேன்தான் போல. அனிச்சையாக வலது கை நெஞ்சு பக்கம் தவழ்ந்தது. ஆனாலும் அவள் களுக் சிரிப்பு அதை ஆமோதித்தது.

“இப்படியெல்லாம் திரும்ப உன்கிட்ட பேசுவேன்னு நான் நினைச்சு கூட பாக்கல...” என்றேன் மூச்சு நிறைய பேச்சு குறைய.

“ஏன் நினைச்சு பாக்கல....?” கொய்யா பழத்தைக் கொண்டு முதுகில் அடித்தது போல இருந்தது கேள்வி.

இதற்கு என்ன பதில் சொல்வது. காலம்தான் பதில். வேட்கை தணிந்து நினைவுகளில் சுழல்வது கூட ஒருவகை போதாமைதான். அந்தப் போதாமை போதும் என்று நம்புவது பள்ளிக்கால காதலுக்கே உண்டான பரவசம். நினைக்க நினைக்க மறந்துவிட்ட சொற்றொடர்களை மௌனம் ஆக்கிக்கொண்டேன்.

அவளே கலைத்தாள். அவளும் கலைந்துதான் இருக்க வேண்டும்.

‘புலி அடிச்சாம் பாறைக்கு கூட்டிட்டு போனீங்கல்ல... அப்ப பாறை மேல நின்னு புலி மாதிரியே நடிச்சு காட்டுனீங்க... ப்பா... இன்னமும் அப்படியே அந்த பயம் நெஞ்சுல இருக்கு’ என்று வேகமாய் நாலைந்து பக்கங்கள் தாண்டி கையில் படபடக்கும் டைரியை கெட்டியாக பற்றிக்கொண்டது போல இருந்தது அவளின் நினைவு அடுக்கு. நினைவுகளின் பழக்கமே இதுதான். தொடர்ச்சியாகப் பாயாது. விட்டுவிட்டு பாய்ந்து பிராண்டும்.

அப்புறம் மழைக்குள்ள என் பக்கம் சாய்ச்சு குடை பிடிச்சிட்டு... உங்க முதுகெல்லாம் நனைஞ்சு போச்சே. அப்ப எனக்கு பாவமா இருந்துச்சு. என்னாலதானேன்னு அவ்ளோ வருத்தப்பட்டேன். ஆனாலும் அந்த வருத்தத்துல அப்டி ஒரு சந்தோஷமும் இருந்துச்சு. நீங்க வீட்டுல விட்டுட்டு போனப்புறம் வெளிய வந்து புல்லா நனைஞ்சன் என்று சொல்லி சிரித்தாள். நினைவுகளில் நனைவது போல எந்த மழையும் நனைத்துவிட முடியாதுதானே.

“ஸ்டேஜ்ல டேன்ஸ் பண்றப்போ... நீ என்னையேதான பார்த்துட்டு ஆடுன. உங்க ஊர் புள்ளைங்களுக்கெல்லாம் அவ்ளோ பொறாமை. என்னை அப்பிடியே முறைச்சாங்க தெரியுமா. ஆனா அதுல

எனக்கு ஹேப்பி தான்...'' காதுக்குள் புறுபுறுக்கும் ரகசியம் போல பேசினாள்.

நினைவுகளின் வரிசையில் சரசரவென அவள் கட்டும் வானவில் இன்னும் நான்கு வண்ணங்களை சேர்த்துக்கொண்டிருந்தது.

மேக்கப் நீ தான பண்ணி விட்ட என்றேன். ஆட்டம், பாட்டம், நாடகம் என்று கலை நிகழ்ச்சியில் நடந்த பல நினைவுகள் என்னில் கலர் பல்புகளை சுழல விட்டது.

"நீ குடுத்த நிஜாம் பாக்கை இன்னமும் வெச்சிருக்கேன் தெரியுமா'' என்றேன்.

இந்த முறை சிறு மௌனத்துக்கு பின் விசும்பல் நன்றாகவே கேட்டது.

"ஹேய்... என்னாச்சு...'' நன்றாகவே கண்ணீர் வந்து விட்டது போல. மூக்கை உறிஞ்சி மூச்சை அடக்கினாள்.

"இல்ல... அப்பா நியாபகம் வருது. நான் அப்புறம் பேசறேன்'' என்று கட் பண்ணி விட்டாள்.

கடகடவென கண்ணில் உருண்ட கண்ணீரில் நானும் உருண்டேன்.

இரண்டு நாட்களாக கால் இல்லை. என்னாச்சு என்ற கேள்வி என்னுள் கொஞ்சம் தைரியமாகவே எழுந்தது. இந்த இரண்டு நாட்களுமே... ஏன் பேச ஆரம்பித்த இந்த பத்து நாட்களாகவே அவள் நினைவுதான். நேரம் காலம் தெரியாமல் நினைவுகளின் ஊடாக நின்றும் நடந்தும் கிடந்தும் இருக்கிறேன். இதெல்லாம் இப்போ தேவையா என்று உள்ளே இருக்கும் காலக்கணிதன் எச்சரித்தாலும்... அதற்கும் உள்ளே இருக்கும் கவிதைக்காரன் காதல்காரனை காட்டிக்கொண்டே இருக்கிறானே.

சரி ஆனது ஆகட்டும். நாமே போன் பண்ணிடலாம் என்று யோசித்து யோசித்து ஒரு கட்டத்தில் கூப்பிட்டு விட்டேன். கடைசி ரிங்குக்கு முந்தைய ரிங்கில் ஆன் செய்யப்பட்ட அலைபேசியில்... "எஸ்... யாரு..?'' என்றது அந்தக் குரல்.

திக்கென பாறையில் நழுவிய ஒளியில் பிடி தவறியதை உணர்ந்தேன். மீண்டும் "ஹலோ'' என்றேன்.

மீண்டும் "எஸ்.... சொல்லுங்க'' என்றது குரல்.

உடலில் எங்கிருந்தோ குதித்துத் தொங்கும் பதற்றம். எச்சில் விழுங்கிக்கொண்டே வேகமாய் காலை கட் செய்தேன்.

இந்த பத்து நாட்களாக பேசிய அனைத்தும் படபடவென காதுக்குள் ரீங்காரமிட்டது. குரலும் வார்த்தைகளும்... மெல்ல மெல்ல ஓர் இயந்திரக் குரலாக தத்தளித்தது.

படபடவென சிறுவயது காட்சிகளின் ஒலி மட்டும் காதில் அடுத்தடுத்து வந்து மோதியது. ரப்பர் பாவாடைக்காரியின் குரல் இப்போது தெளிவாகக் கேட்டது. அப்படியென்றால் இந்த பத்து நாட்களாகப் பேசிக்கொண்டிருப்பது யார். எப்படி இந்தக் குரலை அவள் குரல் என்று நம்பினேன். பேசிய சந்தோஷத்தில் குரலுக்கு கவனம் போகவில்லை. ஆனால் எல்லா சம்பவங்களையும் சொல்கிறாளே. ஒருவேளை எதிர்காற்று நாவலை படிச்சிட்டு அதுல இருக்கற நிகழ்வுகளை தெரிஞ்ச மாதிரி சொல்றாளோ. யாரா இருக்கும். ஏன் இப்பிடி பண்ணனும். இல்லையே... எதிர்காற்றுல பதியாத விஷயங்களைக் கூட சொன்னாளே....

திக்கென்றது உள்ளே. திகைத்த மனதுக்குள் மூடியிருந்த பாறையை வேகமாய் நகர்த்தினேன்.

ரப்பர் பாவாடைக்காரி என்னோடு இருந்த எல்லா நேரமும் அவள் தங்கை வர்ஷினியும் உடன் இருந்தாளே. அவுட் ஆஃப் போகஸில் இருந்த அவளை இப்போது நினைவுகளைக் குவித்துப் பார்த்தேன். அவளின் அத்தனை பார்வையும் அத்தனை அழுத்தமாய் என்மீதே குவிந்திருந்ததை உணர உணர...

இதயத்தில் இறங்கி நகர்ந்த ரப்பர் பாவாடைக்காரியின் சித்திரத்தில் உடனிருந்த அவளின் தங்கையின் சித்திரம் மெல்லத் திரும்பி என்னைப் பார்த்து மோனலிசா புன்னகையைக் காட்டியது.

போன் அடித்தது. நடுங்கும் மனதோடு கண்கள் மிரள ஆன் செய்தேன்.

"சாரிப்பா.... கொஞ்சம் வேலையா இருந்துட்டேன்... என்ன பண்றீங்க..." வழக்கம் போல பேசத் தொடங்கிவிட்டாள்.

நான் மௌனமாய் கேட்டுக்கொண்டே இருந்தேன்.

"என்னாச்சு... ஏன் சைலன்ட்... ஏதும் கோபமா..."

நான் அழுத்தமாக "வர்ஷினி" என்றேன்.

அப்பக்கம் மௌனம்.... பெரும் மௌனம்...

chevijay80@gmail.com ■



கவிதை
**தங்கேஸ்**

# காட்சிகள்

அரைவட்டம் முடியும் இடத்திலிருந்து
தொடங்கும் ஒரு முழுவட்டம்
அதன் மீது ஒரு நேர் கோடு
பிறகு ஈசிஜி கோடுகள்
எப்படி பார்த்தாலும்
வானம் என்பது சிறுதுரும்புதான்
முன்னிரவில்
வழிதப்பிய வெண்நாரைக்கு

அடர் சிவப்பில் உதட்டுச்சாயம் பூசி
இடுப்பை வெட்டி உதட்டை சுழித்து
உங்களை பார்த்துப் போகிறவளை
ஒரு புன்னகையுடன்
நீங்கள் கடந்துவிட்டாலும்
தேவகுமாரன் சபிக்கப்பட்ட வாழ்க்கையை
கண்கொட்டாமல்
பார்த்துக்கொண்டேதானிருக்கிறார்

கைப்பிடிச் சோற்றுக்கே
சுற்றுச்சுவரில் சிம்பொனி
இசைத்துக்கொண்டிருக்கும்
காக்கை கூட்டங்களின் எண்ணிக்கையில்
நீங்கள் ஒன்று
நான் ஒன்று
இந்த கவிஞன் மற்றொன்று

குயில் முட்டைகளை
அடையாளம் காணத்தெரியாமல்
அடைகாக்கும் புதிர்மைகளில்
தவறேதும் நேர்ந்திடவில்லை
காக்கைகளுக்கு

தாளாத விசும்பல்களால்
உறக்கத்தை கலைக்கும்
அலைகளின் மீது
தீராத சாபங்களேதுமில்லை
கடலுக்கு

சாவின்மீது நையாண்டி
மேளம் கொட்டி
பாடை தூக்கிப் போகும் போது
முன்னால் ஆடிப்போகும்
மனிதர்களுக்கு
எப்படி இசை விருந்தோ
அப்படியே கூட்டத்தில் புகுந்த நாய்களுக்கும்
நல்ல விருந்து தான்

thanges1970@gmail.com ■



கட்டுரை
ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்

# மைனரா, சஹாரரா, சோளத்தட்டை, கோட்டு

*"What's in a name? That which we call a rose
By any other name would smell as sweet..."*

*- William Shakespeare's Romeo and Juliet, Act 2, Scene 2*

*ஜூலியட்:*

*"பெயரில் என்ன இருக்கிறது?
நாம் பெயரிட்டுக்குறிப்பிடும் ரோஜா மலரை,
வேறு எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் இனிய மனம் தருமே!"*

*- வில்லியம் ஷேக்ஸ்பியரின் "ரோமியோ & ஜூலியட்" நாடகம் - அங்கம் 2, காட்சி 2*

## தோற்றுவாய்

இந்தக் கட்டுரையை எழுதவே கூடாது என்று இருபது ஆண்டுகளாக எண்ணிக் கொண்டிருந்தேன். கடைசி வரை என்னைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தேன். இருந்தாலும், கடைசியாக சில வாரங்களுக்கு முன்பு பலத்த சிந்தனை செய்த பிறகு, இந்தக் கட்டுரையை எழுதி முடித்தேன். இந்தக் கட்டுரை யாரையாவது மன வருத்தம் கொள்ள வைக்குமானால் அதற்கு அடியேன் இதயப்பூர்வமான மன்னிப்பை முதலிலேயே கேட்டுக்கொள்கிறேன். இக்கட்டுரையில் வரும் கதாபாத்திரங்களில் எத்தனை பேர் இன்னும் இப்பூவுலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்களோ என்று அடியேன் அறியேன். அவர்களில் ஓரிருவர் எஞ்சியிருந்தாலும், அவர்கள் இக்கட்டுரையை வாசிக்கக்கூடிய அளவுக்கு சுயநினைவு கொண்ட நிலையில் இருப்பார்களா என்றும் எனக்குத் தெரியாது. ஏதோ எழுதிவிட்டேன். எனினும், மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற பழமொழியை என் நெஞ்சத்தில் ஆழப்பதித்த என் தாய் தந்தையரை இத்தருணத்தில் எண்ணிப் பார்க்கிறேன்.


## இது சாக்ரடீஸ் காலத்திய வழக்கம்

நான் சொல்லுவதை நீங்கள் நம்பப் போவதில்லை. நம்பினால் நம்புங்கள். பொ.ச.மு. 5-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சாக்ரடீஸ், ப்ளாட்டோ ஆகியோர், பொ.ச.மு. 4-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அரிஸ்டாட்டில் ஆகியோர் இந்த விஷயத்தை எதிர்கொண்டிருப்பார்கள் என்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

மழுமழுவென வெங்கலப் பாத்திரத்தின் வெளிப்புறம் போல தலையைக் கொண்ட சாக்ரடீசின் தலையைப் பார்த்த சீஷர்கள், அவருக்கு "வழுக்கை மண்டை" என்று பட்டப்பெயர் வைத்திருப்பார்கள். அப்படி இருந்திருக்காது என்று நீங்கள் மறுக்கலாம். ஆனால் நான் கூறுவது அதிக சாத்தியமுள்ளதைப் பற்றிதான்.

லியோ டால்ஸ்டாயின் நண்பர்கள் அவரது தாடியைக் குறிப்பிட்டு ஏதாவது சொல்லியிருப்பார்கள். மதுரையை ஆண்ட கூன் பாண்டியனுக்கு அந்தப் பெயர் கண்டிப்பாக ஒரு பட்டப்பெயராகத்தான் இருக்க வேண்டும். பொற்கைப் பாண்டியன் என்பதும் பட்டப்பெயரே. "செம்புலப்பெயல் நீரார்" என்ற புலவரின் பெயர் ஒருவருக்கும் தெரியாது. அவர் எழுதிய சங்கப்பாடலின் வரியே அவருக்குப் பெயரானது.

சோழ நாட்டின் ஒரு பகுதியாக இருந்த கம்ப நாடு என்ற பகுதியில் வாழ்ந்ததால், ராம காவியம் இயற்றியவருக்கு கம்ப நாடன் என்ற பெயர் வந்தது. அது அவரது இயற்பெயர் அல்ல. பட்டப்பெயர் தான். கம்ப நாடன் என்பது சுருங்கி கம்பன் என்றாகி விட்டது. வள்ளுவர் என்பவர் அரசன் சொல்லும் செய்திகளை, ஒரு யானையின் மீது ஏறி, முரசறைந்து, மக்களுக்கு அச்செய்தியைப் பரப்புபவர். இந்நாளைய நடைமுறையில் அவர் PRO (Public Relations Officer) என்ற அரசு அதிகாரி. திருக்குறளை இயற்றியவர் அத்தொழில்தான் செய்து வந்தார். அதனால் அவரது பெயரே வள்ளுவர் என்றாகி விட்டது. 'திரு' என்பது சிறப்பு



அடைமொழி. திருவள்ளுவர் என்பது பட்டப்பெயர் தான். "கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி" என்ற சங்கப்பாடலை இயற்றியவரின் பெயர் இறையனார். இறையனார் என்பவர் இறைவனாகக்கூட இருக்கலாம். குறுந்தொகையின் இரண்டாம் பாடலாகிய இப்பாடலை இறைவனே (இறையனார் ) எழுதியதாக நம்பப்படுகிறது.

குள்ள உருவம் கொண்ட ஃப்ரான்ஸ் மன்னன் நெப்போலியன் போனபார்ட் மூல நோயால் கஷ்டப்பட்டான். அவனது தளபதிகள் அவனது முதுகுக்குப் பின்புறம் அவருக்கு என்ன பெயரிட்டுப் பேசியிருப்பார்கள்? இரண்டாம் உலகப்போரின் போது, உலகையே நடுங்க வைத்த அடால்ஃப் ஹிட்லரின் இன்னொரு பெயர் "ப்யூரர்" (Fuhrer). அதாவது 'தலைவர்' என்று அர்த்தம். ஆனால், அவரது சேனாபதிகள் அவரை எப்படி விளித்திருப்பார்கள்? அவரது நிஜப்பெயர் அடால்ஃப் ஷிக்கல்க்ரூபர். (Adolf Schicklgruber) ஆகும். ஹிட்லருக்கு என்ன பட்டப்பெயர் இட்டு அழைத்தார்களோ அடியேன் அறியேன். ஆனால் சிறிய அளவில், ஒரு துணுக்கு போன்ற துண்டு

மீசையை உதடுகளுக்கு மேலே வைத்துக்கொள்ளுவதற்கு'ஹிட்லர் மீசை' என்று பெயர் வந்துவிட்டது.

**தொப்பி சார்!**

வணிகத்துக்குப் பெயர்போன விருதுநகரில்தான் எனது முழு பள்ளிக்கூட வாசம் நடந்தது. அந்நாளில், பள்ளிக்காலங்களில் அடியேனுக்கு பாடம் புகட்டிய ஆசிரியர்களுக்கு மாணவர்கள் இட்ட பட்டப்பெயர்களை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். என்னையும் அறியாமல் சிரிப்புதான் வருகிறது.

விருதுநகரின் பேருந்து நிலையத்தை ஒட்டி, அதற்கு கிழக்கே இருந்த காமராசர் வித்தியாசாலையில்தான் நான் ஒன்னாம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அங்கு படித்தபோது, ஒன்னாம் வகுப்பு ஆசிரியர் ஜெயராஜ் திருச்செந்தூருக்குப்போய் மொட்டையடித்துக்கொண்டு பள்ளிக்கு வந்தார். தனது மொட்டைத் தலையை மறைக்க எம்.ஜி. ஆர் தொப்பியை அணிந்துகொண்டு வந்தார். அந்நாளில் எம். ஜி. ஆர் தொப்பி ரொம்ப பிரபலமானதாக இருந்தது. அதனால், என் அம்மா அவருக்கு இட்ட பெயர் 'தொப்பி சார்'. இவர் சில மாதங்கள்தான் அந்த எம். ஜி. ஆர் தொப்பியை அணிந்துகொண்டிருந்தார். எனினும், இவருக்கு அந்த "தொப்பி சார்"என்ற பெயரே நிலைத்துவிட்டது. இரண்டு, மூன்று, நான்காம் வகுப்பு ஆசிரியர்கள் மாணவர்களிடம் பட்டப்பெயர் வாங்கிக்கொள்ளாமல் தப்பித்துக் கொண்டதற்கு பெரிய காரணங்கள் எதுவும் இல்லை. இவர்கள் எல்லோருமே மாணவர்களிடம் கடுமையாக நடந்துகொண்டவர்கள் என்பதால், அவர்கள் பட்டப்பெயர்கள் இல்லாமல் தப்பித்தார்கள்.

**மூக்குப்பொடி**

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் நடராசன் சுத்தமான, கதர் சலவை வேட்டி, முழங்கால் வரை நீளும் முழுக்கை சட்டையில்தான் வகுப்புக்கு வருவார். எப்போதும் நெற்றியில் விபூதி அணிந்துகொண்டிருப்பார். குளித்துவிட்டு, குளிர்ந்த முகத்தோடு, காலையில் ஏழரை மணிக்கே பள்ளிக்கூடத்துக்கு வந்து வகுப்பறையின் வாசலில் அமர்ந்துகொண்டு, பக்தி ஸ்லோகங்களை சொல்லிக்கொண்டு ஜெபம் பண்ணிக்கொண்டிருப்பார். அவர் ஜெபம் பண்ணிக்கொண்டிருப்பதை நாங்கள் கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்போம். எங்களுக்கு அது வேடிக்கையாகத்தான் இருக்கும். அவரை எங்களுக்குத் தமிழும், ஆங்கிலமும் எடுக்கும்படி தலைமையாசிரியர் எட்வர்ட் ஜோ டேவிட் அலோசியஸ் பணித்திருந்தார். (எட்வர்ட் ஜோ டேவிட் அலோசியஸ் இங்கிலாந்துக்காரர் அல்ல. விருதுநகருக்கு வெளியே இருந்த அல்லம்பட்டி என்ற ஊர்க்காரர்தான்.) எனக்குத் தெரிந்து நடராசன் சார் பாடப்புத்தகங்களை முழுமையாக வாசித்து மாணாக்கர்களுக்கு விளக்கம் சொன்னதே இல்லை. ஒரு பாடத்துக்கான கேள்வி பதில்களைத் தயார் செய்துகொண்டு வந்து, அதை ஒருசில மாணவர்களை விட்டு எழுதிக்கொள்ளச் சொல்லுவார். அவர்கள் எழுதிவிட்டு, அதைப் பிற மானவர்களுக்குத் தர வேண்டும். இதுவே அவர் பாடம் நடத்திய லட்சணம்.

நடராசன் சார் சாப்பாடு சாப்பிட மறந்து விட்டாலும், மூக்குப்பொடி போட மறக்கவே மாட்டார். இருபது நிமிடங்களுக்கு ஒருமுறை அவரது மூக்கு பீரங்கிக்குள் வெடிமருந்தை திணித்துக்கொண்டே இருக்க வேண்டும். அவர் கையில் வைத்திருக்கும் கைக்குட்டை பழுப்பு நிறத்தில்தான் இருக்கும். மூக்குப்பொடியை மூக்குக்குள் திணித்துக்கொள்வது, பிறகு, கைக்குட்டையால் மூக்கை துடைத்துக்கொள்வது - இந்த இரண்டு காரியங்கள்தான் அவர் தனது வகுப்பறை நேரங்களில் மாறி, மாறிச் செய்துகொள்ளும் காரியம். நாள் முழுக்க அவர் செய்துவந்த இந்தத் திருப்பணிக்காகவே அவருக்கு

மாதா மாதம் சம்பளம் வழங்கப்பட்டு வந்தது எனக் கருதுகிறேன். அண்ணாவை விட மூக்குப்பொடி போட்ட ஒரே மனிதர் நடராசன் சார் தான் என்று எண்ணுகிறேன். அவரது பெயரை "மூக்குப்பொடி சார்" என்றே மாற்றி விட்டார்கள் என் மாணவச் சகோதரர்கள்.

ஆறாம் வகுப்பில் ஆங்கிலவழிக் கல்விக்கு 'மாற்றப்பட்டேன்.' நான் மாறவில்லை. என் ஆசிரியர்கள் மாற்றிவிட்டார்கள். ஊருக்கு வெளியே, மதுரை செல்லும் சாலையில் இருக்கும் க்ஷத்திரிய மேல்நிலைப் பள்ளியில்தான் ஆறாம் வகுப்பு படிக்கத் தொடங்கினேன். அங்கிருந்த ஆயிரத்து எண்ணூறு மாணவர்களையும் ஒரே திடலில் நிற்கவைப்பது சிரமம்தான். ஆனால் அங்கிருந்த மாணவமணிகள் படிக்கிறார்களோ, இல்லையோ, சேட்டை செய்வதில் வெகு சமர்த்தர்கள். பெரும்பாலும் வணிகம் செய்யும் அண்ணாச்சிகளின் பிள்ளைகளாக அவர்கள் இருந்தார்கள். பலரும் பள்ளி முடிந்த பிறகு, இரவில் சிறப்பு வகுப்புகளுக்கு (tuition) வந்தார்கள். அதை 'ரப்பாடம்' என்றுதான் நாங்கள் சொல்லுவோம். 'இரவுப்பாடம்'தான் 'ரப்பாடம்'என்று மருவியது.

### சஹாரா பாலைவனம்

எனது சக மாணவர்கள் சரஸ்வதி பூஜைக்கு பயபக்தியோடு சாமி கும்பிட்டார்கள். ஆனால் சரஸ்வதியின் பிரதிநிதிகளான ஆசிரியர்களுக்கு பட்டப் பெயரிட்டு மகிழ்ந்தார்கள். ஒன்பதாம் வகுப்பு ஆசிரியர் கிருபாநிதி என்பவர் திருநெல்வேலிக்காரர். அவருக்குப் பிடித்த உணவு இட்டிலி. அதனால், அவருக்கு "இட்டிலி" என்றே பட்டப்பெயர் தந்தார்கள். ராஜேந்திரன் என்ற பெயரில் நான்கு ஆசிரியர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒரு துறை. இதில் ஆர். ராஜேந்திரன் என்பவர் சரித்திரமும் பூகோளமும் எடுத்தவர். இந்நாளில் அந்தப் பாடங்களுக்கு "சமூகவியல்" என்று பெயர் மாற்றப் பட்டுள்ளது. விஷயம் ஒன்றுதான். அதே சிந்து சமவெளி நாகரீகம், அதே அசோகர், அதே வீர சிவாஜி, அதே ராபர்ட் க்ளைவ் என்று அதே ஆளுமைகள்தான். ஆர். ராஜேந்திரனுக்கு தலை வழுக்கையாய் இருந்தது. வழுக்கை என்றால் சுத்தமாக புளி போட்டுத் துலக்கிய வெங்கலப் பாத்திரம் போன்ற வழுக்கை. ஒரு மதிய வேளையில் அவர் சஹாரா பாலைவனத்தைப் பற்றிய பாடத்தை எடுத்துக்கொண்டிருந்தார். நீண்ட நேரம் அந்தப் பாலைவனத்தைப் பற்றி விளக்கிவிட்டு, அவர் ஒரு மாணவனைப் பார்த்து, "சஹாரா எங்க இருக்கு, சொல்லு!" என்று கேட்டார். மதிய வேளையில் உணவு உண்ட மயக்கத்தில் இருந்த அந்த மாணவன், ஆசிரியரை நோக்கி திருதிருவென விழித்தான். ராஜேந்திரனுக்கு கோபம் வந்துவிட்டது. உடனே, "சஹாரா எங்க இருக்குன்னு சொல்லு. என் முகத்தையே பாத்துக்கிட்டு இருக்க?! அது என்ன என் தலையிலயா இருக்கு?" என்று ஒரே போடாகப் போட்டார். அவருக்கோ தலை வழுக்கை. எனவே, அவரது பெயரை 'சஹாரா' என்று மாணவர்கள்


## புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு

**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

மாற்றிவிட்டனர். கே. ராஜேந்திரன் என்றொரு ஆசிரியர் இருந்தார். அவர் பார்வை குறைபாட்டைச் சரிசெய்ய சோடா கண்ணாடி அணிந்திருந்தார். அடிக்கடி மாணவர்களைப் பார்த்து, கண்களை உருட்டி முழிப்பார். அந்தச் சுழலும் விழிகளைக் கண்ணுற்ற மாணவர்கள் அவருக்கு "மைனா" என்று பெயர் சூட்டினர்.

## சோளத்தட்டை, பொம்மை

எங்களுக்குப் பாடம் எடுத்தவர்களில் அநேகர் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். இது பின்னாளில்தான் எனக்குத் தெரியவந்தது. 1960-களில் தமிழ்நாட்டின் பள்ளிகளில் ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. எனவே ஆசிரியப் பயிற்சி படித்து முடித்த அனைவருக்கும் வேலை கிடைத்தது. படித்து முடித்து வெளியே வந்தவர்கள் உடனே பள்ளிகளில் பணிக்கு அமர்த்தப்பட்டார்கள். அந்தக் காலகட்டத்தில் பணியமர்ந்த அதிர்ஷ்டசாலிகள் அநேகர்.

பத்தாம் வகுப்பில் எனக்குப் பாடம் எடுத்த ஒருவர் ஆறரை அடி உயரம் கொண்டவர். எப்போதும் கதர் ஆடைகளைத்தான் அணிவார். தினசரி மொடமொடவென விறைப்பான இஸ்திரி போட்ட சட்டையும், கால் சட்டையும் அணிந்து கொண்டுதான் பள்ளிக்கு வருவார். நெற்றியில் சின்ன சந்தனப்பொட்டு, அதன்மேல் வைக்கப்பட்ட குங்குமப் பொட்டு. அவர் இருக்கும் வகுப்புகளில் கரும்பலகையின் மேல்புறத்தைத் தொட்டு எழுதக்கூடிய அளவுக்கு உயரமானவர். அவரது மெல்லிய உடலை அவரது உடை மறைத்துக்கொண்டிருந்தது. தினமும் சைக்கிளில்தான் வேலைக்கு வருவார். வரும்போது, தலையை முன்புறமாக வளைத்துக்கொண்டு, பெடலை மிதித்துக்கொண்டு பள்ளிக்குள் நுழைவார். அது பார்க்க ஆங்கிலத்தில் உள்ள "C" என்ற எழுத்தைப்போல இருக்கும். காலைநேரக் கூட்டுப் பிரார்த்தனைகளில் அழகிய ஆங்கிலத்தில் சொற்பொழிவு செய்வார். பத்தாம் வகுப்பில், இரவுநேர வகுப்புகளில், எங்களுக்கு இனிய ஆங்கிலத்தில் இயற்பியல் பாடங்களை அவர் எடுத்திருக்கிறார். சட்டை, கால் சட்டை, அவரது உடல் என்று எல்லாவற்றையும் சேர்த்து ஒரு தராசில் எடை போட்டால், அநேகமாக அவரது எடை இருபது கிலோதான் தேறும். ஒடிசலான அவரது உடலைப் பார்த்த, மாணாக்கர்கள், "சோளத்தட்டை" என்றும் "பொம்மை" என்றும் இரண்டு பட்டப்பெயர்களை அவருக்குத் தந்தனர். எங்கள் பள்ளியில் இரண்டு பட்டப்பெயர்களுடன் உலவிய ஒரே பெருமகன் அவர் ஒருவர்தான். அன்னாரது பெயர் என்னவென்று எனக்கும் தெரியாது. பள்ளியில் உள்ள மாணவர் ஒருவருக்கும் தெரியாது. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு பள்ளி சுற்றறிக்கையில் "ஆதி நாராயண கேசவ ரெட்டி" என்று எழுதியிருப்பது கண்டு நான் அன்னாரின் பெயரை அறிந்துகொண்டேன்.

## ஒரே அறை!

எங்கள் பள்ளியின் தென்புறத்தில் பொறியியல் பிரிவுக்கான கட்டிடம் இருந்தது. பகல் முழுக்க இரும்பு இயந்திரங்கள் சுழன்றபடி இருப்பதால் அந்த இடத்திலிருந்து பலத்த சத்தம் எழுந்தபடி இருக்கும். அதன் பின்புறம் தட்டச்சு வகுப்பறை இருந்தது. அதன் பொறுப்பாசிரியர் தாமஸ் ஹென்றி என்பவர். அவர் எடுக்க வேண்டிய வகுப்புகள் எல்லாமே அந்த ஒரே வகுப்பறைக்குள்தான் இருந்தது. அதனால் காலையில் அவர் அந்த காற்றோட்டமான வகுப்பறைக்குள் வந்து, மாலை வரை அங்கேயே இருந்துவிட்டு, மாலையில் அறையைப் பூட்டிவிட்டு, தலைமையாசிரியரின் அறையில் சாவியை வைத்துவிட்டுப் போவார். கிட்டத்தட்ட தனது பணி ஓய்வு அடையும் கடைசி நாள் வரை அதே பள்ளி, அதே பணி, அதே

வகுப்பு, அதே காற்றோட்டமான ஜன்னல்கள் என்று இருந்த தாமஸ் ஹென்றிக்கு இன்னொரு பணியும் தரப்பட்டிருந்தது. அவர் பள்ளியின் "ஜூனியர் ரெட் க்ராஸ்"(JRC) அணியின் பொறுப்பாளராக இருந்தார். செஞ்சிலுவைச் சங்கம் என்பது மதச்சார்பற்ற அமைப்பு என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் அது ஒரு கிறித்தவ அமைப்பு என்று தாமஸ் ஹென்றியைப் பார்த்துத்தான் தெரிந்துகொண்டேன். தனது செஞ்சிலுவைச் சங்க அணியில் கிறித்தவ மாணவர்கள் மட்டும் இருக்கும்படி தாமஸ் ஹென்றி பார்த்துக்கொள்வார். என்ன ஒரு மத அனுஷ்டானமோ, எப்போதும் தாடி, மீசை என்று எதுவுமே இல்லாமல் முகத்தை மழுமழுவென வைத்துக்கொள்வார். அவரது கன்னங்களில் நாம் முகம் பார்த்து தலைசீவிக் கொள்ளலாம். அந்த அளவுக்கு நல்ல நிறம் அவருக்கு. இந்தக் காரணத்தால் அவருக்கு "மல்டி" என்ற பட்டத்தை வழங்கினார்கள் எங்கள் மாணவமணிகள். அந்த "மல்டி" என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று எனக்கு இன்றுவரை தெரியாது.

## தேவ மைந்தன் தேவகளஞ்சியம்

அற்றை நாளில் நான் படித்த காலங்களில் எனக்கு ஐந்து ஆண்டுகள் வரை தலைமையாசிரியராக இருந்தவர் நாகர்கோவில் வட்டாரத்து மனிதரான சி.எஸ். ஐ திருச்சபையைச் சேர்ந்த ஆங்கிலிகன் கிறித்தவரான தேவகளஞ்சியம் என்பவர். எனக்கு அந்நாளில் ஆங்கிலப்பாடம் நடத்தி, கல்வியில் உறுதியான அஸ்திவாரம் இட்ட அற்புதமான ஆசிரியர், என் அபிமானத்துக்குரிய தேவகளஞ்சியம் ஐயா அவர்கள். நான் இன்று உரையாடும் ஆங்கில மொழியை ஆழமாகப் போதித்த ஆசான் அவர்தான் என்பேன். அவருக்கு மாநிறச் சருமம். எப்போதும் வெள்ளை நிற முழுக்கைச்சட்டை அணிந்துகொண்டுதான் பள்ளிக்கு வருவார். அவர் வைத்திருந்த "லேம்ப்ரெட்டா"ஸ்கூட்டர் என்பது அவரது அடையாளங்களில் ஒன்றாக இருந்தது. மதியம் உணவு இடைவேளையில் அந்த ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்புவார். இத்தாலியில் தயாரிக்கப்பட்ட அந்த ஸ்கூட்டரை இந்நாளில் நான் சாலையில் ஓட்டிக்கொண்டு போனால் நான் ஒரு த்ரேதா யுகத்து ஆசாமி என்றுதான் பார்ப்பவர்கள் நினைப்பார்கள். இந்த "லேம்ப்ரெட்டா"ஸ்கூட்டரில்தான் தேவகளஞ்சியம் பள்ளிக்கு வருவார். வெள்ளைச் சட்டையும், கருப்பு நிற கால்சட்டையும், கழுத்து டையும், அவரை நேர்த்தியான ஆங்கில கனவான் போலக் காட்டும். அவரது துணைவியார் எஸ்தர் புஷ்பவதி நகருக்குள், பேருந்து நிலையத்துக்கு அருகே இருந்த திருவள்ளுவர் வித்தியாசாலையில் ஆசிரியையாகப் பணி செய்துகொண்டிருந்தார். தேவகளஞ்சியம் அவர்கள் ஆசிரியப் பணியோடு 'ஆத்தும ஆதாயப்பணி'யும் செய்து வந்தார். "ஆத்தும ஆதாயப்பணி" என்பது வேறு ஒன்றுமல்ல. அப்பாவி இந்துக்களை ஏதாவது சொல்லி, சலுகைகளைத் தந்து, மயக்கி, கிறித்தவ சமயத்துக்கு மாற்றுவதுதான். பள்ளியில் தனக்கு கீழே வேலை செய்த +2 வகுப்பின் தாவரவியல் ஆசிரியர் பூமிராஜுவை பதவி நிரந்தரம் செய்வதாகச் சொல்லி, தூண்டில் வீசி, அவரைக் கிறித்தவ மதத்துக்கு மாற்றிய திருப்பணியையும் தேவகளஞ்சியம் செய்தார். இயேசு சுவாமியின் ஞானஸ்நானம் தந்து அவரை பால் பூமிராஜூவாக மாற்றினார். வாரம் தவறாமல் ஷபாத் எனப்படும் ஓய்வுநாள் ஆராதனை அன்று விருதுநகரிலிருந்து மதுரை செல்லும் சாலையில் இருக்கும் தூய யோவான் திருச்சபையில் போதகரான ஆயர் ஆஜராவதற்கு முன்பே தேவகளஞ்சியம் ஆஜராகி விடுவார்.

தான் "ஆத்தும ஆதாயம்"செய்த நபர்கள் ஓய்வுநாள் அன்று திருச்சபைக்கு வந்திருக்கிறார்களா என்று விசுவாசிகளின் கூட்டத்தில் ஒரு பார்வையைச் செலுத்துவார்.

திருச்சபையிலும், பள்ளியிலும், சொந்த வாழ்விலும் தான் ஒரு ஆங்கிலேயர் என்ற மனப்பிரமையில் எப்போதும் இருந்த தேவகளஞ்சியம் வாரத்துக்கு இண்டு நாட்களில், மேல்கோட்டு அணிந்துகொண்டு பள்ளிக்கு வருவார். அது ஓர் அலங்காரம்தான். எங்கள் மாவட்டத்திலேயே கொளுத்துகின்ற கத்திரி வெயிலில், மேல்கோட்டு அணிந்துகொண்டு பணிக்கு வந்த ஒரே தமிழர் அவராகத்தான் இருந்திருப்பார். நெருப்பாய்ப் பொசுக்குகின்ற, வெள்ளை வெயில் அடிக்கும் தெற்கத்தி மாவட்டத்தில் இப்படி ஒரு பிரகஸ்பதி கோட்டு அணிந்துகொண்டு வருகிறாரே என்று வியந்த என்னருமை மாணவக் கண்மணிகள் அவருக்கு "கோட்டு"என்ற சிறப்புப் பட்டத்தைத் தந்து மகிழ்ந்தனர்.

### கடலை மிட்டாய் மாணிக்கவாசகம்

அவ்வண்ணமே, இராஜபாளையம் அருகே இருக்கும் தளவாய்புரத்தைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர் மாணிக்கவாசகம் அருமையான, இலக்கணச் சுத்தமான ஆங்கிலத்தில் உரையாடுவார். ஆங்கில இலக்கணப்புலி அவர். அவருக்குக் காக்கா வலிப்பு வியாதியும் இருந்தது. மாணிக்கவாசகத்தை "ஆத்தும ஆதாயம்" செய்த தேவகளஞ்சியம் அவரை, 'ஜோஷுவா பர்னபாஸ் மாணிக்கவாசக'மாக்கி விட்டார். சைவ சமயக் குரவர்களில் ஒருவராகிய மாணிக்கவாசகம் இந்த பூலோகத்து மாணிக்கவாசகம் மதம் மாறும் பரிதாபக் காட்சியை சிவலோகத்தில் இருந்தபடியே கண்ணுற்று, கண்டிப்பாக மனம் வருந்தியிருப்பார். கற்கும் அனைவரும் உருகும் திருவாசகத்தை இயற்றிய ஒருவர் எந்த அளவுக்கு மனம் நொந்திருப்பார்!?

இந்து மதத்தை விட்டுவிட்டு, மதம் மாறுபவர்கள் தங்கள் பழைய இந்துப்பெயர்களை உதறித்தள்ளி விட்டு, மதம் மாறிச் செல்லட்டும். ஆசிரியராய் இருக்கும் என் நண்பர் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவர். அவரது பெயர் சாமுவேல் ராமசாமி. அவர் இந்துவாக இருந்தபோது ராமசாமி. ஞானஸ்நானம் பெற்ற பிறகு சாமுவேல் ராமசாமி. இதென்ன வினோதம்!? மதுரை சி.எஸ்.ஐ திருமண்டிலத்தில் உள்ள சினாட் குழுவின் உறுப்பினராக இருந்த ஒருவரின் பெயர் 'மைக்கேல் ராமர்'. இதென்ன கூத்து?! சூடான ஐஸ்க்ரீம், குளிர்ந்த வெந்நீர் என்பது போல இது பெரும் முரண்பாடு!

சரி, தேவகளஞ்சியத்தின் விஷயத்துக்கு வருவோம். இன்னும் சில ஆண்டுகள், தேவகளஞ்சியம் எங்கள் மாவட்டத்தில் வேலையில் நீடித்திருந்தால், அநேகமாக வீதியோடு போகும் ஜனங்கள் அனைவருக்கும் ஜான், பீட்டர், ப்ரான்சிஸ், லூக்கா, நோவா, டேவிட், சாலமன், ஜேக்கப், ஜோசப், எஸ்தர், மரியாள், ரூத், அன்னா, ராபர்ட், கென்னடி என்று பெயர்களை மாற்றி, அந்த மாவட்டம் முழுக்க கிறித்தவப் பெயர்களுடன் அனைவரும் நடமாடிக் கொண்டிருப்பார்கள். நல்ல வேளை, அப்படி நடக்கவில்லை. மாணிக்கவாசகத்துக்கு மாணாக்கர்கள் தந்த செல்லமான பட்டப்பெயர் "கடலை மிட்டாய்". அது ஏன் அப்படிப் பெயர் தந்தார்கள் என்று இந்த இடத்தில், எழுத்தால் எழுத முடியாத நிலையில் இருக்கிறேன்.

நான் ஒன்பதாம் வகுப்பில் படித்து வந்தபோது, தேவகளஞ்சியத்துக்கு எதிராக ஒரு பாலியல் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. மாணவர்கள் வீதிக்கு வந்து ஊருக்குள் ஊர்வலம் போனபடி, 'கோட்டு' அணிந்த ப்ராட்டஸ்டண்ட் தலைமையாசிரியருக்கு எதிராக அசிங்கமான கோஷங்களை எழுப்பினார்கள். அத்தோடு, அவரது புகழ் காணாமல் போனது. பள்ளி நிர்வாகம் எத்தனையோ சொல்லி, அவரைப் பணியில் நீடிக்கச் சொன்னது. ஆனால், 'தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்' கொண்டு பழி நாணி, பள்ளியை விட்டு அடுத்த ஆண்டே தேவகளஞ்சியம் விலகிவிட்டார். எங்கள்

க்ஷத்திரிய வித்தியாசாலையின் கலங்கரை விளக்கம் போன்று இருந்த 'கோட்டு' அவர்கள் பணியை விட்டு விலகியது பள்ளிக்கும் எங்களுக்கும் துரதிருஷ்டம் என்பேன். நான் இன்று கற்றுள்ள ஆங்கிலம் எனது ஆசான் தேவகளஞ்சியம் ஐயா தந்தது என்பதில் எனக்குப் பெருமை.

உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களான சுப்பையா, நாகேந்திரன், ராமநாதன், ஜெயச்சந்திரன், மாரியப்பன் ஆகியோருக்குப் பட்டப்பெயர்கள் எதுவும் கிடையாது. அப்படி யாராவது அவர்களுக்குப் பட்டப்பெயர் தந்திருந்தால் அவர்கள் யாரென்று கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு உச்சி வெயிலில் முழங்கால்படி இடும்படியான தண்டனை தரப்பட்டிருக்கும்.

**கர்ம வினை**

அற்றை நாளில், எங்களுக்குப் பாடம் போதித்த ஆசிரியர்களுக்கு நாங்கள் எங்கள் இஷ்டப்படி பெயரிட்டது எங்களுக்கு குதூகலமாக இருந்தது. ஆனால் முன்வினை, பின்வினை என்ற கோட்பாடுகள் நமது தத்துவ இயலில் உண்டு. இதைப் புரிந்துகொண்டால், நீங்கள் இந்தியத் தத்துவ இயலை எளிதாகப் புரிந்துகொள்ளலாம். 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆதி சங்கரர் இதைத்தான் கர்ம வினை என்று சொல்கிறார். நாம் செய்த கர்மா, நம்மைப் பின்தொடர்ந்து நிழல் போலவே வரும் என்கிறார் அவர். "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்று சிலப்பதிகாரம் கூறுவதும் இதைப்பற்றித்தான். இதே கருத்தியலை நகல் செய்துதான், சர் ஐசக் நியூட்டன் தனது மூன்றாம் விதியாக. "ஒவ்வொரு வினைக்கும், அதற்கு சமமாகவும், நேர் எதிராகவும் ஒரு வினை இருக்கும்" என்று மொழிந்தார். (For every action, there is an equal and opposite reaction) பள்ளிக்காலத்தில் நான் அல்லது நாங்கள் செய்த வினைகளே எங்களுக்கு எதிராகப் பிற்காலத்தில் வந்து சேர்ந்தது.

**அரபு நாட்டில் பணி**

விதி வசத்தால் அல்ல, கற்ற கல்வியால் வளைகுடா நாடு ஒன்றில் இருக்கும் அபுதாபி நகர் அருகே உள்ள அல் அய்ன் என்ற அழகிய பெருநகரில் உள்ள பள்ளியில், ஆங்கில ஆசிரியராகப் பணி செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தப் பள்ளியின் பெயர் "தாருல் ஹுதா இஸ்லாமிக் ஸ்கூல்" என்பதாகும். அங்கு ஆறு ஆண்டுகள் பணி செய்தேன். அந்தப் பள்ளியை நடத்தி வருபவர்கள் கேரளாவின் மாப்பிள்ளா முஸ்லீம்கள். நமது மத்திய அரசின் சி. பி. எஸ்.இ கல்வித் திட்டத்தின்படி அமைந்த அந்த நிறுவனத்தில், +2 மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடம் நடத்தி மாணவர்களை இம்சை செய்தேன். நான் பேசும் மொழி தவறானதாக இருந்தால் என் மாணவர்கள் எனது நாட்டைப் பற்றி பரிகாசம் செய்வார்களே என்றொரு அச்சம் எனக்கு இருந்தது. ஏதோ ஒட்டுமொத்த இந்தியாவின் பிரதிநிதி நான்தான் என்று எண்ணிக்கொண்டேன். இதனால் அனுதினமும் மிகவும் கவனமாக இலக்கணப் பிழைகளே இல்லாமல் பாடம் நடத்தினேன். பல நாட்டு மாணவர்களும் அங்கு படித்ததால் அவர்களுக்கு முன்னே ஆங்கிலத்தை நேர்த்தியாகப் பேச வேண்டியிருந்தது. வகுப்பில் எப்போதும் வேகமாக ஆங்கிலத்தில் உரையாற்றுவேன் என்பதை நான் இங்கு சொல்லிக்கொள்வதால் நான் சுய தம்பட்டம் அடிக்கிறேன் என்று நீங்கள் எண்ணுவீர்கள். வகுப்பறையில் நான் ஆற்றிய அதிவிரைவான ஆங்கில விரிவுரையைக் கண்ட மாணவிகள் எனக்கு "டைப்ரைட்டர்" என்று பட்டப் பெயரிட்டு மகிழ்ந்தனர். என்னோடு பணியாற்றிய ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் மலையாளிகள். மலையாளிகள் நடத்தும் நிறுவனங்களில் தங்கள் மாநிலத்தைச்சேர்ந்தவர்கள் அதிகம் பேர் பணியில் இருக்கும்படி பார்த்துக்கொள்வார்கள்.

என்னோடு பணி புரிந்த சமூக அறிவியல்



ஆசிரியர் நயீப் தாவூத் என்பவர், வராந்தாவில் நடக்கும்போது, விறைப்பாக நடந்துபோவார். அதனால் பாகிஸ்தான் மாணவர்கள் அவருக்கு "ஸ்கூட்டர்"என்று பெயரிட்டனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் புனத்தில் சையது அஜ்மலுக்கு ரோபாட் (robot) என்று பட்டப்பெயர். அவர் இயந்திரத்தனமாக நடந்துபோவதால் அப்படிப் பெயர். இந்த சையது அஜ்மலுக்கு மேலே இருந்த பள்ளி முதல்வர் அப்துல் சலாம் என்பவருக்குத் தலையோ வழுக்கைத்தலை. ஓர் இளநீர்க்காய் போல அவரது தலை சுத்தமாக இருந்தது. தனது அறையில் அவர் ஆசிரியர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடத்தினால், அவரது தலைக்கு மேலே இருக்கும் விளக்கின் ஒளி அவரது வழுக்கைத்தலையின் மேல் விழுந்து அந்த ஒளி வெகு பிரகாசமாய்ப் பிரதிபலிக்கும். இதைக் கண்ட சிலர், அவருக்கு "கஷண்டி" என்று பெயரிட்டனர். "கஷண்டி" என்றால் மலையாளத்தில் "வழுக்கைத் தலையர்" என்று அர்த்தம். நல்லவேளை, அங்கு ஆட்சி செய்த ஷேக் சுல்தான்களுக்கு எனது அருமை மாணவர்கள் பட்டப் பெயரிடவில்லை. ஐக்கிய அரபு எமிரேட்டுக் குடியரசின் ஷேக்குகளை எங்கள் மாணாக்கர்கள் ஒருபோதும் கண்டதில்லை என்பதுதான் அதற்குக் காரணம். நாங்களும் கண்டதில்லை.

என்னுடன் முனீர் சலீல் என்ற சக ஆங்கில ஆசிரியர் இருந்தார். அவருக்கு கறுப்பான முகம். இந்த மேற்புறத் தோலின் வெள்ளை-கருப்பு நிற பேதம்தான் இன பேதத்துக்கு அடிப்படை போலும். இந்த பேதம் உலகெங்கும் நிலவி, சர்வதேச அரசியல் கொள்கைகளை வகுக்கிறது என்று கருதுகிறேன். முனீர் சலீலின் சுருக்கங்கள் நிறைந்த, கருத்த முகத்தைக் கண்ட எமது மாணவர்கள், அவருக்குக் "கொசு" என்று ஈவு இரக்கமில்லாமல் பட்டம் தந்துவிட்டனர். ஒருவேளை நான் கொஞ்சம் விசாரித்திருந்தால் மூட்டைப்பூச்சி, கரப்பான் பூச்சி, வெட்டுக்கிளி, ஓணான், தட்டாம்பூச்சி, தவளை, பாச்சா, பல்லி என்றெல்லாம் கூட என்னோடு பணி செய்த ஆசிரியப் பெருமக்களுக்குப் பட்டப்பெயர்கள் இடப்பட்டிருப்பதை அறிந்துகொண்டிருப்பேன். ஆனால், நான் அவற்றைப் பொருட்படுத்தவில்லை, சாக்ரடீஸ், ப்ளாட்டோ, அரிஸ்டாட்டில் போலவே.

---

★ *பொ.ச.மு – பொது சகாப்தத்துக்கு முற்பட்ட (BCE)*

rameshzillion@hotmail.com ■



கவிதை

அன்றிலன்

தவறவிட்டவொரு
பெருங்கருணையின் வாசத்தை
இலையெங்கும்
பரப்பி வைத்திருக்கிறாய்.
கரும்பலகையில் எழுதிய
யாவற்றையும் அழித்திட நினைக்கும்
தண்ணீர்இலையைப்போல்
இரைந்து கிடக்கும் இருளைச்
செரிக்குமொரு நொதிப்பான்
தொலைந்துவிட்டதாக
புகார்கள் காதுகளை நிறைக்கின்றன.
இன்னும் முற்றுப்பெறாவொரு
நிகழ்வின்  ஊடாக
எதிர்பார்ப்பின்
இறகுகளை விரித்துத்
தேடுதலின் மீது
அமர்கிற போதெல்லாம்
வெள்ளை யானைக்கூட்டத்தின் புறப்பாடு.
ஒவ்வொரு விடியலுக்குப்பின்னும்
அரவமொன்று படுத்துறங்கும்
தாழம்பூவில்தான்
எவ்வளவு வாசம்.

அலை மோதி மோதி
கரையைப் பற்றி இழுப்பது
இரவறியும்
பகலும் அறியும்.

கரைக்கு எந்த எல்லைவரை
போகவேண்டுமென
ஒவ்வொரு அலையும்
அறிந்து வைத்திருக்கிறது.
இங்கு எல்லாவற்றிற்கும்
ஒரு எல்லையிருக்கிறது அல்லவா.

சிறு பாதையென எண்ணிய
யாவற்றையும் குடையென
விரிக்கின்றன வியர்வைத் துளிகள்.
இரண்டு உப்புநீரும்
ஏதோவொரு செய்தியோடுதான்
பூத்திருக்கின்றன.

பாரம் பற்றிக்
கவலையேதுமின்றி
பாதையைத் தேர்வு செய்தவனே
ஓர் ஒளித்திரளையும்
அழைத்தபடி நடக்கின்றான்.

எப்படியிருந்தால் என்ன
ஆற்று நீருக்குத் தெரியும்தானே
தான் கடல் போகும் வழி.

■

andrilan@gmail.com ■





சிறுகதை
வாசுதேவன் அருணாசலம்

# ஏன் இப்படிப் பண்ணினே!

60 ... 65...70 ...75 ...80... ராயல் என்ஃபீல்டு 350 சிசி தண்டர் பேர்ட் மெரைன் ப்ளூ இருசக்கர வாகனத்தில் விரைந்துகொண்டிருந்தான் சந்துரு. “வேண்டாம்! சொன்னாக்கேளு! விடு போகிறான்!” என்றாள் வாகனத்தின் பின்புறம் ஒரு கால் ஒரு பக்கம் என்று அமர்ந்திருந்த அவனது துணைவி இந்து. அவளுடைய வார்த்தைகள் அவன் காதில் விழுந்தது என்றாலும், அவை அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. வளைந்தும் நெளிந்தும் சுழித்தும் சென்று, தனக்குமுன் ஓர் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஓர் இளைஞனை நெருங்கினான். மிக அருகில் அவனுடைய வாகனத்திற்கு இணையாகச் சென்றுகொண்டே தன்னுடைய இடதுகையை நீட்டி அவனுடைய கவனத்தைத் தன்பக்கம் ஈர்த்து ஓரமாக வாகனத்தை நிறுத்தும்படி சைகை செய்தான். அந்த இளைஞனும் ஏன் என்று ஒன்றும் புரியாதவனாய் வாகனத்தின் வேகத்தைக் குறைத்துச் சாலையின் ஓரத்தில் நிறுத்தினான். சந்துரு தனது வாகனத்தை அவனுடைய வாகனத்திற்கு குறுக்கே நிறுத்தினான். சந்துருவும் இந்துவும் கீழே இறங்கினார்கள். “உனக்கென்ன அறிவில்லையா?” என்றான். சந்துருவின் குரல் சற்று ஓங்கிதான் இருந்தது. இந்த விசயத்தில் அவனைக் கட்டுப்படுத்த முடியாது என்பது இந்துவிற்கு நன்றாகவே தெரியும் என்பதால் அவள் எதுவும் பேசாமல் நடப்பதை மட்டும் வேடிக்கைப் பார்க்க அங்கே தற்செயலாக வந்தவள்போல் கவனிக்கத் தொடங்கினாள்.“என்ன சொல்றீங்க? ஏன் இப்படிக் கேக்கறீங்க?” என்று சற்று அதிர்ந்துபோனவனாய்த்தான் அந்த இளைஞன் கேட்டான். “அந்தக் குட்டி நாய் குறுக்கே வர்றதைப் பாத்துக்கிட்டே ஸ்பீடைக் குறைக்காம போற! ஜஸ்ட்... டு மிஸ்! அடிபட்டு செத்திருக்கும்! அப்படி வேமா போயி என்னத்தடா புடுங்கப்போற?” என்று காட்டமாகவே கேட்டான். அந்த இளைஞன் சந்துருவை விட வயதில் குறைந்தவன் என்பதாலோ அல்லது தான் செய்தது தவறு என்ற குற்ற உணர்வு அவனுக்குள்ளே ஏற்கெனவே இருந்ததாலோ என்னவோ எதுவும் பேசாமல் நின்றான். இருந்தாலும் தன்பக்கம் தவறில்லை என்று நிரூபிக்கவேண்டும் என்று அவன் நினைத்தானோ என்னவோ, “பாத்துத்தானுங்க வந்தேன்”என்றான். “என்னத்தப் பாத்துக் கிழிச்ச!” என்றான் சந்துரு. “அதுதான் தப்பிச்சிருச்சுல!” என்றான் அந்த இளைஞன்.

அந்த வார்த்தைகள் வந்து விழும்முன் சந்துருவின் இடதுகை அந்த இளைஞனின் இடது கன்னத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. சரியான நேரத்தில் தடுத்து நிறுத்தினாள் இந்து. "விடு! போவோம்! வண்டியை எடு!" என்று சந்துருவை இழுத்தாள். அந்த இளைஞனை முறைத்துக்கொண்டே குறுக்கே நிறுத்திய தனது இருசக்கர வாகனத்தை எடுத்தான். அவனும் இந்துவும் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர். அந்த இளைஞனும் அவனுடைய வாகனத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் பின்னாலேயே மெதுவாக ஓட்டிக்கொண்டு வந்தான். தனது வாகனத்தின் வலதுபுறக் கண்ணாடியில் மெதுவாக தன் பின்னால் வந்துகொண்டிருந்த அந்த இளைஞனை அவ்வப்போது பார்த்துக்கொண்டே பயணித்தான் சந்துரு.

***

கால்நடை மருத்துவமனையிலிருந்து சந்துருவுக்கு கைபேசி அழைப்பு வந்தது. யாரென்று பார்த்தான். தூய்மைக்காவலர் சிவகாமி அழைத்துக்கொண்டிருந்தார். அன்று சந்துரு மருத்துவமனைக்குச் செல்லவில்லை. தற்செயல் விடுப்பிலிருந்தான். இந்துவிற்கு அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் எடுக்க அவளை அழைத்துச்செல்ல வேண்டும் என்பதுதான் விடுப்பிற்கான காரணம். சற்றுத் தயக்கத்துடனேயே கைபேசியின் பதில் பொத்தானை அழுத்தி, "சொல்லுங்க!" என்றான் சந்துரு. "அய்யா, நீங்க இன்னைக்கு லீவுனு சொன்னாங்க. இங்கே இருக்கீங்களா? அல்லது வெளியூருங்களா?" என்றாள் சிவகாமி. இந்தக் கேள்வியின் தன்மையிலேயே ஏதோ மிகவும் முக்கியமான ஒன்று என்பதை சந்துருவால் யூகிக்க முடிந்தது. "சும்மா, சொல்லுங்க!" என்றான் சந்துரு. "இல்லைங்க! அந்த வெள்ள நாய் காருல அடிபட்டு, இழுத்துக்கிட்டேபோயி... தோட்டத்துல படுத்திருக்குங்க! வாட்ச்மேன் உங்களுக்குப் போன் பண்ணி, சொல்லச் சொன்னாருங்க!" என்றாள் சிவகாமி. சந்துருவிற்கு படபடப்பு ஆரம்பித்தது. "சரி வர்றேன்" என்று சொல்லி, கைபேசியைத் துண்டித்துவிட்டு, ஸ்கேன் எடுக்கப் போவதற்காகத் தயாராகிக்கொண்டிருந்த இந்துவிடம் சிவகாமி சொன்னதைச் சொன்னான். "போய் என்னனு பாரு. ஸ்கேன் இன்னொரு நாள் பாத்துக்கலாம்" என்று சந்துருவை அனுப்பி வைத்தாள் இந்து. வீட்டிற்கும் மருத்துவமனைக்கும் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவுதான். சந்துரு கிளம்பினான்.

***

சந்துரு தனது முப்பத்தியோராவது வயதில் உடுமலை அரசு கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவராக வந்தான். சுமார் எட்டு வருடங்களாக இங்கேயே பணியாற்றி வருகிறான். தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகாவிலுள்ள கோம்பைதான் சொந்த ஊர். படித்ததெல்லாம் சென்னை. இருபத்து ஏழாம் வயதில் காதல் திருமணம். கோம்பை அருகே போடிநாயக்கனூர்தான் இந்துவின் சொந்தஊர். இரண்டு பெண் குழந்தைகள். ராஜி ஏழாம் வகுப்பு. சுஜி ஐந்தாம் வகுப்பு. இருவரும் உடுமலையில் ஒரே பள்ளியில் பயின்றுவருகிறார்கள். இந்துவிற்கு நாய்கள் என்றால் பைத்தியம். சந்துருவிற்கு நாய்கள் என்றால் வைத்தியம். எந்த நாயாக இருந்தாலும் சரி! தெருவில் அலையும் நாயாக இருந்தாலும் சரி! வளர்ப்பு நாயாக இருந்தாலும் சரி. மருத்துவ உதவி தேவைப்பட்டால் எதைப் பற்றியும் யோசிக்கவே மாட்டான். நேரம், பொருள் என எதையும் இழக்க யோசிக்க மாட்டான். சாக்கடையில் உழன்று தாங்க முடியாத நாற்றம் என்றாலும் சகித்துக்கொள்வதற்கான மனோபாவத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

'பார்வோ' என்ற நோய் தாக்கி அதனால் நாய்கள் வெளித்தள்ளும் கறுப்புநிற மலத்தின் நாற்றம் யாரையும் எளிதாக வாந்தியெடுக்க வைத்துவிடும். குறைந்தபட்சம் குமட்டலாவது வந்துவிடும். அந்த நாற்றத்தையும் தன் அனுபவத்தால், தன் இரக்கக் குணத்தால் வென்று, சில நேரங்களில் அதுபோன்ற நாய்களின் மலத்துவாரம், வால், கால்கள் அனைத்தையும் எந்தவித முகச்சுழிப்புமின்றி சுத்தம் செய்வான். இரண்டு மாதக் குட்டிகளுக்கு கூட மெல்லிய நரம்புகளை இலகுவாகத் தேடித் தேவையான திரவ மருந்துகளைச் செலுத்தி காப்பாற்றிவிடுவான். விலங்குகளின்பால் இருந்த அன்புதான் அவனை இந்துவோடு சேர்த்தது எனலாம். எந்த ஒரு விலங்கின் உயிரும் ஒரு மனித உயிருக்கு எந்தவிதத்திலும் குறைந்ததில்லை என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டவன். "விலங்குகளின் இடத்தில்தான் மனிதர்கள் வாழ்கின்றார்களே தவிர, மனிதர்களின் இடத்தில் விலங்குகள் வாழவில்லை" என்பதைக் கொள்கையாகவே கொண்டவன். தன்னால் முடிந்தவரை இதை அனைவரிடத்திலும் அழுத்தமாகவே சொல்லுவான்.

மூன்று வருடங்களுக்கு முன்பு மருத்துவனையின் நுழைவாயிலில் சற்று அகன்ற சாக்கடையின்மீது விசாலமாக அமைக்கப்பட்டிருந்த பாலத்தின் அடியில் கண்டெடுக்கப்பட்ட மூன்று வாரப் பெண் குட்டிதான் அந்த வெள்ளை நாய். பாலத்தின் அருகில் விடப்பட்டிருந்த அந்தக் குட்டி தவறி சாக்கடையில் விழுந்திருந்தது. இங்கு உடுமலையில் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஓர் அற்புதமான பழக்கம் உண்டு. பெண்நாய் வளர்ப்பவர்கள் அதனுடைய வேட்கைக் காலத்தை அறிந்து அதனைத் தனிமைப்படுத்தி, சரியாகக் கவனிக்க மாட்டார்கள். அது போடும் குட்டிகளில் ஆண் குட்டிகளை மட்டும் விற்று, பணமாக்கிவிட்டு, பெண்குட்டிகளைக் கண் முழித்தபின்போ அல்லது அதற்கு முன்போ (இருக்கும் இரக்கத்தைப் பொறுத்து) ஒரு சிமெண்ட் சாக்குப்பையில் போட்டு ஊருக்கு அப்பால் யாரும் ரோட்டில் இல்லாத சமயம் பார்த்து ஏதாவது ஒரு குழிக்குள் போட்டுவிட்டு நிம்மதியாகப் போய்விடுவார்கள். சந்துருவின் உட்சபட்ச கோபத்தைக் கிளறும் ஒரே செயல் இதுதான். தெருவில் நாய்கள் அலைவதை, சாலையில் அடிபட்டு இறக்கும் அவலங்களைத் தடுக்க வழிகளே இல்லையா என்ற ஆதங்கம் சிலநேரங்களில் அவனை மனித இனத்தையே வெறுக்கும் அளவிற்கு மாற்றும். அன்றும் யாரோ அந்த வெள்ளை நாயை அங்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். தனது இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு வருவதற்குப் பிரதான சாலையிலிருந்து திரும்பும்போது அதைப் பார்த்துவிட்டான். உள்ளே வந்து வாகனத்தை நிறுத்திவிட்டு, பகல்காவலர் சாமிக்கண்ணுவிடம் சாக்கடைக் கழிவுகளை அகற்றப் பயன்படுத்தப்படும், அடிபாகத்தில் அகன்ற தகடுடன் கூடிய நீண்ட குச்சியைக் கொண்டுவரச் சொல்லி, மெதுவாக அந்தக் குட்டி நாயை வெளியே தூக்கினான். அதனை எடுத்துச் சென்று கல்மேஜையின் அருகிலிருந்த குழாய் ஒன்றில் கழுவிக் குளிப்பாட்டினான். ஒரு சிறிய துண்டால் அதனுடைய உடம்பை ஒற்றியெடுத்து சற்றுநேரம் வெளியில் நிற்க வைத்து, சாமிக்கண்ணுவிடம் கடையில் பால்வாங்கிவரச் சொல்லி அதோடு கொஞ்சம் தண்ணீர் கலந்து ஒரு தட்டில் ஊற்றி அந்தக் குட்டி நாயின்முன் வைத்தான். மெதுவாகக் குடிக்க ஆரம்பித்தது. பல உன்னதமான உணர்வுகளையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் தனக்கு அந்தக் குட்டி நாய் அடுத்த பதினோரு வருடங்கள்

தன்னுடைய கடைசி காலம்வரை சொல்லித்தரக் காத்திருக்கிறது என்பதை அறியாமல் அதை சற்று நேரம் பாரத்துக்கொண்டு நின்றுவிட்டு தன்னுடைய அறைக்கு சந்துரு திரும்பினான். வீட்டிற்கு திரும்பியவுடன் இந்துவிடம் நடந்ததைக் கூறினான். தினமும் அதற்கென்று ஒரு சிறிய சம்புடத்தில் உணவு கொடுத்துவிடுவாள். மருத்துவமனையிலேயே வளர்ந்து வந்தது. சந்துரு மருத்துவமனைக்குள் நுழைவதற்கு சில வினாடிகளுக்கு முன்பே வாசலுக்குச் சென்று வரவேற்கக் காத்திருக்கும். சந்துருவின் வாகன ஓசையை நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருந்தது. இவர்களின் உறவு நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்துகொண்டிருந்தது. இந்துதான் அந்த நாயிற்கு பெயர் ஒன்றை வைத்தாள். வள்ளி!

வேட்கைக் காலத்தில் இரண்டு வாரங்களுக்குத் தன் வீட்டிற்கு வள்ளியைத் தூக்கிவந்து பாதுகாப்பாகச் சந்துரு வைத்திருப்பான். தனது வீட்டில் ஏற்கெனவே வள்ளியைப் போன்றே தெருவில் கண்டெடுக்கப்பட்ட மூன்று பெண் நாய்கள் உள்ளன. வயது வித்தியாசம் காரணமாகப் பொருந்திப் போகாது என்பதால் இரண்டு வாரம் மட்டும் தன்னுடைய தோட்டத்தில் விசாலமாக இதற்கென்று கட்டப்பட்ட அறையில் வைத்திருந்து பார்த்துவிட்டு பின் மருத்துவமனையில் மீண்டும் விட்டுவிடுவான். கிட்டத்தட்ட இவ்வாறு ஐந்து முறை வள்ளியை வீட்டிற்குத் தூக்கி வந்துள்ளான் சந்துரு.

***

அடிபட்ட வள்ளிக்கு என்ன ஆயிற்று? சந்துரு மருத்துவமனைக்கு விரைந்தான். சிவகாமி வெளியில் வந்தாள். “அங்கதான் சார் படுத்திருக்கு!” மருத்துவமனையின் மேற்குப் பக்கத்தில் சின்னச்சின்னப் பூச்செடிகள் மட்டுமே இருக்கும் தோட்டத்தை நோக்கி கையைக் காட்டினாள். “பாக்க பாவமா இருக்குங்க சார்! பிழைக்காதுங்க சார்! சதையெல்லாம் வெளியே வந்திருச்சுங்க, சார்.” என்று தொடர்ந்தாள் சிவகாமி. “வெளியே ரோட்டுக்குப் போகாதே… எப்படிப் போச்சு?” என்று கேட்டுக்கொண்டே தோட்டத்தை நோக்கி நடந்தான் சந்துரு. சாமிக்கண்ணுவும் அங்கு வந்துவிட்டார். “வெளியே போகலைங்க! அந்த அம்மா கார்தான் அடிச்சிருச்சு!” என்று கொஞ்சம் சாடையாகச் சொன்னார் சிவகாமி. “எந்த அம்மா?” என்று சந்துரு அதட்டிக் கேட்டான். “அதுதான் சார்! அந்த அராத்து! யார் கிட்டயும் பேசாம பச்சக் காருல வருமே!” என்று இழுத்தாள். சந்துருவிற்குப் புரிந்துவிட்டது. தன்னோடு பணிபுரியும் கோயம்புத்தூரிலிருந்து வரும் மற்றொரு மருத்துவர் “சுகந்தி!” வயது முப்பத்து எட்டு. காரில்தான் வருவார். எப்போதாவது அவருடைய அப்பாவுடன் வருவார். அப்படி அவருடைய அப்பாவுடன் வந்தால் உடனே கிளம்பிப் போய்விடுவார். சந்துருவே நான்குகால் வெளிநோயாளிகள் அனைவரையும் பார்த்துக்கொள்வான். “கன்னாபின்னானு பேசுறத கொஞ்சம் நிறுத்துறீங்களா?” என்று சிவகாமியிடம் கடிந்துகொண்டான் சந்துரு. பொதுவாகத் தன்னுடன் வேலை செய்பவர்கள் யாராக இருந்தாலும் மரியாதையாகவே பழகுவான். அதிகாரத் தோரணையை என்றுமே யாரிடமும் காட்டியதில்லை. சிவகாமி சற்று அதிர்ந்துதான் போனார். “அந்த அம்மாவைச் சொன்னால், இவருக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது” என்று நினைத்தார். “தோட்டத்தில எங்கனு சொல்லுங்க!” என்று சந்துரு சிவகாமியை அதட்டினான். சிவகாமி எதுவும் பேசாமல் சற்று வேகமாக நடந்துவந்து வள்ளி இருக்கும் இடத்தைக் காட்டினாள். சந்துரு செடிகளை விலக்கிவிட்டு வள்ளியைப் பார்த்தான். இரத்தத்தில் நனைந்திருந்த வள்ளியின் வால் ஆடிக்கொண்டிருந்தது.

“சந்துரு வந்துவிட்டான். இனி கவலையில்லை” என்பதை வள்ளியின் கண்கள் சொல்லிக் கொண்டிருந்தன. சந்துரு வள்ளியின் அருகில் அமர்ந்தான். “சார், வேண்டாங்க சார். வேதனையில் யாரு என்னானு தெரியாதுங்க சார் இதுகளுக்கு! கடிச்சுகிடிச்சு போடுமுங்க சார்!” என்றார் சாமிக்கண்ணு. வள்ளியின் அடிவயிற்று சதைகள் அனைத்தும் பிய்ந்து தொங்கிக் கொண்டிருந்தன. இரத்த வாடை சற்று அதிகமாகவே இருந்தது. சிவகாமி மூக்கை தனது சேலையால் மூடிக்கொண்டார். “சாமிக்கண்ணு, என் ரூம்ல டேபிளுக்கு ரைட் சைடுல இருக்கிற பீரோல ஒரு பெரிய பிளாஸ்டிக் விரிப்பு ஒண்ணு மடிச்சு வச்சிருப்பேன். கொஞ்சம் சீக்கிரம் எடுத்துட்டுவாங்க” என்றார். “சரிங்க, சார்” என்று சாமிக்கண்ணு அங்கிருந்து கிளம்பினார். வள்ளியின் பின்னங்கால்களை மெதுவாக்கப் பிடித்துக் தூக்கினான். வள்ளியின் தலை சடாரென்று திரும்பி சந்துருவின் கையை நோக்கி மின்னலாய் வந்தது. வலியின் விளைவுதான். சட்டென்று சந்துரு கண்களை மூடிக்கொண்டான். “அவசரப்பட்டுவிட்டோமோ? சாமிக்கண்ணு சொன்னது சரிதான்” என்று நினைக்கும்முன், அவனுடைய பின்னங்கையில் ஏற்பட்ட ஈரத்தை உணர்ந்து கண்களை மெதுவாகத் திறந்தான். வள்ளி தன் நாவினால் சந்துருவின் கையை நக்கிக்கொண்டிருந்தாள். “வலிக்கிறதுதான். தொட்டது நீ ஆயிற்றே!” என்பதுபோல் வள்ளியின் கண்கள் பேசின. வள்ளியின் கால்களை சற்று தூக்கிப் பார்த்தான். அடிவயிறு சுமார் ஏழு இஞ்சு அளவிற்கு கிழிந்திருந்தது தெரிந்தது. சாமிக்கண்ணு விரிப்பை எடுத்துவந்தார். அதை விரித்து வள்ளியை மெதுவாக, அளவாகத் தூக்கி அந்த விரிப்பில் போட்டான் சந்துரு. சாமிக்கண்ணு விரிப்பின் ஒருபுறம் பிடிக்க, சந்துரு மற்றொருபுறம் பிடிக்க மெதுவாகத் தூக்கி கல்மேஜைக்குக் கொண்டுவந்து வைத்தனர். வள்ளியால் நகர முடியவில்லை. சாமிக்கண்ணுவை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, தனது அறைக்கு விரைந்தான் சந்துரு. சிறிது நேரத்தில் தையல் போடுவதற்கான நூல், ஊசி, போவிடின் அயோடின் என்ற திரவ மருந்து இருக்கும் கண்ணாடிப் புட்டி, பஞ்சுச் சுருள், கத்திரிக்கோல், பற்றுக்குறடு ஆகியவற்றுடன் சந்துரு அங்கு வந்தான் செவிலியர் அமுதாவுடன். சாமிக்கண்ணுவிடமும் சிவகாமியிடமும் வள்ளியைப் பிடிக்கச் சொல்லிவிட்டு சல்லி சல்லியாகத் தொங்கிக்கொண்டிருந்த சதைகளை மெதுவாக நுணுக்கமாக அறுத்துவிட்டு, அமுதாவின் உதவியோடு பதினான்கு தையல் போட்டான். வள்ளி வலியில் சில நேரங்களில் கத்தினாள்; சில நேரங்களில் முனகினாள். ஆனால், நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தாள். சாமிக்கண்ணுவிடம் சொல்லி ஒரு ஆட்டோவை வரவழைத்தான். ஒரு பெரிய அட்டைப் பெட்டியில் வள்ளியை வைத்து, அதனை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு தன்னுடைய வீட்டிற்குச் சந்துரு சென்றான். இந்துவை தொலைபேசியில் அழைத்து வீட்டிலிருக்கும் மூன்று நாய்களையும் கட்டிப் போட்டுவிடச் சொன்னான். வீட்டில் வள்ளியை விட்டுவிட்டு அதே ஆட்டோவில் திரும்ப மருத்துவமனைக்கு வந்து தனது இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் வீட்டுக்குத் திரும்பினான்.

வள்ளி பிழைத்துக்கொள்வாளா? வள்ளியின் அருகில் கண்ணீர்மல்க அமர்ந்திருந்தாள் இந்து. சந்துரு இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே வந்தான். “எப்படி ஆனதாம்? என்றாள். “காரில் அடிபட்டிருச்சு” என்றான். “அப்படி ரோட்டுப்பக்கம் போக மாட்டானு சொல்லியிருக்கியே?” என்றாள். சந்துரு பதில் எதுவும்

கூறவில்லை. "யார் பாத்தாங்களாம்?" என்றாள். "சிவகாமிதான் பாத்திருக்காங்க!" என்றான். "நல்லவேளை. யாரும் பார்க்காமல் போயிருந்தால்?" என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் வடித்தாள். "பயப்பட வேண்டாம். வெறும் சதைதான். குடல் வரைக்கும் போகவில்லை. பிழைத்துக் கொள்வாள். தையல் மட்டும் பிரிந்துவிடக் கூடாது. பால் மட்டும் ஏதாவது இருந்தா கொடு. குளித்துவிட்டு வருகிறேன்" என்று சந்துரு குளிக்கச் சென்றுவிட்டான். அவன் சென்றிருந்த நேரத்தில் அவனுடைய கைபேசிக்கு அழைப்பு வந்தது. சற்று நேரம் கழித்து அழையுங்கள் என்று சொல்லுவதற்காக, சந்துருவின் கைபேசியை இந்து எடுத்தாள் டாக்டர் சுகந்தி. பலமுறை சந்தித்திருக்கிறாள். "மேடம், சார் குளிச்சிக்கிட்டிருக்கிறாரு. வந்தவுடன் பேசச் சொல்றேன்" என்றாள் இந்து. "வேறொன்னுமில்லை... அவரிடம் மன்னிப்பு கேட்டதாகச் சொல்லுங்க. அப்பாதான் கொஞ்சம் லெஃப்ட் பாக்காம காரை ஒதுக்கி ஒட்டிவிட்டார். நாய் அடிபட்டிருச்சு. இப்பதான் அமுதா கூப்பிட்டுச் சொன்னாங்க... சார் வந்து பாத்து, வீட்டுக்கு கொண்டுபோய்ட்டாருனு. ரொம்ப சாரி சொன்னேனு சொல்லுங்க... சென்னைக்குப் போயிட்டு இருக்கேன். கூப்பிடுறேனு சொல்லுங்க" என்று கூறி அழைப்பைத் துண்டித்துவிட்டார். சந்துருவின் இந்தச் செயல் இந்துவிற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எதையும் இந்துவிடம் அவன் மறைத்ததேயில்லை. வள்ளியிடம் அவன் காட்டும் அன்பின்மீது அவளுக்கு சில நேரங்களில் கோபமே வரும். அப்படிப்பட்டது சந்துருவிற்கும் வள்ளிக்குமான உறவு. யார் இந்த சுகந்தி! வள்ளியை விடவா பெரிசு! அபத்தமான யோசனைதான் என்றாலும் சந்துரு மறைத்த விசயம் சற்று வித்தியாசமாகவே இந்துவிற்குத் தோன்றியது. சந்துரு குளியலறையிலிருந்து வெளியே வந்தான். "சுகந்தி மேடம் போன் பண்ணுனாங்க" என்றாள் இந்து. "என்ன சொன்னாங்க?" என்றான். சந்துருவிடம் பதற்றம் எதுவும் தெரியவில்லை. வள்ளியை அடித்தது அவங்க காருதானாம். அவுங்க அப்பா கொஞ்சம் பாக்காம கார விட்டுட்டாராம். மன்னிப்பு கேட்டாங்க" என்றாள். சந்துரு சற்று நேரம் அமைதியாக இருந்தான். இந்துவின் கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது. "ஏன் இப்படிப் பண்ணினே!" என்றாள். சந்துரு பதில் எதுவும் சொல்லவில்லை.

"உண்மையை ஏன் நீ மறைத்தாய் என்பது எனக்குப் புரியவேயில்லை" என்றாள். சந்துரு மௌனமாகவே இருந்தான். "சரி! இது சம்மந்தமாக நான் உன்னிடம் எதுவும் கேட்க மாட்டேன். இது உன் உரிமை. அதில் நான் தலையிட மாட்டேன்." என்று சமையலறைக்குள் சென்றுவிட்டாள். சிறிது நேரத்தில் இந்துவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. அவள் வந்து எடுப்பாள் என்று சந்துரு எதிர்பார்த்து நின்றான். அவள் வரவில்லை. சில வினாடிகளுக்குப் பின் மீண்டும் அவளுடைய கைபேசிக்கு அழைப்பு வந்தது. இந்து வரவேயில்லை. அடுத்து, சந்துருவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. "சொல்லுங்க... ஆமா! அவள் சமையலறையில் இருக்கிறாள் "...ம்... ம்... ம்... சரி கிளம்பி வருகிறோம்"என்று அழைப்பைத் துண்டித்தான். இந்துவிடம் வந்தான். உங்க அண்ணன் சிவாதான் கூப்பிட்டாரு... அப்பாவுக்கு கொஞ்சம் முடியலையாம். ஹாஸ்பிட்டலைஸ் பண்ணியிருக்காங்கலாம். வரச் சொல்லுறார்" என்றான். "நான்தான் வியாழக்கிழமை வர்றேனு சொல்லியிருந்தேனே!" என்றாள். "இப்பவே கிளம்பி வரச்சொல்றார்" என்றான். "ராஜியும் சுஜியும் ஸ்கூல்லயிருந்து வரணும். வந்தவுடனே கிளம்பிடுவோம்" என்றாள் சற்றுக்

கோபமாகவே. சிறிது நேரத்தில் மீண்டும் சந்துருவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. இந்துவும் அருகில் வந்து நின்றாள். இப்போது இந்துவின் அண்ணாவின் மனைவி பேசினார். "அப்பா தவறிவிட்டார்"என்று தளர்ந்த குரலில் நடுக்கத்துடன் கூறி, "கிளம்பி வாங்க"என்று அழைப்பைத் துண்டித்தார். "இந்து…. அப்பா…." என்று தயங்கி நின்றான். அப்படியே தரையில் அமர்ந்து இந்து அழத்தொடங்கினாள். சந்துரு அவள் அருகில் நின்றவாறே அவளது தலையைத் தடவி விட்டுக்கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து, "ஸ்கூலுக்குப் போயி ராஜியையும் சுஜியையும் கூட்டிக்கிட்டு வந்திடுறேன். நீ எல்லாத்தையும் எடுத்துவச்சி தயாரா இரு!" என்று கூறி சந்துரு கிளம்பினான். வெளியே வரும்போதுதான் உணர்ந்தான். வள்ளியைப் பார்த்துக்கொள்ள யாராவது வேண்டுமேயென்று. வீட்டிற்குள் சென்று தன்னுடைய அறையிலிருந்து எலிசபத் காலர் ஒன்றை எடுத்துவந்தான். அதை வள்ளியின் கழுத்தில் கட்டிவிட்டான். எலிசபத் காலர் இல்லையென்றால் போடப்பட்ட பதினான்கு தையல்களையும் பிரித்தெடுத்துவிடுவாள் என்பதால் அதைச் செய்தான். சாமிக்கண்ணுவிடம் தொலைபேசியில் வள்ளியையும் மற்ற மூன்று நாய்களையும் பார்க்கச் சொல்லிவிட்டு, ஊருக்குச் செல்லும் வழியில் செலவுக்கு ஆயிரம் ரூபாயை அவரிடம் கொடுத்துவிட்டுக் கிளம்பினான்.

இந்துவிற்கு ஏன் இப்படி அடுத்தடுத்து சோதனைகள்? மூன்று நாட்களுக்குப் பின் வீடு திரும்பினார்கள். வள்ளி எலிசபத் காலரைக் கிழித்துத் தூக்கி எறிந்திருந்தாள். போடப்பட்ட தையல் அனைத்தும் பிரிந்து இரத்தம் வடியவடிய அதை நக்கிக்கொண்டிருந்தாள். சாமிக்கண்ணு அப்போது வந்தார். "சார், நேத்து நைட்டுவரை நல்லாத்தான் இருந்துச்சிங்க சார். இப்பத்தான் இப்படி செஞ்சிருக்கணும்" என்று வருத்தத்துடனே சொன்னார். சாமிக்கண்ணு நம்பிக்கைக்குரியவர் என்பதால் சந்துரு அதைப் பெரிதுபடுத்தவில்லை. "சரிங்க… போயி ஒரு பிளாஸ்டிக் குடம் ஒன்னு வாங்கிட்டுவாங்க"என்று தன்னுடைய பர்ஸிலிருந்து ஓர் ஐம்பது ரூபாயை எடுத்துக் கொடுத்தான். இந்து உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் மிகவும் தளர்ந்து போயிருந்தாள். தன் நிலை, வள்ளியின் நிலை ஆகியவற்றைப் பார்த்து, தன் குடும்பத்திற்கு ஏதோ கெட்ட காலம் ஆரம்பமாயிருக்கிறது என்று நினைக்க ஆரம்பித்தாள். சென்ற வருடம் தன்னுடைய தாயை நான்காம் நிலை மூளைப் புற்றுநோய்க்கு (*Grade IV glioblastoma multiforme (GBM)*) பலி கொடுத்தாள். அந்த நோயின் கொடூரத்தை உடனிருந்து பார்த்தவள். கொஞ்சம் கொஞ்சமாக உடல் உருக்குலையும் நிலைகளை, பாதிக்கப்பட்டவர்கள் உணர்கிறார்களோ இல்லையோ, உடன் இருப்பவர்களைத் தாளமுடியாத வேதனையில் தள்ளிவிடும். அவ்வளவு திடகாத்திரமாக இருந்து அனைத்து வேலைகளையும் சலிப்பில்லாமல், சோர்வில்லாமல் செய்துவந்த தன் தாய், நோயின் பிடியில் உருமாறிக் கிடந்ததை அவளால் சகித்துக்கொள்ளவே முடியவில்லை. எவ்வளவோ போராடியும் காப்பாற்ற முடியவில்லை. அதன் தாக்கம் இந்துவிடம் இருந்துகொண்டே வந்தது. இந்து தனது பெற்றோருக்கு ஒரே மகள். தாயை இழந்த இந்து ஒருவித மனநோயாளியாகவே மாறியிருந்தாள் என்பதுதான் உண்மை. 'புற்றுநோய்' என்ற வார்த்தையே அவளை நிலைகுலையச் செய்துவிடும் அளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. தற்போது தன் தந்தை. பற்றாக்குறைக்குத் திடீரென்று சந்துருவின் குணத்தில் மாற்றம், உண்மையில் ஊனம்.

சந்துரு மோசமானவனா என்ன? சாமிக்கண்ணு பிளாஸ்டிக் குடம் ஒன்று வாங்கி வந்தார். வீட்டிலேயே இந்துவையும் சாமிக்கண்ணுவையும் பிடிக்கச் சொல்லி, வள்ளிக்கு மீண்டும் தையல் போட்டுவிட்டான் சந்துரு. சாமிக்கண்ணு வாங்கிவந்த பிளாஸ்டிக் குடத்தின் அடிப்பாகத்தை மூன்று இஞ்ச் அளவிற்கு வெட்டி எடுத்துவிட்டு குடத்தின் தலைப்பகுதியை வள்ளியின் கழுத்தில் மாட்டிவிட்டான். இப்பொழுது வள்ளியால் தையல் போடப்பட்ட இடத்தை தன் வாயால் தொட முடியவில்லை. அடுத்த இரண்டு மாதத்திற்கு இந்து, வள்ளியை ஒரு குழந்தையைப் பார்ப்பது போல் பார்த்துக்கொண்டாள். தினமும் இரண்டு முட்டை, அரை லிட்டர் பால், தயிர் சாதம் கண்ணீர் கலந்து தொடர்ந்து ஒரு வாரம் நோய் எதிர்ப்பு ஊசிகள். வள்ளி இரண்டு மாதத்தில் குணமடைந்தாள். இந்த இரண்டு மாதத்தில் இந்து சந்துருவின் உறவில் ஒரு விரிசல்... ஓர் உரசல்... இருந்துகொண்டேதான் இருந்தது. சந்துரு மறைத்த விசயம் மட்டும் இந்துவின் மனதில் அவ்வப்பொழுது வந்துபோய்க்கொண்டிருந்தது. வள்ளியின் வருகையால் இரண்டு மாதங்களுக்கும் வீட்டிலிருந்த மற்ற நாய்களைக் கட்டியே வைத்திருக்க வேண்டியிருந்தது. நாய்களைக் கட்டிவைத்து வளர்ப்பதில் இந்துவிற்கும் சரி, சந்துருவிற்கும் சரி உடன்பாடில்லாத ஒரு விசயம். வள்ளியை மீண்டும் மருத்துவமனையில் விட்டுவிட முடிவுசெய்தான். ஒருநாள் மாலைவேளை. இந்து வீட்டின் அருகிலுள்ள கடைக்குச் சென்றிருந்தாள். அவள் இருக்கும்போது வள்ளியை எடுத்துச் சென்றால் வருத்தப்படுவாள் என்று காத்திருந்தான். இந்து கடைக்குச் சென்றதும், வள்ளியைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் விட்டுவிட்டு வீட்டிற்குத் திரும்பினான் சந்துரு. வீட்டினுள்ளே தன் குழந்தைகளுடன் தொலைக்காட்சியில் கார்ட்டூன் பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரத்தில் இந்து வீட்டிற்குள் வந்தாள். "ஏன் வள்ளியை அவிழ்த்து விட்டிருக்கீங்க?" என்றபடி சமையலறைக்குச் சென்றாள். சந்துருவிற்கு தூக்கிவாரிப் போட்டது. இந்துவிற்கு என்ன ஆயிற்று என்று! இருந்தாலும் வெளியில் சென்று பார்த்தான். வீட்டின் முன்வாசலில் படுத்திருந்தாள் வள்ளி. சந்துருவைப் பார்த்ததும் வாலாட்டத் தொடங்கினாள். ஒரு நிமிடம் சந்துருவால் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. "இந்து" என்று அலறினான். இந்து வெளியில் ஓடி வந்தாள். ராஜியும், சுஜியும்தான். "என்ன, என்னாச்சு?" என்றாள். "இப்பதான் இதைக் கொண்டு போயி ஹாஸ்பிட்டலில் விட்டுவிட்டு வந்தேன்" என்றான். "என்ன சொல்றீங்க?" என்று ஆச்சரியப்பட்டாள் இந்து. "பொறு!" என்று வீட்டின் ஆறு அடி சுற்றுச் சுவரில் இருந்த கேட்டைத் திறந்து வள்ளியைத் தூக்கிக் கொண்டுபோயி வெளியில் விட்டு கேட்டின் கதவைச் சாத்தினான். அடுத்த வினாடி சுற்றுச்சுவரின் மேலே கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தாள் வள்ளி. இலகுவாக உள்ளே இறங்கி வாசலில் சென்று படுத்துக்கொண்டாள். மற்ற நாய்களும் அவளை ஒன்றும் செய்யவில்லை. அனைவரும் வள்ளியின் செய்கையால் ஆச்சரியத்தில் வாயடைத்து நின்றனர். "இதுதான் என் வீடு! இங்குதான் இருப்பேன்!" என்று மட்டும்தான் வள்ளி பேசவில்லை. ஆனால், அனைவரும் புரிந்துகொண்டனர்.

சந்துரு-இந்து பிரச்சினை முடிந்ததா? சந்துருவிற்குப் பணியிட மாறுதல் ஆணை வந்தது. கரூர் மாவட்டத்திலுள்ள குளித்தலை அரசு கால்நடை மருத்துவமனை. அங்கேயே ஒரு வீடு ஒன்றைப் பார்த்து தங்கினான். அடுத்த வருடத்தின் கல்வியாண்டு தொடக்கத்தில்

குடும்பத்தோடு மாறிக்கொள்ளலாம்; குழந்தைகளின் பள்ளியைப் பாதியில் மாற்ற வேண்டாம் என்று முடிவு செய்திருந்தான். வாரத்தில் ஒருநாள் அல்லது மாதத்திற்கு இரண்டு நாட்கள் விடுப்பில் உடுமலை வந்துசெல்வான். தனது இருசக்கர வாகனத்திலேயே போய்வருவான். முதன்முதலில் குளித்தலையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தான். உடுமலை அரசு கால்நடை மருத்துவமனையை ஓரக்கண்ணில் பார்த்தபடி கடந்துகொண்டிருந்தான். தன் வாகனத்தின் வலது கண்ணாடியில் மிகவும் பரிச்சயப்பட்ட மனதிற்கு நெருங்கிய உருவம் ஒன்று பின்தொடர்ந்து கொண்டிருந்தது. வள்ளி! எங்கிருந்து வந்தாள் என்று தெரியவில்லை. அவனுடைய வண்டியின்பின் துள்ளிக்குதித்து ஓடி வந்துகொண்டிருந்தாள். வண்டியை ஓரமாக நிறுத்தினான். வள்ளி தன் இரு முன்னங்கால்களையும் அவன் வயிற்றின்மீது வைத்துத் தன் அன்பைப் பொழிந்துகொண்டிருந்தாள். அருகிலிருந்த ஒரு கடையில் பிரிட்டானியா பிஸ்கட் பாக்கெட் ஒன்றை வாங்கித் தன்னுடைய தோளில் தொங்கிக்கொண்டிருந்த பையில் திணித்துக்கொண்டான். வள்ளியைத் தூக்கித் தனது இருசக்கர வாகனத்தின் பெட்ரோல் டேங்கின்மீது அமரவைத்தான். தானும் ஏறிக்கொண்டு வாகனத்தை நகர்த்தினான். வள்ளி சற்றுப்பின்புறம் நகர்ந்து சந்துருவின் உடம்போடு ஒட்டிக்கொள்வதுபோல் அமர்ந்துகொண்டு காற்றைக் குடித்துக்கொண்டே வேடிக்கைப் பார்த்தவாறு பயணித்தாள். வீடு வந்ததும் ராஜியும் சுஜியும் சந்துருவினுடைய வாகனத்தின் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்தனர். வள்ளியைப் பார்த்தவுடன் "அம்மா! இங்க வந்து பாரேன்!" என்று இருவரும் ஒருசேரக் கத்திக்கொண்டு கேட்டின் கதவைத் திறந்தனர். இந்து வெளியில் ஓடிவந்தாள். வள்ளி வண்டியிலிருந்து குதித்து ராஜியையும் சுஜியையும் தாவிக் கொஞ்சிவிட்டு இந்துவிடம் ஓடி அவள்மீது தன் இரு முன்னங்கால்களையும் வைத்து ஒருவித அன்பின் ஒலியை எழுப்பினாள். 'சந்துருவை நான் கூட்டிவந்துவிட்டேன் பாருங்கள்!' என்று சொல்லுவது போல் இருந்தது. "எங்கிருந்தாள்? நீங்கள் போன அன்று இரவு போனவள். வந்துவிடுவாள் என்றும் பார்த்தோம் வரவேயில்லை. மறுநாள், அமுதா சொன்னாங்க ஹாஸ்ப்பிட்டல்ல இருக்குனு! உங்களைத் தேடித்தான் அங்கு போயிருக்கானு, அங்கேயே இருக்கட்டும்னு விட்டுட்டோம்"என்றாள். "ஹாஸ்பிட்டல் வழியா வரும்போது தொத்திக்கொண்டாள்" என்றான் சந்துரு. தோளில் கிடந்த பையிலிருந்து பிஸ்கட் பாக்கெட்டை எடுத்து அனைத்து நாய்களுக்கும் போட்டுவிட்டு வீட்டிற்குள் சென்றான். இதுதான் வாடிக்கை. சந்துரு குளித்தலைக்குக் கிளம்பும் அன்று இரவு மருத்துவமனைக்கு சென்றுவிடுவாள். சந்துரு வரும்போது உடன் தொற்றிக்கொள்வாள்.

முடிவுதான் என்ன? இந்து சந்துருவிடம் பேசுவதையும் தன் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதையும் வெளிப்படையாகத் தெரியுமளவிற்குக் குறைத்துக்கொண்டாள். சந்துரு மறைத்த விசயம் அவளை ஒருவித மனஅழுத்ததில் தொடர்ந்து இருக்கவைத்தது. அவ்வப்பொழுது அது கோபமாகவும் வெளியேறி, பின் மறையும். சந்துருவும் ஏன் அவ்வாறு செய்தான், அவனுக்கும் உடன் பணியாற்றும் அந்த டாக்டருக்குமான உறவைப் பற்றி இந்துவிடம் பல மாதங்களாகியும் எதுவும் கூறாதது இன்னும் அவளை வாட்டியது. ஒருநாள் குளித்தலையிலிருந்து மிகவும் தாமதமாக சந்துரு வந்தான். வள்ளியும் உடன் வந்து இறங்கினாள். ராஜியும் சுஜியும்

தூங்கிக்கொண்டிருந்தார்கள். இந்துவும் சந்துருவும் சாப்பாட்டை முடித்துத் தூங்கச் சென்றனர். இரவு 11:45 மணிக்கு சந்துருவின் அலைபேசி அலறியது. அனைவரும் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தனர். சந்துரு எடுத்துப் பார்த்தான். அமுதா. கதவைத் திறந்து வெளியில் வந்து பேசிவிட்டு வந்து படுத்துக்கொண்டான். என்னவென்று இந்துவிடம் எதுவும் சொல்லவில்லை. ஆனால் இந்துவால், அது அந்த டாக்டர் அம்மா சம்பந்தப்பட்டது என்பதை மட்டும் யூகிக்க முடிந்தது. சந்துரு அசதியில் நன்றாகத் தூங்கிவிட்டான். இந்துவிற்குத் தூக்கம் வரவில்லை. எழுந்து பிரதான அறைக்கு வந்தாள். கதவைச் சுரண்டும் சத்தம் கேட்டது. வள்ளிதான் என்பது இந்துவிற்கு உறுதியாகத் தெரியும். என்னவென்று பார்ப்பதற்காகக் கதவைத் திறந்தாள். வள்ளி நின்றுகொண்டிருந்தாள். முனகல் சத்தம் சற்று அதிகமாக இருந்தது. ‘ஏன் பிஸ்கட்போடாம போய்ட்டான்?’ என்ற கேள்வியைத் தாங்கியபடியிருந்த வள்ளியின் கண்களைப் பார்த்து புரிந்துகொண்டாள் இந்து. சந்துருவின் பேக்கைத் திறந்து பிஸ்கட் பாக்கெட்டை எடுக்க முயன்றபோது, அதனுடன் ஒரு கொத்துத் தாள்களும் சேர்ந்து வெளியில் வந்து விழுந்தன. கீழே விழுந்த ஒரு தாளின் ஓரத்தில் டாக்டர் சுகந்தியின் புகைப்படமிருந்தது. அது ஒரு மருத்துவ அறிக்கை என்பதைப் புரிந்துகொண்டாள் இந்து. புரட்ட ஆரம்பித்தாள். கடைசியாக இருந்த வார்த்தைகள் ஒரு நிமிடம் அவளுடைய மூச்சை நிறுத்திவிடுவது போலிருந்தது. “Grade IV – Glioblastoma Multiforme.” தன் அம்மாவிற்கு வந்த அதே மூளைப் புற்றுநோய். அதிர்ந்து அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அவளுடைய மனதிலிருந்த பல சிக்கல்கள், முடிச்சுகள் சட்டென்று மாயமானது போலவும் உணர்ந்தாள். மீண்டும் ஒருமுறை அதைப் படித்துப் பார்த்தாள். இந்துவிற்கு பழக்கமான வார்த்தைகள் அவை. வள்ளி அங்கே பிஸ்கட்டிற்காக நின்று கொண்டேயிருந்தாள். முனகல்கள் நிற்கவில்லை. கையிலிருந்த பிஸ்கட் பாக்கெட்டை பிரித்து அதில் சிலவற்றை எடுத்துக்கொண்டு வள்ளியை வெளியே அழைத்துச் சென்றாள். சிறிது நேரம் கழித்து வீட்டிற்குள் நுழைந்தாள். கதவைத் தாழிட்டுவிட்டுப் படுக்கையறைக்குச் சென்றாள். அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த சந்துருவை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். கண்களில் கண்ணீர் துளிர்த்துக் கொண்டிருந்தது. இருவருக்குமாக!

vasuaruntamil@gmail.com



கவிதை

**கி.சரஸ்வதி**

நான் நிமிர்ந்து பார்த்த போதுதான்
தெரிந்தது
எதிர் இருக்கைச் சிறுமி
வெகு நேரமாக
என்னைப் பார்த்துக்கொண்டிருந்திருக்கிறாள்

கண்களைப் பார்த்து
இதயப்பூர்வமான ஒரு புன்னகை புரிந்துவிட்டு
அடுத்த ஸ்டேஷனில்
இறங்கிச் சென்றாள்

கொஞ்சம் முன்பாக நான்
நிமிர்ந்து பார்த்திருந்திருக்கலாம்

ameech2004@gmail.com



கட்டுரை

கவிதைக்காரன் இளங்கோ

# விரல்நுனிகளில் அசைகின்ற பொம்மலாட்டம் : த காட்ஃபாதர்

**(திரைமொழிப் பார்வை)**

அமெரிக்க ஹாலிவுட் திரைப்படமான *The Godfather-I* இயக்குநர் பிரான்ஸிஸ் ஃபோர்ட் கொப்போலோவின் இயக்கத்தில் 1972-இல் வெளிவந்தது. சினிமா ரசிகர்களின் பரவலான கவனத்தைப் பெற்று மிகப்பெரிய வெற்றிப்படமாக அது அமைந்தது. அப்படத்திற்கு பல சிறப்பம்சங்கள் உண்டு. அதையொட்டி சில சுவாரசியமான விஷயங்களும் உண்டு. அதன் மூலக்கதை ஒரு நாவலைத் தழுவியது. அமெரிக்க நாவலாசிரியர் *Mario Puzo* 1969-இல் எழுதி வெளியான நாவல் 'த காட்ஃபாதர்'. அது, 'த நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையின் சிறந்த விற்பனைப் பட்டியலில் அறுபத்தியேழு வாரங்கள் நீடித்திருந்திருக்கிறது. இரண்டே வருடங்களில் தொண்ணூறு லட்சம் பிரதிகளுக்கும் மேல் விற்பனையாகியுள்ளது. அது, மரியோ புஸோவின் ஐந்தாவது நாவல்.

ஏற்கனவே பல லட்சம் வாசகர்களை சம்பாதித்து வைத்திருந்த அந்நாவல் வெறும் பொழுதுபோக்கு க்ரைம் கதையாக இல்லை. திரைப்படத்திற்காக மரியோ புஸோவும் இயக்குநர் கொப்போலோவும் இணைந்து திரைக்கதையை அமைத்தார்கள். பின்னர் 45வது ஆஸ்கார் விருது விழாவில் த காட்ஃபாதர் திரைப்படம் மொத்தம் பதினொரு பிரிவுகளில் விருதுக்கு நாமினேட் செய்யப்பட்டு சிறந்த திரைப்படத்திற்கான விருது உட்பட மூன்று விருதுகளைப் பெற்றது. அதிலொன்று சிறந்த திரைக்கதைக்கானது.

இரண்டாம் உலகப்போர் ஐரோப்பிய மக்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதித்தது. உலகப் பொருளாதார நிலைகளும் அரசியல் காரணங்களும் விவாதத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களாக மாறியிருந்தன. உயிர் பிழைத்தோர் புதிய வாழ்வை அமைத்துக்கொள்ள வெவ்வேறு நிலப் பரப்புகளுக்கு குடியேறினார்கள். சொந்த நிலங்களை, வாழ்விடங்களை விட்டு வெளியேறினார்கள். அவர்களை அமெரிக்கா ஈர்த்தது. அங்கே உழைக்கும் மக்கள் பெருகினார்கள். இன வேறுபாடுகளினூடே தங்களுக்கான மக்களைக் கண்டடைந்து பரஸ்பரம் உதவிகள் செய்து பயனடைந்து வளர்ந்தார்கள். புதிய குடும்பங்கள் உருவாகின. வருங்கால சந்ததிகளுக்காக அவர்கள்

அனைத்து வகையிலும் கடும் பாடுபட்டார்கள். சிலர் முதலாளிகளாகவும் உயர்ந்தார்கள். தங்கள் பிள்ளைகளை அமெரிக்கர்களாக வார்த்தெடுப்பதில் கவனம் செலுத்தினார்கள். அதுதான் எதிர்காலம் என்று நம்பினார்கள். அதையே விரும்பினார்கள்.

அப்போது, இத்தாலியைச் சார்ந்த மாஃபியாக்கள் அமெரிக்காவின் நிழலுலக ராஜாக்களாக இருந்தார்கள். அவர்களிடையே முரண்கள் இருந்தன. கடுமையான போட்டியிருந்தது. ஒவ்வொரு மாஃபியா குடும்பத்திற்கும் ஒரு பரம்பரை பெயர் இருக்கும். அதற்கான பாரம்பரியத்தை அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்தெடுத்தார்கள். தொழிலுக்கான, அதிகார எல்லைகளுக்கான பகுதிகளை பிரித்துக்கொண்டு அனைத்து நிழலுலக காரியங்களையும் தத்தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.

குற்ற உலகில் விசுவாசமும் துரோகமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக எப்போதுமே இருக்கும். சுண்டிவிடப்படும் சூழ்நிலையைப் பொறுத்து இரண்டிற்குமான சம பங்கு வாய்ப்பு ஒரு மாஃபியா தலைவனுக்கு இருக்கிறது. அதிலுள்ள ரிஸ்க்கின் அடிப்படையில் அவர்கள் முடிவெடுத்தாக வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை அனுமானிக்கவும் அதற்கேற்ற மாற்று திட்டங்களை தீர்மானிக்கவும் வலுவுள்ள மூளைத்திறன்தான் அவர்களுக்கான தலைமைப் பண்பு என்றும் கொள்ளலாம். அனைத்து வன்முறை செயலுக்குப் பின்னும் லாப நஷ்ட கணக்குள் உண்டு.

காட்ஃபாதர் கதை டான் வீட்டோ கோர்லியானேவிடம் தொடங்குகிறது. அவரது பரந்துபட்ட சாம்ராஜ்யத்தின் வலிமை என்னவென்று அவருடைய செல்ல மகளின் திருமணக் காட்சியில் காட்டப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் மத்தியக் கால அமெரிக்காவில் இருக்கும் ஐந்து பெரிய மாஃபியா அமைப்புக் குடும்பங்களில் ஒன்று கோர்லியானேவுடையது. மற்றவர்களைக் காட்டிலும் அவரிடம் அரசியல் மற்றும் போலீஸ் தொடர்புகள் அதிகம் இருக்கிறது. 'கொடுத்த வாக்கைக் காப்பாற்றுபவர்' என்கிற நற்பெயர் அவருக்குண்டு. மனைவி, மூன்று மகன்கள், ஒரு மகள், ஒரு வளர்ப்பு மகன். இவ்வளவுதான் அவருடைய குடும்பம். மற்றவர்கள் அவருடைய ஆரம்பக் காலத்திலிருந்து உடன் இருக்கிற நண்பர்கள் மற்றும் தொழில் ரீதியான விசுவாசம் நிறைந்த அடியாட்கள், வேலையாட்கள்.

மூத்தவன் சன்னி கோர்லியானே அப்பாவுடனிருந்து தொழில் பழகுபவன். இளைய டான் அந்தஸ்தில் இருப்பவன். அடுத்தவன் ஃப்ரீடோ கோர்லியானே ஓர் உல்லாச பேர்வழி. தொழில் விவகாரங்களில் ஈடுபாடு இல்லாதவன். அடுத்தது மகள் கோன்னி கோர்லியானே. கடைசியில் மைக்கேல் கோர்லியானே. அவன் இராணுவ சேவை செய்துவிட்டு சாதாரண அமெரிக்க பிரஜையாக வாழ நினைப்பவன். அமெரிக்க பெண் கேயை காதலிப்பவன். வளர்ப்பு மகன் டாம் ஹேகன் சட்டம் படித்தவன். கோர்லியானே குடும்பத் தொழிலுக்குரிய அனைத்து விதமான சட்ட ஆலோசகர். இத்தாலியைச் சார்ந்த சிசிலிய குடும்ப வழக்கப்படி அது மிக உயரிய பதவி.

அடிப்படையில் வீட்டோ கோர்லியானேவின் குடும்பத் தொழில் ஆலிவ் எண்ணெய் வியாபாரம். அதேவேளை, தனிநபர் பிரச்சனைகள், தொழில்ரீதியான பிரச்சனைகள் என்று அவரைத் தேடி வந்தவர்களுக்கு உதவிகள் செய்யத் தொடங்கி பின்னர் அவர்களின் பாதுகாவலராக (காட் ஃபாதர்) ஆகும்போது மெல்ல மாஃபியா தலைவனாகவும் மாறிவிட்டவர்.



அமெரிக்காவின் முக்கியமான நகரங்களில் அவரது நிழலுலக ஆட்சி கொடிகட்டி பறக்கிறது. உணவு விடுதிகள், கேளிக்கை விடுதிகள், பிராத்தல், கட்டப் பஞ்சாயத்து போன்றவை.

ஆனால், புதிதாக போதைப் பொருட்கள் அமெரிக்காவிற்குள் நுழைகின்ற சமயம் அப்போதுதான் வருகிறது. அதற்கான வியாபார பார்ட்னராவதற்கு சொலஸோ என்பவன் ஐந்து மாஃபியா குடும்பங்களுடனும் பேச்சு வார்த்தை நடத்துகிறான். வீட்டோ கோர்லியானே போதைப் பொருளுக்கான வியாபார ஒப்பந்தத்தை மறுத்து அவனை அனுப்பி வைக்கிறார். அவருடைய மனசாட்சிக்கு என்று சில சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அதற்கு ஒத்துவராததை அவர் செய்வது கிடையாது.

இந்த ஒப்பந்த ரத்துதான் வீட்டோ கோர்லியானேவின் வீழ்ச்சிக்கு ஒரு முதல் புள்ளியை ஆரம்பித்து வைக்கிறது. அவர் கடைவீதியில் சுடப்படுகிறார். ஐந்து துப்பாக்கி குண்டுகளை உடலில் வாங்கி சரிந்து விழுந்தபோதும் அவர் சாகவில்லை. அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துவிடுகிறார். அந்த சம்பவத்திலிருந்து ஒரு போர் தொடங்குகிறது. குடும்பத்திற்குள் அதிகாரம் எப்படியெல்லாமோ எதனாலெல்லாமோ கை மாறுகிறது. இவர்களின் வீழ்ச்சிக்காகக் காத்திருக்கும் பகை மாஃபியா குடும்பங்கள் எப்படியெல்லாம் இவர்களுக்கு எதிராக தந்திரத்துடன் காய் நகர்த்துகிறார்கள், யாரெல்லாம் விசுவாசத்தை கைவிட்டு துரோகியாகிறார்கள் என்கிற விறுவிறுப்பான திரைக்கதை, பார்வையாளர்களின் கவனம் சிதறிவிடாமல் கட்டிப் போடுகிறது.

வீட்டோ கோர்லியானே ஓரளவிற்கு குணமாகி மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு திரும்பிவந்த சில நாட்களிலேயே ஒரு சதியில் சிக்கிக்கொள்ளும் சன்னி கோர்லியானே படுகொலை செய்யப்படுகிறான். அனைத்தும் தலைகீழாக மாறுகிறது. நிழலுலகில் கொஞ்சமும் ஆர்வமேயில்லாத கடைசி மகனான மைக்கேலின் கைக்கு டான் என்னும் அதிகாரம் வந்துசேர்கிறது.

புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட மைக்கேலுக்கு ஆதரவாக இருக்கும்படி தன் அமைப்பின் மூத்த கூட்டாளிகளிடம் கேட்டுக்கொள்கிறார். அவர் அவனுடைய ஆலோசகராக இருக்கிறார். தன்னுடைய அனுபவத்திலிருந்து பல விஷயங்களை பகிர்ந்துகொள்கிறார். வீட்டோ கோர்லியானே சுடப்பட்டதற்கு பின்னுள்ள சதிக்கு காரணமானவர்களைத் தேடும் படலமாக ஒரு மறைமுக விசாரணை நடந்துகொண்டே இருக்கிறது.

வீட்டோ கோர்லியானே, துப்பாக்கிச் சூட்டிற்கு பிறகு ஏற்படும் உடல்நலக் குறைவு மற்றும் மூப்பு காரணமாக தளர்ந்துகொண்டே வருகிறார். அவர், மைக்கேலிடம் தன்னுடைய வாழ்க்கை இலட்சியத்தைப் பகிர்ந்துகொள்கிறார். எதிர்காலத்தில் கோர்லியானே குடும்பத்திலிருந்து வருபவர்கள் அரசாங்கத்தின் உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களாக இருக்க வேண்டும், நாம் கொஞ்சம் கொஞ்சமாக அதை நோக்கிப் பயணிக்க வேண்டும், எவ்வளவு உழைத்தாலும் அரசின், அரசியல்வாதிகளின் நூலசைவுக்கு ஏற்ற கைப்பொம்மைகளாகவே கடைசி வரை இருந்துவிடக் கூடாது, அந்த நூல்களை கையில் வைத்திருப்பவர்களாக நாம் உயர வேண்டும், நம்மீது இருக்கும் குற்றக் கறைகள் காலத்தால் நீங்க வேண்டும். இறந்துபோன சன்னிக்கு, அக்கா கோன்னிக்கு, மைக்கேலுக்கு, டாமிற்கு என அனைவருக்கும் குழந்தைகள் இருக்கின்றன.

மைக்கேல் தந்தைக்கு வாக்குறுதி கொடுக்கிறான். ஆனால் அதற்கும் முன்பாக அவனைக் கொல்லுவதற்கான சதியொன்று நடக்கும். அதிக கவனத்துடன் முடிவுகள் எடுத்தாக வேண்டிய சவாலான சூழ்நிலைகள் வரும் என்கிறார் வீட்டோ கோர்லியானே. ஒருநாள் மதியவேளை பேரனுக்குத் தோட்டத்தில் விளையாட்டுக் காட்டிக்கொண்டிருக்கும்போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிடுகிறார்.

அவருடைய இறுதிச் சடங்கிற்கு மரியாதை நிமித்தம் வருகை தரும் அனைத்து பெரிய மனிதர்களும் மற்ற மாஃபியா தலைமைகளும் சம்பிரதாயமாக மரியாதை செலுத்திவிட்டுப் போகிறார்கள். அப்போது அவர்களிடையே நிலவுகின்ற நிம்மதியையும் சந்தோஷத்தையும் இளம் மாஃபியா தலைவனான மைக்கேல் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவர்களைப் பொறுத்தவரை அவனுக்கு அனுபவம் குறைவு. கோர்லியானே குடும்பத்தில் சன்னிக்குப் பிறகு மைக்கேல் மட்டுமே கணக்கில் இருப்பவன். வீட்டோ கோர்லியானேவின் மரணம் என்பது குடும்பம் வலுவிழந்து நிற்பதின் அடையாளம். மைக்கேலால், தன்னுடைய அப்பாவின் கனவை நிறைவேற்ற முடிந்ததா? முடிந்ததென்றால் அது எப்படிப்பட்ட போராட்டமாக இருந்தது. முடியவில்லை என்றால் எங்கே? ஏன்? என்ன பிசகு ஏற்பட்டது?

**இ**ந்தக் கேள்விகளோடு இத்திரைப்படத்தை பார்க்கும்போது இவற்றிற்கான விடைகள் ஒரே படத்தில் கிடைப்பதில்லை. அடுத்தடுத்து மேலும் இரண்டு பாகங்களாக எடுக்கப்பட்ட படங்களையும் சேர்த்து பார்த்துதான் தெரிந்துகொள்ள முடிகிறது. *The Godfather-II (1974), The Godfather-III (1990)*. அவைகளிலும் மரியோ புஸோவும் கொப்போலோவும் இணைந்து பணிபுரிந்தார்கள். 'த காட்ஃபாதர்' நாவலில் மூன்றாம் பாகத்திற்கான கதைக்கூறுகள் கிடையாது. எனவே, அது தனியாக எழுதப்பட்டது. திரைப்படத்தின் இரண்டாம் பாகத்திற்கும் மூன்றாம் பாகத்திற்கும் இடைவெளி பதினைந்து ஆண்டுகள். நடிகர்களின் தோற்றத்திற்கேற்ப

கதாபாத்திரங்களின் வயது, காலம் எல்லாம் அதன் திரைக்கதையில் அமைக்கப்பட்டது.

*The Godfather-I* இல் மூன்று முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட்டாக வேண்டும். முதலாவது ஒளிப்பதிவு. அதன் ஒளிப்பதிவாளர் *Gordon Willis*. நிழலுலகப் படத்திற்கு என வண்ணத்தில் ஒரு பிரத்யேக ஒளியமைப்பை அவர் உருவாக்கினார். காட்சிகளில் நாம் காண்பது இருளை அல்ல, வெளிச்சத்திலிருந்து பிரிந்து பின்னணியில் ஸ்திரமாக உறைந்திருக்கும் ஓர் ஆழ்ந்த அமைதியான நிழலை. அது வெளிச்சத்தில் இருப்பவர்களை இம்மி பிசகாமல், ஓர் இணுக்கைக் கூட தவற விட்டுவிடாமல் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதைப் போன்ற ஓர் அச்சத்தைத் தோற்றுவிக்கிறது. பிரதான கதாபாத்திரங்கள் தலைமைப் பண்போடு தோன்றுவதால் அக்கதாபாத்திரங்களின் முகக்குறிப்புகளின் துல்லியத்தை எதிராளி அறிந்துவிடக் கூடாத வகையில் ஒளியமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அது சற்றைக்கெல்லாம் பார்வையாளர்களின் கண்களுக்குப் பழகிவிடுகிறது. குறைந்த வெளிச்சம் என்பதை விட கட்டுப்படுத்தப்பட்ட வெளிச்சமே பகல்நேர அறைகளிலும் படர்ந்திருக்கிறது.

தொலைவிலிருந்து வேவு பார்க்க நேரும் பகையாளிக்கு தொலைநோக்கியில் கூட அறைகளுக்குள் இருக்கும் துல்லியமான விஷயங்கள் கிடைத்துவிடக் கூடாது என்கிற பாணி அதில் இருக்கிறது. அதுபோலவே கேமராவின் அசைவுகள் காட்சியின் தேவைக்கேற்ப வேகம் கூடுவதும் குறைவதுமாக கையாளப்பட்டுள்ளது. வன்முறைக் காட்சிகளில் தெறிக்கும் இரத்தமான சிகப்பு நிறம் வெறுமனே அச்சுறுத்தும்படி அல்லாமல் திகைக்க வைப்பதாக இருக்கிறது.




இரண்டாவதாக, படத்தொகுப்பு *William Reynolds* மற்றும் *Peter Zinner*. மிக எளிமையான, உறுத்தல் இல்லா படத்தொகுப்பு சலிப்பு ஏற்படுத்தவில்லை. காட்சியின் தீவிரத்திற்கு ஏற்ப அதன் வேகம் கையாளப்பட்டுள்ளது. ஒளிப்பதிவிலும் படத்தொகுப்பிலும் காட்சி சட்டகத்திற்குள் கதாபாத்திரங்களின் முகபாவங்கள், உடல்மொழிகளைத் தாண்டி.. அவர்கள் உச்சரிக்கும் வசனங்களின் உயிரோட்டத்திற்கு வலுசேர்க்கும் விதமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, பின்னணி இசை *Nino Rota*. காட்ஃபாதர் திரைப்படத்தின் தீம் இசை இன்றளவிலும் மிகப் பிரபலம். அது, நம்மை கைப்பிடித்து திரைக்காட்சிகளினூடே எத்தனையோ தருணங்களுக்குள் அழைத்துப் போகிறது. ஓர் ஆழ்ந்த சோகத்தையும் மர்மத்தையும் அடுத்தது என்ன நடக்குமென்ற திகைப்பையும் நமக்குள் எழச் செய்கிறது.







1974–இல் வெளியான The Godfather-II இல் Nino Rota உடன் இணைந்து Carmine Coppola பின்னணி இசையமைத்தார். சிறந்த பின்னணி இசைக்கான ஆஸ்கார் விருதை அவர்கள் பெற்றார்கள். 1979இல் நினோ ரோட்டோவின் மறைவினால் 1990இல் வெளியான The Godfather-III இல் கார்மைன் கொப்போலோ தனித்து பின்னணி இசையமைத்தார். கார்மைன் - பிரான்ஸிஸ் ஃபோர்ட் கொப்போலோவின் தந்தை.

The Godfather திரைப்படத்தின் உத்வேகத்தால், பாதிப்பினால் அதன் கூறுகளை உள்ளடக்கமாகக் கொண்டு தமிழ் சினிமாவிலும் வெளிவந்துள்ளன. குறைந்தபட்ச காட்சிகளாவது அப்படியே அமைக்கப்பட்டுள்ளன. நாயகன் (1987), தேவர் மகன் (1992), புதுப்பேட்டை (2006). ஹிந்தி சினிமாவில் இயக்குநர் ராம்கோபால் வர்மாவின் இயக்கத்தில் அமிதாபச்சன் மற்றும் அபிஷேக் பச்சன் நடிப்பில் Sarkar (2005), Sarkar Raj (2008), Sarkar3 (2017) மூன்று பாகங்களாக வெளிவந்தன. அவை இந்தியநிலப் பின்னணியிலிருந்தும் அரசியல் பின்புலக் கோணத்திலிருந்தும் 'காட்ஃபாதரை' எழுதிப் பார்த்த திரைக்கதையமைப்பு எனலாம். முதல் பாகத்திலேயே Inspired by The Godfather என்று படத்தின் தொடக்கத்தில் அவர் திரையிலேயே குறிப்பிட்டிருந்தார். சமீபத்தில் இயக்குநர் சந்தீப் ரெட்டி வாங்கா இயக்கத்தில் வெளியாகிய ஹிந்தி திரைப்படம் Animal (2023). அதிலும் 'காட்ஃபாதர்' திரைப்படத்தின் தாக்கங்கள் உள்ளது.

2022-இல் அமெரிக்காவில் 'த காட்ஃபாதர்' திரைக்கு வந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் விதத்தில் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு மீண்டும் ரிலீஸ் செய்தார்கள். இன்றைய தலைமுறை சினிமா ரசிகர்களுக்கும் அது போய்ச்சேர்ந்து விட்டது.

**45**வது ஆஸ்கார் விருது அறிவிப்பில் சிறந்த நடிகராக வீட்டோ கோர்லியானே

*கதாபாத்திரம் ஏற்று நடித்திருந்த மர்லான் பிராண்டோ தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், அவர் அந்த விருதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். Sacheen Littlefeather எனும் நடிகை அமெரிக்க இந்தியப் பூர்வக்குடிகளின் உடையணிந்து விழாவிற்கு வந்தவர், மர்லான் பிராண்டோவின் சார்பாக அவருடைய மறுப்புக் கடிதத்தை மேடையில் வாசித்தார். அதன் சாராம்சம் இதுதான். 'அமெரிக்க இந்தியப் பூர்வக்குடிகள் திரைப்படங்களிலும் மற்றும் தொலைகாட்சிகளிலும் தொடர்ந்து மோசமாக சித்தரிக்கப்படுகின்ற விதத்தை எதிர்ப்பதின் அடையாளமாக... விருதை நிராகரிக்கிறேன்..'. பிராண்டோ விழாவுக்கே வரவில்லை. முன்னதாக 1954-இல் On the Waterfront படத்தில் சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதை அவர் பெற்றிருந்தார். அதனால், இந்த மறுப்பும் அதற்கான காரணமும் முக்கியத்துவம் பெற்றது.*

*சினிமாவின் தாரக மந்திரமான Don't tell Show என்பதற்கு சிறந்த உதாரணம் The Godfather-I. நாவலாசிரியர் மரியோ புஸோ 'த காட்ஃபாதர்' நாவலில் எழுதியிருந்த நுணுக்கமான பல கதாபாத்திர விவரணைகளின் வழியாக திரையில் தோன்றும் நடிகர்களின் உடல்மொழியை நம்மால் இன்னும் நெருக்கமாக்கிக் கொள்ள முடிகிறது. ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் அதன் திரையாக்கத்தில் ஒரு புதிய விஷயத்தை அவதானிக்கவும் முடிகிறது. இயக்குநர் பிரான்ஸிஸ் ஃபோர்ட் கொப்போலோ அனைத்து தொழில்நுட்ப முனைப்பின் வழியாகவும் அதைத் திறம்பட சாதித்திருக்கிறார்.*

*உலகம் எத்தனை நவீனத்துவத்தை அடைந்திருந்தாலும் குற்றங்களுக்குப் பின்புலமாகச் செயல்படுகின்ற மனித மனத்தின் அதிகாரப் பீடம் எதுவோ அதுவே சமூகத்தின் தலையெழுத்தையும் நிர்ணயிக்கிறது. அரசியல், மதம் இரண்டும் குற்றச் செயல்களுக்கு எப்படி நூதனமான ஒரு பின்னணியை அமைத்துக்கொண்டு சமூகக் காட்சிகளை தம் விருப்பப்படி எப்படியெல்லாம் ஆட்டுவிக்கிறது என்பதை காட்ஃபாதரின் மூன்று பாகங்களையும் பார்க்கும்போது துல்லியமாக அறிந்துகொள்ள முடிகிறது.*

elangomib@gmail.com ■





கவிதை

**அனிதா அருண்குமார்**

புதிய வீட்டிற்கு வந்த
விருந்தாளிகள்
பாலைத் தட்டிவிட்டு
புதிய பெயரை
மும்முறை கூறி கடைசியாய்
வீட்டிற்கு மியாவ் என்று பெயரிட்டனர்.
வீடு குடிக்கத் தொடங்கியது
பரவிக்கொண்டிருக்கும் பாலை.

anithaarunkumar66@gmail.com ■

எழுத்து

- தமிழிலக்கிய அமைப்பு




## விளம்பரம்

### "எழுத்து" தமிழிலக்கிய அமைப்பு
திருமதி சௌந்தரா கைலாசம் இலக்கியப் பரிசு
2024ம் ஆண்டுக்கான
ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம்) பரிசுக்கான
நாவல் போட்டி!

சிறந்த கதையம்சம் நிறைந்த நிகழ்கால சமூகப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்கிற நவீனத்துவம் நிறைந்த இதுவரை வெளிவராத புதிய படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. கணினி அச்சிட்டு "ஸ்பைரல் பைண்டிங்" செய்யப்பட்டு, 1x8 டெமி அச்சில் 200 பக்கம் முதல் 250 பக்கங்கள் வரையிலான பிரதிகள் மூன்று அனுப்ப வேண்டும்.

போட்டி தொடர்பான பரிந்துரைகள், கடிதங்கள் ஏற்கப்பட மாட்டாது. நடுவர் குழு மற்றும் அறங்காவலர் குழுவின் முடிவே இறுதியானது.

படைப்புகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : ஏப்ரல் 30, 2025

<u>நாவல்கள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

"எழுத்து" தமிழிலக்கிய அமைப்பு,
3C – "எல்டோராடோ"
112-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 – 28270931
செல் : 9486361884, 9841440410



சிறுகதை

வரத.இராஜமாணிக்கம்

# ரௌத்ரம்

கோயிலின் தெற்குப் பக்க பிரகாரத்தில் சாமியும் அவளையும் தவிர வேறு யாரும் இல்லை. பிரகாரம் முடியும் இடத்தில் இருந்த கல்லால் ஆன சாளரத்தில் இருந்து சின்னதாக காற்றும் வெளிச்சமும் கசிந்தவாறு இருந்தது.

தட்சணாமூர்த்திக்கு எண்ணெய் விளக்கு ஏற்றிய ஆர்த்தி அம்மா சொல்லிக் கொடுத்ததைப் போல சாமியிடம் வரம்வேண்ட மறந்திருந்தாள். கூப்பிய கரங்களும் மூடிய கண்களும் அவளை மற்றுமொரு சிலையாக மாற்றி இருந்தன. சாமியின் வலது கை வரம் கொடுக்கவும் இடது கை அபயம் அளிக்கவும் தயாராகக் காத்திருந்தது.

ஆர்த்தியின் அக்காவுக்கு பத்தொன்பது வயதிலேயே திருமணம் முடிந்துவிட்டது. ஆர்த்திக்கு இருபத்தைந்து வயது ஆகிறது. பெண் பார்க்க வரிசையாக வந்த மாப்பிள்ளைகள் ஒரு கட்டத்தில் நின்றுபோயினர். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பயம் வந்துவிட்டது. ஆர்த்திக்கும் ஒரு புதிய வாழ்க்கைக்கான காத்திருத்தலில் அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது தொப்பம்பட்டி ஜோதிடர் சொன்னார் என தட்சணாமூர்த்திக்கு தினமும் விளக்கேற்றிக்கொண்டிருந்தாள்.

“குருபலன் முடியும் முன்னரே எனக்கு திருமணம் ஆக வேண்டும்” என சாமியிடம் வேண்டுவதற்கு ஆர்த்தி வெட்கப்பட்டாள். குருபலன் காலம் முடியும் வரை அம்மா எண்ணெய் விளக்கு ஏற்றச்சொல்வாள் போல. மூடிய கண்களுக்குள் ஆர்த்தியின் விருப்பம் இல்லாமலேயே அவன் வந்துவந்து போய்க்கொண்டிருந்தான்.

மூலைக்கடையிலிருந்து கோவில் வாசல்வரை கொண்டுவந்து விடுபவன் கோவிலுக்குள் வராமல் வெளியே நின்றுகொள்வான். இப்படி பத்து நாட்களாக நடந்துகொண்டிருக்கிறான். ஒருவேளை கோவிலுக்குள் அதுவும் யாருமற்ற தெற்கு பிரகாரத்திற்கு அவன் வந்தால் அவனை முழுவதுமாக நேருக்குநேர் பார்க்க வாய்ப்புள்ளது. இந்த பத்து நாட்களில் ஓரிரு வார்த்தைகள் கூட பேசி இருக்கலாம். அவன் ஏன் கோவிலுக்குள் வருவது இல்லை? ஆர்த்தி அவனது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

இன்னும் சிறிது நேரத்தில் உச்சிக்கால பூஜைக்குப் பின்னர் கோவிலை மூடிவிடுவார்கள். கொடிமரத் திண்ணை முன்புறம் கால்களை தொங்கவிட்டு அமர்ந்தாள். மொட்டை கோபுர வாசல் கடந்து நவ்ரங் மண்டபத்திற்கு வெளியே கோவில் வாசல் ஆர்த்திக்கு தெரிந்தது. வாசலின் ஓரம் இருந்த பூ விற்கும் ஆயாவிடம் அவன் பேசிக்கொண்டிருந்தான். அங்கே இருந்து அவன் ஆர்த்தியை அடிக்கடி வலப்பக்கம் திரும்பி கவனித்துக்கொண்டிருந்தான்.

இடதுபக்க கால் பாதத்தைச் சுற்றி ஒரு சிற்றெறும்பு புருபுருவென ஊர்ந்துசெல்வதை ஆர்த்தி உணர்ந்தாள். அவளுக்கு அது பிடித்திருந்தது. காலின் மீது ஏறாதவரை பாதத்தில் எறும்பு நடமாடுவதை ஆர்த்தி அனுமதித்து அனுபவித்தாள். அவளது சிவந்த பாதத்தில் எறும்பு சுற்றிச்சுற்றி சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருந்தது. வெளியில் நிற்கும் அவனது இருப்பும் எறும்பின் ஊரலும் சேர்ந்து அவளுக்குள் ஒருவித கிளர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

“தென்னாடு உடைய சிவனே போற்றி... எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி” கைமணி தாளத்துடன் பெண் ஓதுவார் பாடும் பாடல் கோவில் முழுவதும் கணீரென்று ஒலித்தது. ஏற்கனவே கேட்ட பாடல்தான் என்றாலும் பெண் குரலில் கேட்பது புதிதாகவும் உவப்பானதாகவும் இருந்தது. எறும்புக்கு தேடியது கிடைக்கவில்லையோ என்னவோ பாதத்தை விட்டு இறங்கிவிட்டது. ஆர்த்தி வெளிவாசலைப் பார்த்தாள். அவனையும் காணோம். ஆர்த்திக்கு நேர் பின்புறம் இருந்த தங்க முலாம் பூசிய தகடுகளால் வேய்ந்த கொடி மரத்தின் பீடத்தில் பசுமாடு கன்றுக்குட்டிக்கு பால் கொடுத்துக்கொண்டிருந்தது. அது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. நாய்க்குட்டிகளும் பூனைக்குட்டிகளும் மொசுமொசுவென பால் அருந்துவதையும் பலமுறை பார்த்திருக்கிறாள். அப்போது தாய் நாயும் பூனையும் அரைக்கண்களை மூடி மெய்மறந்து படுத்திருப்பதைப் பார்த்து ஏக்கம் அடைந்திருக்கிறாள்.

ஆர்த்தி மொட்டை கோபுர வாசல் படிகளில் ஏற கால் வைத்தபொழுது கோபுரத்தின் மீது இருந்து மாடப்புறாக்கள் படபடவென கீழே இறங்கி மீண்டும் மேலே பறந்தது. சற்றுமுன் ஏற்பட்டிருந்த கிளர்ச்சி உணர்வு மீண்டும் ஆர்த்தியை ஆரத்தழுவியது. அவளது மனம் புறாக்களுடன் சேர்ந்து மொட்டை கோபுரத்தை நோக்கி ஜிவ்வெனப் பறந்தது. அவன் மீண்டும் வெளிவாசலுக்கு வந்துவிட்டான். அவளுக்கு சந்தோச மிகுதியில் சிரிப்பு வாய் நிறைய எட்டிப் பார்த்தது.

நவ்ரங் மண்டபத்தின் நடுநாயகமாக வடக்குப் பார்த்து நிற்கும் பத்ரகாளியம்மன் சிலை மண்டபத்தை கடக்கவிடாமல் ஆர்த்தியை அப்படியே இன்று நிறுத்திக்கொண்டது. தீப்பற்றி எரிவது போல தலைக்கிரீடத்துடன் இருந்த காளியின் தலை இடது பக்கம் லேசாக சாய்ந்து இருந்தது. இருபக்கமும் சேர்த்து பதினெட்டு கைகள். ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு விதமான போர்க்கருவிகள். காளியின் துருத்திய மார்புகளே ஆயுதங்களாக மாறி இருந்தன. அவை வாயின் இருபக்கமும் இருந்து இறங்கிய கோரைப்பற்களுடன் போட்டி போட்டன. கழுத்திலிருந்து வளைந்த இடுப்பிற்கு கீழே மண்டை ஓடுகளின் மாலையும் இடுப்பிலிருந்து இறங்கிய சேலையின் மடிப்புகளும் சாமியை தத்ரூபமாக மாற்றி இருந்தன.

கால்தண்டையின் கீழ் உறுதியான பாதங்களுக்கு இடையே சிறைப்பட்டு இருக்கும் வயிறு வீங்கிய சிறு உருவம்

உயிருக்குப் போராடியவாறு இருந்தது. ஆர்த்தி சிறு பிள்ளையாக இருக்கும்போது பத்ரகாளியம்மனைப் பார்த்து பயப்படுவாள். அம்மாவின் வற்புறுத்தலுக்காக அவளது சேலைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டே கண்களை கீழே இறக்கிக்கொள்வாள். பத்ரகாளியம்மனின் கால்களுக்கு இடையே சிக்கிக்கொண்டிருக்கும் அந்த சிறு உருவம்தான் ஆர்த்தியின் கண்களுக்குத் தெரியும். அய்யோ பாவம் என ஆர்த்திக்கு தோன்றும். அம்மாவிடம் அதைப்பற்றிக் கேட்டபொழுது "அவன் மகிசாசூரன். பத்ரகாளி விஸ்வரூபம் எடுத்ததால் அவன் சின்ன உருவமா தெரியறான். பத்ரகாளி அவன அழிச்சதுனால தான் நாமெல்லாம் உயிரோடு இருக்கோம்" என என்னவோ நேற்றைக்கு முதல் நாள் நடந்தது போல கண்களை விரித்துக்கொண்டு அம்மா சொன்னது ஆர்த்திக்கு ஞாபகத்திற்கு வந்தது.

நவ்ரங் மண்டபத்தை விட்டு கீழே இறங்கிய ஆர்த்தியின் கால் பாதங்களை சுடுமணல் சூழ்ந்துகொண்டது. மண்டபத்திலிருந்து கோவில் வாசல்வரை பரப்பி இருந்த ஆற்று மணலை அனலாக உச்சி வெயில் மாற்றி இருந்தது. நடுவில் நின்றிருந்த விளக்கு கல்தூணின் நிழல் நிலத்தில் படியவில்லை என்பதை கால் வேதனையிலும் ஆர்த்தி கவனித்தாள். தகிக்கும் மணலை கடக்கும் அவசரத்தில் ஓட்டமும் நடையுமாக வந்த அவளை அவன் கவலையுடன் பார்த்தும் பார்க்காமலும் இருந்தான்.

பூக்கார ஆயா போட்டிருந்த ஓலைத்தடுக்கு கூரைக்கு கீழேதான் ஆர்த்தி செருப்புகளை விட்டிருந்தாள். அவள் அவசரமாகக் காலில் செருப்பை அணிந்துகொண்டு ஆயாவை நிமிர்ந்து பார்த்தாள். ஆயா பொக்கை வாய் தெரிய சிரித்துக்கொண்டே "ஆத்தாடி அடிக்கற வெயில்ல செருப்பு போடாட்டி கால் ரெண்டும் பொசுங்கிப் போயிரும்" என்றாள். ஆர்த்தியும் சிரித்துக்கொண்டே பந்தல் காலைப் பிடித்துக்கொண்டிருந்த அவனை நெருக்கமாகப் பார்த்தாள். அந்தச் சிரிப்பு அவனுக்கானதாக இருந்தது.

அவன் வெளீர்நீல நிறத்தில் கறுப்புக்கட்டம் போட்ட சட்டையும் அடர் நீலநிற ஜீன்ஸ் பேண்ட்டும் அணிந்திருந்தான். நல்ல வளர்த்தியில் மாநிறத்திற்கும் கொஞ்சம் கூடுதல் நிறத்தில் இருந்தான். ஒதுக்கிய தாடியும் நெற்றியில் புரளும் முடியுமாக இளமை ததும்பும் முகத்துடன் இருந்தான். ஆயா குறுகுறுவென ஆர்த்தியையும் அவனையும் மாறிமாறிப் பார்த்தாள். ஆயாவுக்கு ஏதோ புரிவது போலிருந்தது.

"ஏம்ப்பா சாயபு மகனே... எதுக்கு இப்பிடி பந்தக்கால புடிச்சி தொங்கற? இடத்த காலி பண்ணு, நானும் கடைய காலி பண்ணனும்" என்று ஆயா சொன்னதும் அந்த இடத்தைவிட்டு அவன் மூலைக்கடையை நோக்கி மெதுவாக நகர்ந்தான். தலையைக் குனிந்தவாறே சென்ற ஆர்த்தியின் தலையிலிருந்து இடுப்புவரை இறங்கியிருந்த பின்னல் ஜடையும் இருபக்கமும் மலர்ந்த மல்லிகைச் சரமும் ஆயாவுக்கு பெருமூச்சை வரவழைத்தது.

"மாப்பிள்ளை கோயில் வாசல்ல தவமிருந்தானாம், பொண்ணு மாப்பிள்ளை வரம் வேண்டி கோயிலுக்கு போனாளாம்" என புதிதாக ஒரு சொலவடையை மனதிற்குள் சொல்லிப் பார்த்துக்கொண்ட ஆயா "எல்லாம் சாமி விட்ட வழி" என்றவாறே குறுக்குப் பலகையில் வைத்திருந்த பூக்கூடையை எடுத்து தலையில் சுமந்தவாறே வெயிலுடன் வீட்டுக்கு போனாள். ஈரம் படர்ந்து காவியேறிய ஈரல் துணிப்பூக்களை மாலைநேர வியாபாரத்திற்காக

வெயிலிடமிருந்து பத்திரப்படுத்திக் கொண்டிருந்தது.

கோவிலுக்கு நேர் எதிர்புறம் ரோட்டைத்தாண்டி தேர்முட்டி மண்டபம் இருந்தது. அதன் அருகில் கண்ணாடி மரப்பெட்டிக்குள் பார்வைக்கு தெரியுமாறு கட்டைத்தேர் நிலை நின்றது. தேர் மட்டுமல்ல தேரை பத்திரமாக பாதுகாத்து வரும் பிரமாண்டமான மரப்பெட்டியும் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டு இருந்தது. சுற்றிலும் நின்று பார்க்க அரைமணி நேரமாவது வேண்டும். வருடம் முழுவதும் ஆடாமல் அசையாமல் நிற்கும் தேர் தைப்பூசத்திற்கும் வைகாசி விசாகத்திற்கும் சர்வ அலங்காரத்துடன் சாமியை சுமந்துகொண்டு நான்கு ரத வீதிகளில் ஆடி அசைந்து வருவது காண கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வைகாசி விசாகத் திருவிழா ஆர்த்தியின் கண்களில் நிழற்படமாய் விரிந்தது. தேருக்கு முன்னால் வடம் பிடித்து இழுத்தவாறு பக்தர்களின் கூட்டம் அரோகரா என ஆர்ப்பரித்தது. பெண்கள் வரிசையில் ஆர்த்தியும் வடம் பிடித்திருந்தாள். மேல ரதவீதியை அடைத்து அன்ன நடை பயின்று வந்த தேர் அவ்வளவு அலங்காரமாக மண்ணுக்கும் விண்ணுக்கும் உயிர்த்தெழுந்து வந்தது.

மாரியம்மன் கோவிலில் இருந்து மூலைக்கடை வரை மேடாக இருக்கும் சாலையை தேர் கடந்துவருவது அவ்வளவு சுலபம் அல்ல. தேரின் பின்புறம் அய்யாத்துரை யானை தேர் சக்கரங்களை மாறிமாறி உந்தித் தள்ளியது. சக்கரங்கள் நிலை தடுமாறாமல் இருக்க இரண்டு பேர் சக்கரத்திற்கு அடியில் மாறிமாறி செதுக்கு மரக்கட்டையை கொடுத்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர்.

ஆர்த்தி உயிரைக் கொடுப்பது போல வடக்கயிற்றைப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தாள். தன்னால் மட்டுமே தேர் மேடேறும், விட்டுவிட்டால் தேர் பள்ளத்தில் இறங்கிவிடும் என்ற பயத்தில் கீழுதட்டை பற்களால் இறுக கடித்தவாறு மூச்சை அடக்கி இழுத்தாள். தன்னோடு சேர்ந்து நூற்றுக்கணக்கானோர் இழுப்பதையும் யானை பின்புறமாக தள்ளுவதையும் உணர்ச்சி வேகத்தில் மறந்திருந்தாள்.

அவளுக்கு நேர் எதிர்புறம் ஆண்கள் வரிசையில் வீரபத்ரன் வடம் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தான். நகராட்சி கடைவீதிப் பள்ளியில் ஐந்தாம்

வகுப்பு வரை உடன்படித்தவன். ஆர்த்தி... என அவன் சத்தமாக அழைப்பது கேட்டு சுயநினைவுக்கு வந்தவள் அவனை அடையாளம் கண்டுகொண்டு நட்புடன் சிரித்தாள். வீரபத்திரன் வேட்டியை முழங்கால் வரை மடக்கிக் கட்டி இருந்தான். முழுக்கைச் சட்டையை முழங்கை வரை மடக்கி விட்டிருந்தான். வடம் பிடித்திருந்த அவனது கைகளின் நரம்புகள் முறுக்கேறி இருந்தன. பெரிய மீசையை முறுக்கி விட்டிருந்தான்.

ஒருவேளை வீரபத்திரனால்தான் தேர் மேடேறி வருகிறதோ என சந்தேகப்பட்டவள் கால் விரல்களை விறைப்பாக ஊன்றி தம் கட்டி வடத்தை இழுத்தாள். அப்பொழுது தேர் கடக் என்ற சத்தத்துடன் ஓர் அடி முன்னேறியது. அதைப் பார்த்து வீரபத்ரன் சிரித்துவிட்டான். ஆர்த்திக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

இரு பக்கமாக நின்று இருவரும் தேரை இழுத்து வந்து நிலை சேர்த்த பெருமையுடன் ஒருவரையொருவர் நெருங்கினர். "ஒழுகும் மூக்குடன் ஓட்டை டவுசருடன் மஞ்சள் பையை தோளில் போட்டுக்கொண்டு வரும் வீரபத்ரனா இவன்" என ஆர்த்தி ஆச்சர்யத்துடன் பார்த்தாள். விரிந்த தோள்களுடன் உரம்

வாய்ந்த உடற்கட்டுடன் அவன் தலைநிமிர்ந்து வந்தான். அடர்த்தியான மீசைக்கு மத்தியில் வரிசையாக பற்கள் தெரிய அவன் சிரித்தது ஈர்ப்பாக இருந்தது.

ஆர்த்தி "நல்லா இருக்கியா பத்ரா" என கேட்டதிலிருந்த அன்பு வீரபத்ரனை நெகிழச் செய்தது. "எவ்வளவு வருசமாச்சு... இன்னும் நீ என்னை மறக்கலை இல்ல" எனக் கண்களில் நீர்படர அவன் கேட்டதும் பள்ளிக்கால ஞாபகத்தில் அவன் கைகளை இறுகப் பிடித்துக்கொள்ள ஆர்த்திக்கு தோன்றியது.

தேரை தள்ளி வந்து களைப்புற்ற யானைக்கு வாழைப்பழமும் கரும்புச் சர்க்கரையும் கொடுத்து ஆசுவாசப்படுத்த கோவிலுக்குள் பாகன் அழைத்துச் சென்றார். அதுவும் ஆசையாக பின்சென்றது. கால் சங்கிலி ஓசையுடன் அவ்வளவு பெரிய யானையின் பின்புறம் ஏறி இறங்கியவாறு சென்றதில் ஒய்யாரம் தெரிந்தது.

லேசாக இருள்படரத் துவங்கிய நேரத்தில் அலங்கார மின்விளக்குகள் நீலம் மற்றும் சிவப்பு நிறத்தில் கோவில் முழுவதும் ஒளிசிந்த ஆரம்பித்தது. தேர் நிலைக்கு வந்த பிறகும் கூட்டம் கலையவில்லை. ஒரே இரைச்சலாக இருந்தது. கோவிலுக்குள் இருந்து வந்த "உள்ளம் உருகுதய்யா முருகா... உன் அடிக்கால்களிலே" என்ற பாட்டு இரைச்சலுக்கு மத்தியில் ஒவ்வொருவருக்குள்ளும் மென்மையாக ஊடுருவிக் கொண்டிருந்தது.

திருவிழாவின் சூழலும் வீரபத்ரனின் அருகாமையும் ஆர்த்திக்கு புதுவித அனுபவத்தை ஏற்படுத்தியது. ஆர்த்தியின் உடல் முழுவதும் வியர்த்திருந்தது. தேரை இழுத்து வந்ததால் ஏற்பட்ட படபடப்பு கைவிரல்களில் இருந்தது. கோவில் வாசல் அருகே இவளுக்காக அம்மாவும் அப்பாவும் காத்து நிற்பது தெரிந்தது.

பக்கத்தில் ஆதம் சர்பத் கடையில் கூட்டம் அலைமோதியது. ஆர்த்திக்கு தாகமாக இருந்தது. சர்பத் குடிக்க வேண்டும் போலிருந்தது. அதைப் புரிந்துகொண்ட வீரபத்ரன் "ஒரு நிமிசம் இங்கயே நில்லு ஆர்த்தி" என்றவாறே கூட்டத்திற்குள் நுழைந்தான். அடுத்த ஐந்தாவது நிமிடம் இரண்டு கைகளிலும் கண்ணாடி டம்ளர்களுடன் வீரபத்ரன் கூட்டத்தை விட்டு வெளியே வந்து "ஆர்த்தி" என சத்தமாக அழைத்தான்.

கூட்டத்திற்குள் நின்றிருந்த நான்கைந்து நபர்கள் சத்தம் கேட்டு திரும்பி ஆர்த்தியையும் அவனையும் பார்த்தனர். ஆர்த்திக்கு அவர்களை அடையாளம் தெரிந்தது. ஆர்த்தி வீட்டுக் கோயில் விசேஷங்களிலும் உறவினர் சார்ந்த நல்லது கெட்டது நிகழ்ச்சிகளிலும் முன்னின்று வேலை பார்ப்பார்கள். அப்போது அவர்கள் ஒரே மாதிரி கலர் சட்டை அணிந்திருப்பார்கள். ஆர்த்தி அவர்களைக் கண்டுகொள்ளாமல் வீரபத்ரனை நோக்கிப்போனாள்.

ஐஸ் துண்டுகள் மிதக்கும் ஆரஞ்சும் சிவப்பும் கலந்த நன்னாரி சர்பத் நிறைந்த கண்ணாடி டம்ளரை ஆர்த்தியை நோக்கி வீரபத்ரன் நீட்டினான். டம்ளருக்கு வெளியே படர்ந்திருந்த பனித்திவலைகளில் படிந்திருந்த வீரபத்ரனின் விரல் ரேகைகளோடு ஆர்த்தி டம்ளரை பெற்றுக்கொண்டாள். வீரபத்ரன் ஒரே மூச்சில் சர்பத்தை குடித்து முடித்ததை ஆர்த்தி ஆச்சர்யத்துடன் பார்த்தாள். ஐஸ் துண்டுகள் தந்த சில்லிப்புடன் சர்பத் அமிர்தமாக ஆர்த்திக்கு இருந்தது. ஒவ்வொரு மிடறாக ருசித்துக் குடித்ததில் நன்னாரி வாசம் வாய் முழுக்க மணத்தது. கூட்டம் நெருக்கியதில் ஆர்த்திக்கு மிக அருகில் வீரபத்ரன் நின்றுகொண்டிருந்தான். அக்காவுக்கு கல்யாணமான புதிதில் அக்கா மாமாவுடன் இதே வைகாசி விசாகத்

திருவிழாவில் இப்படி சர்பத் குடித்தது ஞாபகத்திற்கு வந்தது.

ஆர்த்தி குடித்து முடித்துவிட்டு காலி கண்ணாடி டம்ளரை வீரபத்ரனிடம் கொடுத்த நொடியில் அவன் பின்னந்தலையில் அடி விழுந்தது. அடுத்த நொடி வீரபத்ரன் சமாளிப்பதற்குள் அந்த கலர் சட்டைக்காரர்கள் ஒன்று சேர்ந்து அவனை அடிக்க ஆரம்பித்தார்கள். "ஏண்டா யாரு வீட்டு புள்ளை கிட்ட எங்க வந்து பேசிட்டு இருக்கே" என அவர்களுள் ஒருவன் ஆத்திரத்துடன் கேட்பது ஆர்த்திக்கு கேட்டது.

இப்போது விஷயத்தை புரிந்து கொண்ட வீரபத்ரன் எதிர் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தான். அவன் குத்தியதில் ஒருவனது

மூக்கிலிருந்து ரத்தம் வழிந்தது. கூட்டம் சிதைந்தது. "நா பாத்துக்கறேன் ஆர்த்தி... நீ வீட்டுக்குப் போ" என்ற வீரபத்ரனை பிரிய முடியாமல் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஆர்த்தி கோவில் வாசலுக்கு வந்தாள். அவள் சற்றுமுன் குடித்த சர்பத் குமட்டிக்கொண்டு வெளியே வருவது போலிருந்தது.

"இவ்வளவு நேரம் எங்கடி போனே" என்ற அம்மாவிடம் சர்பத் கடை நோக்கி கை காட்டிய ஆர்த்தி தாளமுடியாமல் அம்மாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். அவளுக்கு பேச்சு வரவில்லை. சற்று நேரத்தில் கலர் சட்டைக்காரர்கள் வந்துவிட்டார்கள். "பாப்பாவ பத்திரமா வீட்டுக்கு கூட்டிட்டு போங்க" என கூறிவிட்டு ஒன்றும் நடக்காதது போல சென்றுவிட்டனர்.

அருகில் சிவப்புநிற ஆட்டின் கேஸ் பலூனை பறக்க விட்டு விளையாடிக்கொண்டிருந்த சிறுமியின் கைகளின் குறுக்கே மாடு போல ஒரு மனிதன் கடந்து சென்றதில் நூல் அறுந்து கேஸ் பலூன் தேருக்குமேல் பறந்து

சென்றது. கையை விட்டு பலூன் போன ஏமாற்றத்தில் அந்தச் சிறுமி சந்தோஷத்தை இழந்து கத்திக் கூப்பாடு போட்டாள்.

ஆர்த்திக்கு அதிர்ச்சியாகவும் குழப்பமாகவும் இருந்தது. வீரபத்ரனும் வீட்டுக்குப் போ என்றான். அவனிடம் தகராறு செய்த நபர்களும் வீட்டுக்குப் போ என்றனர். "இப்பொழுது என்ன நடந்துவிட்டது. ஊரே தேர் திருவிழாவில் இருக்கும்போது நான் மட்டும் ஏன் வீட்டுக்கு போகவேண்டும் அதுவும் பத்திரமாக" என ஒரு கணம் யோசித்தவள் சிறு வயதிலிருந்து ஓடி விளையாடிய கோவில் அன்னியப்பட்டதைப் போல உணர்ந்தாள். "அம்மா வாம்மா வீட்டுக்குப் போகலாம்" என அவளே அழைத்தாள். அதற்குப் பிறகு நீண்ட நாட்கள் அவள் வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. வீரபத்ரனை சந்திக்கும் வாய்ப்பும் ஆர்த்திக்கு கிடைக்கவில்லை.

இப்போது குருபலன் கூடிவந்து இருப்பதாகவும் முடியும் முன்னர் மாப்பிள்ளை அமைய வேண்டும் என எண்ணைத் தூக்குடன் ஆர்த்தி வீட்டுக்கும் கோயிலுக்கும் போய் வந்துகொண்டிருந்தாள். "அததுக்கு காலகாலத்துல நடக்க வேண்டியது நடந்திரணும்" என அடிக்கடி ஆச்சி பல்லி குறி சொல்வதைப் போல உச்சுக்கொட்டு போட்டவாறு சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போதெல்லாம் அம்மா நெளிவாள். அப்பா செய்தித்தாளுக்குள் முகம் புதைத்துக்கொள்வார்.

வீட்டுக்குப் பாரமாக இருக்க ஆர்த்தி விரும்பவில்லை. "மாப்பிள்ளை எப்படி அமைந்தாலும் சமாளித்துக்கொள்ளலாம் வீட்டைவிட்டுப் போனால் போதும்" என தீர்மானகரமாக இருந்தாள். கடைசியாக வந்த மாப்பிள்ளை நன்கு தொப்பை போட்டு இருந்தார். பின்னாடி தலைமுடி

உதிர்ந்து வட்டமாக இருந்தது. கையில் கனமாக பிரேஸ்லெட்டும் கழுத்தில் வடச்செயினும் தங்கத்தில் மின்னியது. வயது முதிர்ந்திருந்தார்.

அம்மா உள்ளறைக்குள் அழைத்துச்சென்று ஒரே வார்த்தையில் கேட்டாள். "புடிச்சிருக்கா" ஆர்த்தி சிறிது நேரம் தலை குனிந்திருந்தவள் "புடிச்சிருக்கு" என்பது போல தயக்கத்துடன் தலையை ஆட்டினாள்.

அம்மாவுக்கு அழுகை வந்துவிட்டது. ஆர்த்தியின் மனதைப் புரிந்துகொண்டவள் போல "நான் பார்த்துக்கறேன்" என சாடை செய்துவிட்டுப் போனாள். பிறகு அந்த மாப்பிள்ளை வேண்டாம் என அம்மாவே சொல்லிவிட்டாள். ஆச்சிக்கு வந்த கோபத்தில் "ஆமாம் ஒம்பொண்ண கட்டிக்க பட்டத்து எளவரசன் பரியேறி வருவான்" என அம்மாவைப் பார்த்து கழுத்தை நொடித்தாள். ஆர்த்திக்கு அவமானமாக இருந்தது. "திருமணம் ஆகாவிட்டால் என்ன வீட்டோடு இவர்கள் வைத்துக்கொள்ள மாட்டார்களா" என மனம் வெதும்பினாள்.

ஆர்த்தி அங்கப்பன் கடையை கடந்துகொண்டு இருந்தாள். "அங்கப்பன் ஜெனரல் மெர்ச்செண்ட்ஸ்" என கடைக்கு மேல்புறம் புதுப்பொலிவுடன் போர்டு மாட்டப்பட்டு இருந்தது. போர்டு புதிதாக இருந்தாலும் இருபது வருடங்களுக்கு முன்பு இருந்த அடர் நீலநிறப் பின்புலத்தில் வெள்ளை நிறத்தில் எழுத்துக்கள் எழுதப்பட்டு இருந்தன. பள்ளிச் சிறுமியாக இருக்கும்போது அங்கப்பன் கடைக்கு வருவது என்றால் ஆர்த்திக்கு கொண்டாட்டமாக இருக்கும்.

கோடைகால விடுமுறை முடிந்து பள்ளி துவங்கும்போது நோட்டுப் புத்தகங்கள் வாங்க அங்கப்பன் கடைக்கு அப்பா அழைத்து வருவார். கடை முழுக்க விதவிதமான பென்சில், பேனா, டிராயிங் ஷீட், அழி ரப்பர், ஷார்ப்னர், ஸ்கெட்ச் என நிறைந்திருக்கும். இதுதவிர குழந்தைகளுக்கான மிட்டாய், சாக்லெட், பிஸ்கெட்களும் கலர் கண்ணாடி டப்பாக்களில் கண்சிமிட்டும். முகப்பவுடர் டின்கள், ஹார்லிக்ஸ், போர்ன்விட்டா சீசாக்கள் அருகில் அழைக்கும்.

ஆர்த்திக்கு அங்கப்பன் கடை வாசம் ரொம்ப பிடிக்கும். அந்த வாசம் வேறெங்கும் கிடைக்காது. புது நோட்டு மற்றும் புத்தகங்களை விரித்து ஆர்த்தி நன்கு சுவாசிப்பாள். அந்த வாசம் கொடுக்கும் மகிழ்ச்சியில் ஆர்த்தி திளைப்பாள். எல்லாவற்றையும் வாங்கிய பிறகு அங்கப்பன் ஆர்த்தியிடம் சாக்லெட் ஒன்றைக் கொடுத்துவிட்டு "நல்லா படிக்கனும்" என்பார். ஆர்த்தியும் உற்சாகமாகத் தலையாட்டுவாள்.

அங்கப்பன் இறந்துவிட்டார். அவரது மகன் கடையில் உட்கார்ந்திருந்தார். ஆர்த்திக்கு கடைக்குள் நுழைந்து வாசம் பிடிக்க ஆசையாக இருந்தது. சிறுமியாக இருந்தபோது உலகம் பெரியதாக தெரிந்தது. வளர்ந்த பிறகு நான்கு சுவர்கள் கொண்ட அறை மட்டுமே மிச்சமாக உள்ளது. அங்கப்பன் கடை கொடுத்த சின்னச்சின்ன சந்தோஷங்கள் எல்லாம் எங்கே ஓடிச்சென்று மறைந்தன என்று காலத்தை கணித்துக் கொண்டிருந்த சூரியனைப் பார்த்து ஆர்த்தி கேட்டாள். சூரியன் நடுவானிலிருந்து மேற்கு நோக்கி சாய்ந்து பதில் சொல்ல முடியாமல் தவித்தது.

தேர் முட்டியிலிருந்து மூலைக்கடை நோக்கி வரும் மேற்கு ரதவீதி அகலசகலமாக இருந்தது. மதியம் பனிரெண்டு மணிக்கு மேலாகிவிட்டது. வெயிலின் தாக்கத்தினால் மனிதர்கள் நடமாட்டம் குறைந்து வீதி கம்மென்று இருந்தது. அப்பாஸ் புரோட்டா கடையிலிருந்து "முத்துக்களோ கண்கள்

தித்திப்பதோ கன்னம்" என்ற பழைய சிவாஜி பாடல் வெயிலுக்கு இதமாக பன்னீரைத் தெளித்தது.

மூலைக்கடைக்கு தென்புறமாக பள்ளிவாசல் தெரு ஆரம்பிக்கிறது. மதியத் தொழுகைக்கான பாங்கு ஒலி பெருக்கியின் மூலம் பள்ளிவாசல் தெருவைக் கடந்து மேற்கு ரதவீதியையும் நிறைத்தது. பாங்கு ஓசை ஒலித்தவுடன் வீதியின் மிச்சம் மீதி சத்தங்களும் அடங்கியது போல ஆர்த்தி ஆச்சர்யமாக உணர்ந்தாள்.

அவன் தேர்முட்டியிலிருந்தே முன்னும் பின்னுமாக ஊடாடிக் கொண்டிருந்தான். அருகில் வருவதும் விலகுவதுமாக கண்ணாமூச்சி ஆட்டம் ஆடும் அவனைப் பிடித்து நிறுத்திப் பேச வேண்டும் என்று ஆர்த்திக்கு தோன்றியது. வீதியின் இடதுபக்க கடைகளைப் பார்ப்பது போல அவனைக் கவனித்தாள். ஆர்த்தி பார்க்கும்போது கூச்சத்துடன் குனிந்துகொள்ளும் அவன் தலை இன்று நிமிர்ந்து இருந்தது. ஆர்த்தியின் விழிகளை நேருக்குநேர் பார்த்தான். அவனது கண்களில் அன்பும் ஆசையும் இரண்டற கலந்திருந்தது. அவன் வாய் பேசத் துடிப்பதை அறிந்த ஆர்த்திக்கு இன்று அவன் எப்படியும் பேசிவிடுவான் எனப் பதைபதைப்பாக இருந்தது.

மூலைக்கடை நெருங்கிவிட்டது. அவள் வலது பக்கமாக தெற்கு ரதவீதியில் திரும்பி வீட்டுக்குப் போக வேண்டும். அவன் நேராக பள்ளிவாசல் தெருவுக்குள் போய் விடுவான். பாங்கு ஓசைக்கிடையே அவன் பேசிவிட வேண்டும் என ஆர்த்தி பத்ரகாளி அம்மனை வேண்டினாள். அவள் எதிர்பார்த்தைப் போலவே அவன் அவளுக்கு மிக அருகில் வந்துவிட்டான். பேசுவதற்காக அவனது உதடுகள் மெலிதாக அசைந்தது.

"ஏண்டா அந்தப் பொண்ணு யாருன்னு தெரிஞ்சிகிட்டுத்தான் இப்பிடி பின்னாடியே சுத்தறியா" எனக் கேட்டவாறே ஒரு கலர் சட்டைக்காரன் அவனைப் பின்னந்தலையில் ஓங்கி அடித்தான். மற்றொரு கலர் சட்டைக்காரன் "வக்காளி ஒனக்கு வேற பொண்ணு ஒன்னும் கெடைக்கலியாடா எங்க பொண்ணுதான் கெடைச்சாளா" என அவனது இடது கையை முறுக்கி குனியவைத்து முதுகில் முரட்டுத்தனமாக குத்தினான். உடன் வந்த மற்றும் மூன்று பேர் அவனைத் தூக்கிக் கீழே போட்டு கண்மண் தெரியாமல் அடித்து உதைத்தனர். அவ்வளவு அடிக்கும் மத்தியில் அவனது பார்வை ஆர்த்தியின் கண்களிலேயே தங்கி இருந்தது. எங்கே இவ்வளவு மனிதர்கள் இருந்தார்கள் என்று தெரியவில்லை. ஒரு பெரும் கூட்டமே கூடிவிட்டது. ஒருவரும் அவர்களைத் தடுக்கவோ அவனைக் காப்பாற்றவோ முன்வரவில்லை.

அந்த இடத்திலேயே அசையாமல் நின்றிருந்த ஆர்த்தியை நோக்கி ஒரு கலர் சட்டைக்காரன் "நீ போம்மா வீட்டுக்கு" என கூறினான். ஆர்த்திக்கு ரௌத்ரம் பொங்கியது. "நீ யார்ரா என்னை வீட்டுக்கு போகச் சொல்றதுக்கு" எனக் கண்களை விரித்துக் கத்தியவள் அவனது கன்னத்தில் பளாரென ஓர் அறை விட்டாள். பிறகு "அவன அடிக்கிறத மொதல்ல நிறுத்துங்கடா" என குரலை உச்சஸ்தாயில் உயர்த்தி உத்தரவிட்டாள். ஒட்டுமொத்தக் கூட்டமும் அவளைப் பார்த்தது. ஆர்த்தியின் இரண்டு கைகளும் பதினெட்டு கைகளாக மாறின. அவளது தலைக்குமேல் தீப்பிழம்புகளுடன் கூடிய கிரீடம் பற்றி எரிந்தது. கண்கள் கோவைப்பழம் போல சிவந்தது. வாயின் இரண்டு பக்கமும் கோரைப்பற்கள் இறங்கியது. அவள் பத்ரகாளியாக மாறியிருந்தாள்.

அவர்கள் அவனை அடிப்பதை நிறுத்திவிட்டார்கள். கூட்டம் பத்ரகாளியின் தோற்றத்தில் அருள் ஏறி நிற்கும் அவளைப் பார்த்து பயத்திலும் பக்தியிலும் விலகி

நின்றது. கலர் சட்டைக்காரர்கள் பயத்தில் என்ன செய்வது எனத் தெரியாமல் திகைத்துப் போயிருந்தனர். ஆர்த்தி அவர்களைப் பார்த்து "இனிமே நான் இருக்கற பக்கம் தல வச்சு கூட படுக்கக்கூடாது ஓடுங்கடா" என நாக்கைத் துருத்தியவாறு கத்தியதும் அவர்கள் திரும்பிப் பார்க்காமல் ஓடினார்கள்.

ஆர்த்தி கீழே விழுந்து கிடந்த அவனை கைகொடுத்து தூக்கியெழுப்பி நிறுத்தினாள். அவனைப் பார்த்து "பத்திரமாக வீட்டுக்குப் போ" எனக் கூறினாள். ஒரு வயதான பெண்மணி மட்டும் அருகில் வந்தவள் ஆர்த்தியின் தலையில் கை வைத்து ஆற்றுப்படுத்தினாள். ஆர்த்தி குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கேட்டாள்.

varatharajamanickam@gmail.com ■



# உள்ளொளி

கவிதை
**செ.புனிதஜோதி**

முதிராதக் கனியென
உன் கிளையில்
தொங்கிக் கொண்டிருந்தது
எனக்கானச் சொல்
வேறு வழியின்றி
இப்போது நிலமென
மாறத் தொடங்கியிருந்தேன்.

தாகம் தணியாமல்
தவித்து நிற்கும்
என்னிடத்தில்
கடல் நீராய் வந்துசேர்கிறாய்
நன்னீராய் மாற்றுவதில்
இருக்கிறது கவனம்.

கிளை முறிந்த இடத்தில்
மீண்டும் கிளர்த்தும்
தளிரைப்போல்
எனக்குள் தேடி
எனக்குள் தொலைந்து என்னை
குறையாத குடமாக்குகிறது
உன்சொல்.

கானல்நீர் எனத் தெரிந்தும்
வரைகிறாய் வானவில்லை
சேர்த்துக்கொள்ள முடியாமல்
தவிக்கிறது என் வானம்

இருள் நீக்கி,
ஒளியேற்றி விட்டு சென்றாய்
அதில் சுடர்வது
நீயா? நானா?

இருக்கிறாயா
இல்லையா நீ
என் தேடுதலுக்குள் தான்
நிறைந்திருக்கிறாய்
உன்னால் நானும்
நிரம்பிக்கொண்டிருக்கிறேன்

எனக்கான ஒளியும் இருளும்
உன் வாசலில் இருந்துதான்
வருகிறது
ஒரு வழிப்போக்கனைப்
போலாவது
என்னோடு உறவாடு

punitha010577@gmail.com ■



கட்டுரை

ஈழபாரதி

# ஐந்திணை நிலமும் ஆறாம் திணை அகதியும்

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மிகச் சிறப்பாக நடைபெற்றது கவிஞர் ஈழபாரதியின் ஐந்திணை நிலமும் ஆறாம் திணை அகதியும் கவிதை நூல் வெளியீட்டு விழா.

13 அக்டோபர் ஞாயிறு மாலை 3 மணி அளவில் தொடங்கிய ஈழபாரதியின் புத்தக வெளியீட்டு விழாவிற்கு பரிசின் மூத்த கலைஞரும் குறும்பட இயக்குனருமான திரு குமாரசாமி பரராசா அவர்களின் தலைமையில் மங்கல இசையுடனும் மங்கல விளக்கேற்றலுடனும் விழா ஆரம்பமானது.

இறை வணக்கத்தையும் பாரதியாரின் பாடலையும் செல்வி இமையா திவாகர் மற்றும் ஜுவேனா அன்றூஸ் இருவரும் அழகுத் தமிழில் இனிமையான குரலிலும் வழங்கியிருந்தனர்.

திரு.ரெஜி வாஷிங்டன் அவர்களின் வரவேற்புரையும் அதனைத் தொடர்ந்து கலாசுரபி கலையக மாணவர்களின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. இதனை நடன ஆசிரியர் ‘ஆடற் கலைச்செல்வி’ திருமதி ஜோஷிட்டா ஜெரார்ட் அவர்களின் மாணவ குழுவினர் வழங்கி சிறப்பித்து இருந்தனர்.

கவிஞர் ஈழபாரதியின் ஐந்திணை நிலமும் ஆறாம்திணை அகதியும் நூலினை தமிழ்ச் செம்மல் கவிஞர் தங்கம்மூர்த்தி அவர்கள் வெளியிட, அரங்கம் அதிர, பேச்சாளரும் நடுவருமான திரு. கணேஷ் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

ஈழபாரதியின் கவிதைகளை முன்வைத்து ‘நிலம்’ என்னும் தொனிப்பொருளில் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இந்த நாடகத்தில் ஸ்ரீ தயாளன் மற்றும் லலித் குமார் முபில் ஜனா மற்றும் ரைசன் மற்றும் கயல் போன்றவர்கள் நடித்திருந்தார்கள். இந்நாடகத்தினை சங்கீதா தர்ஷன் அவர்கள் இயக்கியிருந்தார்.

நூல் குறித்து நூலாசிரியர் குறித்தும் அறிமுக உரையை திருமதி நிஷாந்தினி திவாகர் அவர்கள் உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அருட்தந்தை அகஸ்டின் பிரபு






அவர்களின் வாழ்த்துரையும் நூல் குறித்து திருமதி அனுசுயா ஆனந்த ரூபன் அவர்களின் நயவுரை இடம்பெற்றது.

நூலினை வெளியிட்ட கவிஞர் தங்க மூர்த்தி அவர்களின் சிறப்புரையுடனும் கவிஞர் ஈழபாரதியின் அவர்களின் ஏற்புரையும் திருமதி சின்னமலர் நகுலேஸ்வரன் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

பிரைன் கலைநதி கலை மாணவர்களின் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இதனை நடன ஆசிரியர் ரோஸ்லின் டயஸ் நெறிப்படுத்தியிருந்தார்.

நிகழ்ச்சிகளை திருமதி பிரியா லவன் அவர்களும், செல்வி பிரவீனா அவர்களும் நெறியாளுகை செய்திருந்தனர்.

jcinixon@gmail.com ■




திருக்குறள் அறன் வலிஉறுத்தல் அதிகாரத்தில் ஒரு குறள்.

*வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதொருவன்*
*வாழ்நாள் வழிஅடைக்கும் கல்.*

*வீழ்நாள்* என்றால் *வீணான நாள் அல்லது நாள் தவறாமல்* எனப் பொருள்படும். *வீழ்நாள் படாஅமை நன்று ஆற்று* என்றால் *நாள் தவறாமல் அறம் செய்க* என்பதாகும். வள்ளுவர் நமக்கு அறிவுறுத்தும் செய்தியும் அதுதான்.

ஆனால், *அஃதொருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல்* என்ற வரிக்கு உரை எழுதும்பொழுதுதான், பலர் வழிதடுமாறுகின்றனர்; வழுக்கியும் விழுகின்றனர்.

மணக்குடவர், காளிங்கர், பரிமேல் அழகர், பரிதியார் உள்ளிட்ட பழம் உரையாசிரியர்கள், வாழ்நாள் வழி அடைக்கும் கல் என்பதற்கு அடுத்தடுத்து பிறக்கும் பிறவியைத் தடுக்கும் கல் எனப் பொருள் கூறி உள்ளனர். இதற்கு ஆதரவாகப் பிறவிப் பெருங்கடல் நீந்திக் கரை சேரலாம் என்ற இன்னொரு திருக்குறளையும் துணைக்கு அழைக்கலாம். அந்தக் குறளின் மெய்ப்பொருள் என்னவென இன்னொரு கட்டுரையில் ஆராயலாம்.

எல்லாரும் சொர்க்கத்துக்குப் போக ஆசைப்படுகிறார்கள். அதே வேளையில் இறந்துபோக யாருமே விரும்புவது இல்லையே. இந்த முரணை எண்ணிப் பாருங்கள். ஆக எல்லா மனிதர்களும் வாழவே ஆசைப்படுகிறார்கள்

*நீடு வாழ்வார்* என்ற சொல்தொடரை எழுதியவரும் வள்ளுவர்தான். அதன்படி, மக்கள் நீடு வாழ வேண்டும் என்பதுதான் அவரின் நோக்கம். வாழக் கற்றுக் கொடுப்பதுதானே திருக்குறள்.

"இந்த உலகம் துன்ப மயமானது."

"மறுபிறவி உண்டு."

நாம் இந்தப் பிறவியில் பாவம் செய்யாவிட்டால் இறைவனை அடையலாம். பாவம் செய்தால் மீண்டும் மீண்டும் இந்த உலகில் நாயாய் நரியாய்ப் பிற உயிரியாய்ப் பிறந்து துன்பம் அடைய நேரிடும்.

இந்த உலகில் நாம் தீமை செய்தால் நரகத்தில் தண்டனை கிடைக்கும். நன்மை செய்தால் சொர்க்கத்தில் மகிழ்ச்சியில் திளைக்கலாம்.

இந்தக் கருத்துகள் எல்லாம் காலம் காலமாக நம் மக்களின் மனதில் கொண்டுசெல்லப்பட்டு வருகின்றன. இவற்றை மெய்ப்பிக்க எந்த ஆதாரமும் கிடையாது.

ஆனால் நம் முன்னோர்கள் ஏன் இந்த அறிவுக்குப் பொருந்தாத கருத்துகளை மக்கள் மனதில் பதித்துவந்தார்கள் என்ற கேள்வி எழுகிறது. அவர்களின் எதிர்பார்ப்புதான் என்ன?

ஆனாலும் அதை நல்நோக்கத்தில் சிந்தித்துப் பார்த்தால், அதிலும் ஒரு பயன் இருப்பது தெரியவரும்.

மனித மனம் விசித்திரமானது. ஒன்றை நம்பிவிட்டால், அதுவே மெய்யென உறுதி கொண்டுவிடும். அதை மாற்றுவது என்பது எளிதான செயல் இல்லை. அறிவா நம்பிக்கையா என வந்தால் பெரும்பாலும் மனது நம்பிக்கையின் பக்கமே சாய்ந்து விடுகிறது; சார்ந்துவிடுகிறது.

ஒரு மனிதரை இயக்க, ஒன்றை நோக்கிச் செயல்படுத்த உளவியலில் இரண்டு வழிமுறைகள் உண்டு. ஆசையைத் தூண்டி நல்வழிப்படுத்துவது ஒன்று; அச்சுறுத்தித் தீயவழியில் செல்வதைத் தடுப்பது இன்னொன்று.

நம் முன்னோர்கள் இந்த இரண்டு வழிமுறைகளையும் கையாண்டு சமூக வாழ்வைச் சீர்படுத்த முயன்றார்கள். சமய அன்பர்களின் நோக்கமும் வள்ளுவர் சொன்னதுபோல், நாள்தோறும் அறம் செய்க என்பதுதான். அப்படி செய்யாவிட்டால் என்ன என்று எதிர்க்கேள்வி மக்களிடையே எழும். அறம் செய்வதை அலட்சியமாக அவர்கள் நோக்கவும் கூடும். இந்த நிலையில்தான் அறம் செய்தால் உனக்குச் சொர்க்கம் கிடைக்கும். இறைவனிடம் அடைக்கலம் ஆகலாம் போன்ற ஆசை வார்த்தைகள் கூறி, அறம் செய்யவும்; ஒழுக்கமாக இருக்கவும் ஊக்குவித்தார்கள். அறம் செய்யாமல் போய்விட்டால் நரகத்தில் எண்ணெய்ச் சட்டியில் வறுபடுவாய் எனவும் அச்சுறுத்தினார்கள்;

ஆனால் இன்றைய அறிவியல்படி சிந்தித்துப் பார்த்தால் அவற்றில் எதுவும் உண்மை இல்லை. கடந்த காலங்களைவிட இன்று மக்கள் மிகுந்த அறிவைப் பெற்றிருக்கிறார்கள். நிறைய சிந்திக்கவும் செய்கிறார்கள். அறிவியல் வளர்ச்சியும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது.

இந்நிலையில்... ஆதாரமற்ற நம்பிக்கைகளைச் சொல்லித் திருத்த நினைப்பதைவிட, அறிவான வழிமுறைகளில் திருத்துவதே உகந்த முறை. அந்த முறையில் திருக்குறளுக்கு உரை காண்பதே சரி என நினைக்கிறேன். அப்படியானால், வழி அடைக்கும் கல் என்பதற்குப் பிறப்பைத் தடுக்கும் கல் என்று பொருள்கொள்ள முடியாது.

வழக்கறிஞர் கு.ச. ஆனந்தன் அவர்கள் வழி அடைக்கும் கல் என்ற சொல் தொடருக்கு வழிஅமைக்கும் கல் என்று பாடம் இருக்கிறது என்கிறார். திருக்குறளை ஓலைச்சுவடிகளில் காலம் காலமாய் எழுதி வருகிறபொழுது... படி எடுக்கின்றபொழுது அவ்வாறு நேரிடவும் வாய்ப்பு உண்டு. தமிழ்த்தென்றல் திரு வி கலியாண சுந்தரம் அவர்களும் வழி அமைக்கும் கல் என்ற பொருளில்தான் இந்தக் குறளுக்கு உரை எழுதி இருக்கிறார். அது, அறிவியலுக்கு ஏற்றதாகவும் அமைந்துவிடுகிறது.

புலவர் குழந்தை போன்றோர் வாழ்நாளில் வரும் தீமைகளைத் தடுக்கும் கல் என்று பொருள் கூறி இருக்கின்றார்கள். அதனை ஒட்டியே நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் உரை எழுதியுள்ளார்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதுபோல், வழி அடைக்கும் கல் என்பதை நேரடியாகப் பார்த்தால், ஒரு வழியை மூடும் கல் என்றே பொருள் தருகிறது. வாழ்நாள் வழி என்பதைப் பிறவி எடுத்தலுக்கான காரணம் எனச் சமயக் கருத்தோடு பொருத்திப் பொருள்கொள்வது எளிதாக இருக்கிறது. அப்படி இருக்க, இவர்கள் ஏன், தீமை வரும்வழி என்று பொருள் கொள்கிறார்கள்? தீமை என்ற சொல்லாவது அந்தக் குறளில் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

குறளில் வரும் இரு சொற்களுக்கு இடையில் நுழைந்து ஒரு பொருளைத் தருவித்தோ ஊகித்தோ உரை எழுதுவது ஒரு முறை. மேலும் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் தமிழில் உண்டு. ஏழு சீர்கள் மட்டுமே கொண்ட செய்யுள். அதனால் சீர்களுக்கு இடையே சொல்லும் பொருளும் தொக்கிவர வாய்ப்பு உண்டு. குறளின் பொருளை நிகழ்காலத்துக்குப் பொருத்திப் பார்ப்பதன் தேவை. இந்தக் காரணங்களால்தாம் திருக்குறளுக்குப் புதுப்புது உரை எழுத முடிகிறது. அதற்குத் திருக்குறளும் இசைகிறது.

அடைக்கும் என்பதற்கு மூடுதல் என்பதோடு தூர்த்தல் என்ற பொருளும் உண்டு அடைக்கும் என்ற சொல்லை அப்படியே எடுத்துக்கொண்டு, வேறு வகையில் பொருள் சொல்லவும் வாய்ப்பு இருக்கிறது.

ஒவ்வொரு பாதையும் கல்பரப்பி அதாவது கல் அடைத்து உருவாக்கப்படுகிறது. நாள்தோறும் அறம் செய்பவர்களின் வாழ்க்கைப் பாதையைச் சீரமைத்து வாழ்க்கைப் பயணத்தைச் சுகம் ஆக்குவதுதான் அடைக்கும் கல் என்று பொருள்கொள்ள முடிகிறது. வாழ்க்கைப் பாதையில் எதிர்கொள்ளும் துயரப் பள்ளங்களைத் தூர்ப்பதையும் அடைக்கும் கல் என்பது உணர்த்தும். இந்தக் கருத்துக்கு ஆதரவாகக் கலைஞர் மு. கருணாநிதியின் உரையும் அமைந்திருக்கிறது. அவருடைய உரை இதுதான்:

"பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடர்ந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்."

கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் இந்த உரை ஏற்கத் தக்கது. குறளின் சொற்களை அப்படியே எடுத்துக்கொண்டு, பொருத்தமான உரை எழுதி இருக்கிறார்.


குறளில் வரும் வாழ்நாள் என்ற சொல்லை ஆராய்ந்து பார்ப்போம். இன்பம் – துன்பம், நல்வினை – தீவினை, நன்மை - தீமை என்பன போல்தாம் வாழ்நாள் - வீழ்நாள் ஆகியவை. இவை, எதிரெதிர்த் தன்மைகள் கொண்டவை.

வீழ்நாள் என்பது வீணான நாள் அல்லது வீழ்ச்சியான நாள் எனப் பொருள் தரும். வாழ்நாள் என்பது பயனுடைய நாள் அல்லது வாழ்ந்து காட்டும் நாள் எனப் பொருள் தரும். இங்கே வாழ்நாளைத்தான் உயர்த்திப் பிடிக்கிறார் வள்ளுவர். எனவே வாழ்நாளைத் தடுக்கச் சொல்லவில்லை. அறம் செய்து ஒவ்வொரு நாளையும் பயனுடையதாக ஆக்கி நீடு வாழ்க என்றுதான் வாழ்த்தி இருக்கிறார். ஆக வழி அடைக்கும் கல் என்பது பிறவியைத் தடுக்கும் கல் இல்லை. அறம் செய்து வாழ்வை மேலும் உயர்த்தும் படிக்கல்தான் அது. படிக்கல் என்பதும் நிலத்தை அடைக்கும் கல்தானே!

திருக்குறளுக்கு இன்றைய வாழ்நிலையில் என்னவாக பொருள் இருக்க முடியும் என்று சிந்திப்பதே நிகழ்காலத் தேவையாகும். இந்தக் குறளுக்கு இப்படி எளிதாகப் பொருள் கொள்ளலாம்.

நாள் தவறாமல் நன்மை செய்துவந்தால்... அதுவே, வாழ்க்கைப் பாதையில் படிக்கல் ஆகும்.

malaranicham@gmail.com ■



சிறுகதை

உஷாதீபன்

# தவறிச் செய்த தவறு

“சார்...தொட்டி நிரம்பி வழியுது... நிப்பாட்டுங்க....”

பக்கத்து வீட்டு அம்மாள் கத்திய சத்தம் யார் காதிலும் விழுந்த மாதிரி தெரியவில்லை. எல்லோரும் அவரவர் குச்சிலுக்குள் அடைந்து கிடக்கும்போது எப்படி விழும்? இவருக்கு மட்டும் விழுகிறதே... அதுதான் துரதிருஷ்டம்...!

மோட்டார் போட மட்டும் தெரிகிறது எல்லாருக்கும். கீழே போய் வெறுமே ஸ்விட்சை தட்டுவதுதானே? அதை நேரம் பார்த்து அணைக்கத் தெரியவேண்டாம்? தண்ணீர் ஏறுகிறதா, சம்ப்பில் தண்ணீர் இருக்கிறதா? என்று யாரும் பார்ப்பதில்லை. டக்கென்று ஸ்விட்சை ஸ்டைலாகத் தட்டுவதோடு சரி. இவர்கள் சொன்னபடி கேட்கிறதாம் அந்த மோட்டார்...! சம்ப்பில் தண்ணீர் இல்லாமல் பல சமயங்களில் ஏர் லாக் ஆகிவிடும். அந்த சத்தமே அபஸ்வரமாய் இருக்கும். அத்தோடு காணாமல் போய்விடுவார்கள்.

ஒரு வாளியில் தண்ணீர் எடுத்து வந்து மோட்டார் மேற்பகுதியில் இருக்கும் குழாய்வழி பொறுமையாய் ஊற்றி அது நீரை நிறுத்துகிறதா அல்லது கீழே இறக்கிக்கொண்டேயிருக்கிறதா என்று கவனித்து, நிறுத்தி நீர்க்குமிழ்களோடு மேலாக நின்றால், போய் ஸ்விட்சைத் தட்டி, தண்ணீர் ஊற்றியவழி எகிறி அடிக்கிறதா என்று கவனித்து காற்று அடைப்பை வெளியேற்றி பிறகு மேலே தொட்டியில் தண்ணீர் ஏறுகிறதா என்பதையும் செக் பண்ணி... அப்பாடா...! என்று ஓய வேண்டும். எவன் செய்வான் இத்தனையும்?

இவன்தான். வேறு யார்? அதாவது இவர்தான் செய்கிறார் இன்றுவரை.

‘நீங்க ஏன் ஓடி ஓடிப்போய் செய்றீங்க? இளவட்டப் பசங்க எட்டு வீட்டுக்கும் எட்டுப்பேர் இருக்கைல உங்களுக்கென்ன வந்தது? – மேலேயும் கீழேயும் ஏறி இறங்கி எங்கயாச்சும் விழுந்து, வழுக்கி, காலக்கைய ஒடிச்சிக்கிறதுக்கா?’ விலாசினி புலம்பல் அவளோடு.

வெறும் புலம்பலா அது? ஊனமாகிப்போய் வீட்டுக்கே பாரமாய் அமைந்துவிட்டால்?

யார் படுவது என்கிற பயம். நியாயம்தானே? அந்த பயம் இவருக்கில்லாமல் போகுமா?

ஒருமுறை சம்பிரதாயமாய்ச் சொல்லிவிட்டு வேலையில் ஆழ்ந்துவிடுவாள். அவள் வாய் தொடர்ந்து சாமி ஸ்லோகங்களை உச்சரிக்கும். அடுப்படிக் காரியத்திற்குத் தண்ணீர் வேண்டுமே? பாத்ரூம் போனால் குழாய் சொட்டினால்? அடக்கண்றாவியே, வேலை நின்றுபோகுமே?

மோட்டாரைப் போட்டுவிட்டு உள்ளே போய் அடைந்துகொண்டால் டி.வி ஓடும் சத்தத்தில் லயித்துப்போய் எப்படி அணைக்கும் ஞாபகம் வரும்? அதை ஏன் அப்படிப் பேயாய் கத்த விடுகிறார்கள்? அவர்களுக்கு மட்டும் கேட்டால் போதாதா? நம்வீட்டுக் கதவைத் திறந்தால் குடி கெடுத்த கதையாய் அலறித் துடிக்கிறது. கொஞ்சமாவது அறிவு வேண்டாம்? காட்டிலா வாழ்கிறார்கள்? தப்பு... தப்பு... காடு இவ்வளவு கொடூரமாய் இராது. இனிமை தவழும் இடம் அது!

என் வீடு... என் டி.வி. எப்படியும் வைப்பேன்...! நீ யாரு கேட்கிறதுக்கு? இது ஒரு மனப்பான்மையா? வீட்டு நபர்கள் ஒருவருக்குக் கூடவா தோன்றவில்லை? ஒரே அபார்ட்மெண்டில் இருப்பதால் இவர்களோடெல்லாம் பொய்யாய்ச் சிரித்தாக வேண்டியிருக்கிறது. நட்பு பாராட்டி மகிழ வேண்டிய அவலம்.

மனிதர்கள் பலவிதமாய்த்தான் இருப்பார்கள், கண்டிருக்கிறது. ஆனால் சொல்லி வைத்தாற்போல் எல்லோருமா மோசமாய் இருப்பார்கள்? இருக்கிறார்களே? அதற்கு இந்த அடுக்ககமே சான்று.

மாடியில் ஓவர்ஃப்ளோ ஆகி நல்ல தண்ணீர் வடிந்து வீணாகிக்கொண்டிருக்கிறது. மொட்டை மாடியில் தண்ணீர் வெள்ளம். காசு தண்ணியாக் கரையுது என்பது இதுதானோ? ஒரு லாரி தண்ணீர் ஆயிரத்து அறுநூறு. எவன் காசை எவன் வீணாக்குறது? எல்லார் காசும் உண்டு என்றாலும் பங்குப் பணம் வீணாகிறதே?

ஒருத்தனாவது கண்டுக்கறானா பாத்தியா? யாராச்சும் அணைப்பாங்கன்னு இருக்கிறது. இல்லன்னா நமக்கென்னன்னு கிடக்கிறது. என்ன மனுஷங்க? காசு விரயமாகுறது பத்தி எவனுக்கும் கவலையில்லையா? எப்படியிருக்கும்? அதான் அள்ளி அள்ளிக் கொடுக்கிறானே ஐ.டி கம்பனில? புலம்பிக்கொண்டே கீழே ஓடினார் வாத்சல்யம்.

லிப்ட் இருந்தது. ஆனால் இல்லை. உபயோகமாய் இருந்தால்தானே உயிரோடு இருப்பதாய் அர்த்தப்படும். அது நின்று மாசக் கணக்காகிறது. அதற்கு ஏ.எம்.சி போட (வருடாந்திரப் பராமரிப்புக்கான புக்கிங்) எவனுக்கும் மனசில்லை. அதென்ன வருடக்கணக்காய் ஓடிக்கொண்டேயிருக்குமா? மனுஷனே ப்ரேக் ஆறான்... மெஷின் ஆகாதா? அதைப் பராமரிக்கத் துட்டுக் கொடுக்கக் கைவரவில்லை ஒருவனுக்கும். துள்ளித்துள்ளி இரண்டிரண்டு படிகளாய் ஏறுகிறார்களே... இளமைத் துள்ளல். தன் இளமைக் காலத்தில் தான் இப்படியெல்லாம் குதித்துக் கும்மாளம் போட்டதில்லையே என்று நினைத்துக் கொண்டார்.

எங்க அபார்ட்மென்ட்லயும் லிஃப்ட் இருக்குன்னு சொல்லிக்கலாம். ஓடுதான்னு கேட்கப்படாது.

பக்கக்கம்பியைப் பிடித்துக்கொண்டு படிகளில் பத்திரமாய் இறங்கினார் வாத்ஸல்யம். எப்படி இறங்கினாலும் ஏதேனும் ஒருசமயம் வழுக்கி விடுகிறதுதான். ஒன்று செருப்பு வழுக்கி விடுகிறது. அல்லது தரை வழுக்கி

விடுகிறது. அந்த மாடிப்படி சைடு ஜன்னலைச் சாத்தித் திறக்க நாதியில்லை. மழை பெய்தால் தண்ணீர் உள்ளே சரம் சரமாய்ப் பாய்ந்து படிகளில் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. லைட் போடவில்லையென்றால் கண்ணுக்குத் தெரியாது. பளிங்கு போல் தெரிந்தால் பார்த்து வைக்கலாமே பாதத்தை...!

யாருக்கும் பராமரிப்பு பற்றி எந்தக் கவலையுமில்லை. வீட்டுச் சொந்தக்காரன் எவனாவது குடியிருந்தால்தானே? இவர் ஒரு குடும்பம் தவிர மற்ற அத்தனையும் வாடகை. ம்ம்ம்... தவறு... தவறு... முதல் மாடியில் ஒரு வயதான லேடி... கவர்ன்மெண்ட் சர்வீசில் இருந்து ஓய்வுபெற்றவர். திருமணம் செய்துகொள்ளாத தனித்துவ ஜீவன்-ஜீவனம். அவர்களுக்கு நடக்கமுடியாமல் போய் எவ்வளவோ நாளாயிற்று. வந்த புதிதில் நடந்து பார்த்தது. இப்போது நாலு சுவருக்குள் அன்றாடம். நடக்கிறார்களோ, தேய்கிறார்களோ?

ஜன்னல்வழி கயிறு கட்டி குப்பை இறங்கும். மக்கும் குப்பை, மக்காக் குப்பையெல்லாம் இல்லை... எல்லாம் ஒரே குப்பைதான். மாதம் நூறு ரூபாயும் அன்பளிப்பாக அந்த வாளியிலேயே குப்பையோடு குப்பையாய்... மேலாகப் பரிணமித்து இறங்கி... அந்தப் பணியாளைச் சந்தோஷப்படுத்தும்.

பால் வண்டி காலை நாலு முப்பதுக்கு வருகையில் தயாராய்த் தொங்கும் வாளியில் பாக்கெட்டைப் போட்டுவிட்டு நகர்ந்துவிடும். பிறகு அது தானே மேலே வந்து அந்தம்மாள் கைக்கு எட்டும். அடுக்ககத்தில் இருப்பவர்கள் அவர்களை வெளி ஜன்னல்வழி ரோட்டில் நின்று பார்த்தால்தான் ஆச்சு. முதல் தளம் கதவு திறக்காது. செருப்பும் உள்ளேயே கிடக்கும். ஆள் இருக்கிறதா இல்லையா என்பதே தெரியாது. அவர்களுக்கென்று வந்திருக்கும் தபால்களோ கீழே தபால் பெட்டியிலேயே தூங்கும். எடுப்பதற்கோ எடுத்துக் கொடுப்பதற்கோ நாதியில்லை. கொடுத்தால் அதன் நிமித்தம் ஏதேனும் வேலை தொடரும் என்கிற பயம். அந்த லேடி வேலை வாங்காத ஆளில்லை அந்த அபார்ட்மெண்டில். இவரே மாட்டிக்கொண்டு முழித்திருக்கிறார். ஒருநாள் வாத்ஸல்யத்தை உதறிக் கோபமாய் ஒரு கத்துக் கத்த... உங்கப்பா ஏன் இப்படிக் காட்டுக் கத்து கத்துறார் என்று பையனிடம் கேட்க... அன்றோடு உறவு முறிந்தது.

அட... அவர்களைத்தான் மெயின்டனன்ஸிலிருந்து ஒதுக்கியாயிற்று. மிச்சம் ஆறு பேர் என்னவாயிற்று? நா மாட்டேன்... நீ மாட்டேன் என்றால்? ஒருவனே கிடந்து மாரடிக்க முடியுமா? ஆளுக்கு மூன்று மாசம்தான். ஆனாலும் மூக்கால் அழுகிறார்களே!

“இதுக்குத்தான் சொன்னேன், வாடகைக்கு வர்றவங்கள்டல்லாம் ஒரு இருபது ரூபா பத்திரத்துல கண்டிஷன்ஸை டைப் பண்ணி கையெழுத்து வாங்கணும்னு. அசோசியேஷன் ஃபார்ம் பண்ணனும்னு. வெறும் எட்டு வீடுதானேன்னு உதறியாச்சு. அப்பத்தான் மூனு மாசத்துக்கொரு தரம் அவனவன் பராமரிப்பு வேலைகளைப் பார்ப்பான். நாம மட்டும் கிடந்து மாயணும்னு என்ன தலவிதியா?

தண்ணி லாரிக்குச் சொல்லணும்... மாசா மாசம் அவனவன் யூஸ் பண்ணின தண்ணி அளவை மீட்டர்ல பார்த்துக் குறிச்சு, கணக்குப் பண்ணி துட்டு வசூலிக்கணும்... அப்பப்போ சம்ப்ல தண்ணி இருக்கா, தீர்ந்து போச்சான்னு பார்த்து தாமதமில்லாம லாரிக்குச் சொல்லி வரவச்சு சம்ப்பை நிரப்பணும், ஏர் லாக் ஆகாமப் பாதுகாக்கணும், கார் பார்க்கிங், மாடி, மாடிப்படி, மொட்ட மாடின்னு ஆள் போட்டுக் கூட்ட வச்சு சுத்தம்

பண்ணனும், ஒட்டடை எடுக்கணும்... அவளுக்குச் சம்பளம் கரெக்டா வசூல் பண்ணிக் கொடுக்கணும், எங்கயாச்சும் லைட்டுப் போயிடுச்சின்னா புது பல்பு வாங்கி மாட்டணும், அப்பப்போ கீழ வரும்போது கேட்கள் திறந்து கிடந்தா கௌரவம் பார்க்காம சாத்திக் கொண்டி போடணும்... அப்பத்தான் தெரு நாய்கள் நுழையாது. அசிங்கம் பண்ணாது. எவ்வளவு வேலை கெடக்கு. எல்லாத்தையும் நீ ஒருத்தனே தூக்கிச் சுமக்கணும்னு விதியா? எழுதி வச்சிருக்கா நமக்கு மட்டும்?"

"நா என்ன சொல்றேன்னா... தண்ணி காலியாயிடுச்சின்னு வையி... பேசாம போட்டு வச்சிடு.... அவனவன் குளிக்கவும் கழுவவும் தண்ணி இல்லாமக் கஷ்டப்படுவானுங்கல்ல... அப்பத் தெரியும் சேதி! அவனே தண்ணி இருப்பைப் பார்த்து, லாரிக்கு ஃபோன் பண்ணட்டும். செஞ்சா தேய்ஞ்சு போயிடுவாங்களா? "

'மாடில உப்புத் தண்ணி போர்க் குழாய் ஒண்ணு மாட்டியிருக்கோம்லப்பா... அதுலேர்ந்து பிடிச்சிக்கிறாங்கப்பா... டெம்ப்பரரியா யூஸ் பண்ணிக்குவோம்னு... பக்கத்து வீட்ல முப்பதடிதான் போர் போட்டிருக்கான். இதே போர் தண்ணிதான். உப்பில்லாம வருதுங்கிறாங்க. இந்த ஐடியா இங்க அபார்ட்மெண்ட் கட்டின பில்டருக்கு ஏன் இல்லாமப் போச்சு? அவன யாரு நூறடி, நூத்தம்பதுன்னு போட வச்சது? கண்ண மூடிட்டு நெளுநெளுன்னு இறக்கிட்டாங்களோ? கீழே போகப்போக கல்கண்டு மாதிரித் தண்ணி கிடைக்கும்னு நினைச்சிட்டாங்க போல்ருக்கு? அது கடல் தண்ணி கணக்கா கரிச்சிக் கொட்டுது!'

புலம்பித் தள்ளி என்ன பயன்? இப்படியேதான் கழிகிறது அபார்ட்மெண்ட் குடியிருப்பு நாட்கள். கீழே அந்தம்மா பூச்செடிகளாய் வைத்தது. அவை பூத்துக் குலுங்குகின்றன. நித்திய மல்லியைத் தவறாமல் யாரோ பறித்து விடுகிறார்கள். ஒரே மர்மமாயிருக்கிறது. அந்தச் செடிகளுக்கெல்லாம் தண்ணீர் ஊற்றுவது யாரென்று நினைத்தீர்கள்? அந்த லேடியா? வச்சதோடு சரி. இவரல்லவோ நீர் பாய்ச்சுகிறார்.

நாற்று நட்டாயா, களை பறித்தாயா? நீர் பாய்ச்சி நெடுவயல் நிறையக் கண்டாயா? என்றா கேட்க முடியும்? அவை வாடுவதில் இவருக்கு உவப்பில்லை. எனவே கடமையாய் ஊற்றுகிறார். அவற்றோடு அன்றாடம் பேசுகிறாரே, அந்த பாஷை யாரேனும் அறிவாரா? அதற்கெல்லாம் ஒரு ரசனை வேண்டும். அழகுணர்ச்சி வேண்டும். அப்போதுதான் சாத்தியம். அவ்வப்போது பாம்புகளைக் கூடப் பார்க்கத்தான் செய்கிறார். அதுபாட்டுக்குப் போகும், வரும் என்று விட்டுவிடுகிறார். யாரிடமும் சொல்வதில்லை. பக்கத்தில் காலி மனை.மரம் செடி கொடிகளோடு அப்பிக்கிடந்தால் வராமல் என்ன செய்யும்?

பட்டென்று ஸ்விட்சைத் தட்டி மோட்டாரை அணைத்தார் வாத்ஸல்யம். அதைக்கூட கவனமாய்த்தான், மென்மையாகத்தான் கையாள வேண்டியிருக்கிறது. இதுவரை எத்தனை ஸ்விட்ச் மாற்றியாயிற்று? ஒரு சுவிட்ச் போனால், தனியே அதை மட்டும் வாங்கிப்போட முடியாதாம். அந்த போர்டே செட்டாக மாற்ற வேண்டுமாம். என்ன அநியாயம்? அதுவும் லோகல் கடைகளில் கிடைக்காதாம். பாரிஸ் கார்னர் போயாக வேண்டுமாம். அப்போ மத்த ஸ்விட்செல்லாம் வேஸ்டா? இது ஒருவகைக் கொள்ளையாய்த் தெரியவில்லை? எதில்தான், எப்படித்தான் ஏமாற்றுவார்கள்?

எதனில்தான் டூப்ளிடேட் இல்லை?

எதுதான் அசல்? எல்லாமுமா இப்படி மாறும்? எதில் யாரை எப்படி ஏமாற்றுவது என்றா யோசிப்பார்கள்? எப்படி தரமான நல்ல சரக்கைக் கொடுப்பது என்பதான சிந்தனைகளெல்லாம் அற்றுப் போய்விட்டதா? சாதா, ஸ்பெஷல் என்று சொல்லியே பலவற்றில் ஏமாற்றி விடுகிறார்களே? ஏமாற்ற ஆரம்பித்த பிறகு மக்கள் ஏமாறினார்களா? அல்லது மக்கள் ஏமாறத் தயாராய் இருந்தபோது ஏமாற்ற ஆரம்பித்தார்களா? எது முன்னே, எது பின்னே? எதற்காக இந்த உலகம் இப்படிப் பொய்யும் புரட்டுமாய் மாறிப்போனது? நல்லது என்பதே கண்ணில் கிட்டாது போலும்? எதைத் தொட்டாலும் சந்தேகம் வருவது போல் ஆக்கிவிட்டார்களே? எல்லாவற்றிலும் குறுக்கு வழியைக் கண்டுபிடித்து, அதுவே நடைமுறை என்று ஆக்கிவிட்டார்களே படுபாவிகள்?

ஏர்-லாக்கையே கவனிக்காமல் மோட்டாரை மணிக்கணக்காய் ஓடவிட்டு, லோ வோல்டேஜில் மோட்டாரை ஆன் பண்ணி ஓடவிட்டு அதன் காயலைக் கருக்கி, புதுக்காயல் போட அல்லது புது மோட்டார் மாற்ற என்று மூனு நாளைக்குத் தண்ணி இல்லாமல் தவிக்கவிட்டு… திடீர் செலவு உண்டாக்கி, ஆளாளுக்கு உள்ளூர் உறவினர் வீடுகள், தெரிந்தவர் வீடுகள் என்று பாய்ந்து ஓடி காலைக் கடன்களை முடிக்கவும், குளிக்கவும் என்று அலமந்து பறந்து அப்பப்பா… என்ன பாடு… என்ன பாடு? ஓர் அடுக்ககத்திற்கு குடிவந்தால் என்னவெல்லாம் பிரச்னைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதை அனுபவித்துத்தான் உணர்ந்தாக வேண்டும். அப்போதுதான் மனுஷ ஜென்மங்களுக்கு புத்தியில் உறைக்கும். சம்ப்பிலிருந்து வாளியில் மொண்டு மொண்டு மாடிக்குத் தண்ணீர் தூக்கும்போது தெரியும் அந்தமான் கைதியாய் அலையும் அவலம்.

அந்த நேரத்திலும் கார் பார்க்கிங்கில் இருந்த அத்தனை லைட்டுகளும் பகபகவென்று எரிந்துகொண்டிருந்தன. எத்தனையோ பேர் கீழே வந்தாயிற்று, போயாயிற்று. யார் கண்ணிலுமா படவில்லை? ஒரு நாள் நானே மறந்துவிட்டேன். அப்படியானாலும் நான்தான் வந்து அணைக்க வேண்டுமா? யாருமே இவ்வளவு நேரம் கீழே வரவேயில்லையா? யார் கண்ணிலுமே இந்த வெளிச்சம் படவில்லையா? அல்லது பட்டும் உறைக்கவில்லையா? அல்லது இதுக்கெல்லாம் கரண்ட் சார்ஜ் இல்லை என்று நினைத்து விட்டார்களா?

எவ்வளவு சுருக்கமாய் மின்சாரம் செலவழிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு கட்டணம் குறைவாய் வருமே… அது ஏன் ஒருவருக்கும் தெரியவில்லை? ஒரு ஸ்லாப் தாண்டினால் தாறுமாறாய் எகிறும் மின் கட்டணத்தை அநாவசியம் என்று ஏன் எவரும் உணரமாட்டேனென்கிறார்கள்?

கார் பார்க்கிங் வட புறமும், தென்புறமும் என்று எல்லா லைட்டுகளையும் அணைத்தார் வாத்ஸல்யம். தினமும் அவர்தான் அணைக்கிறார். காலை சரியாக ஆறு மணிக்கு நன்றாய் வெளிச்சம் வந்தவுடன் பொறுமையாய்க் கீழே இறங்கிவந்து அத்தனை லைட்டுகளையும் அணைப்பார். யாரையும் எதிர்பார்ப்பதில்லை. எவனும் அணைப்பதுமில்லை, அணைக்கப் போவதுமில்லை என்று உறுதி செய்துதான் அவரே இதைச் செய்ய ஆரம்பித்தார். எல்லாத்தையும் அந்தப் பெரிசு பார்த்துக்கிடும் என்று விட்டுவிட்டார்களோ என்னவோ? கண்டுக்காத என்று புத்திசாலித்தனம் காட்டுகிறார்கள். கள்ளப் பயல்கள்!

அட… மாலையில் இருட்டும்போது லைட்டுகளைப் போடக்கூடவா கூடாது.

ஸ்விட்சுகளைத் தட்டினால் கை வலிக்குமோ என்னமோ? ஆபீஸ் முடிந்து வருகிறார்களே... என்ன இப்படி இருண்டு கிடக்கு? என்று ஒருவருக்குக் கூடவா தோன்றாது? மனசாட்சி இல்லையா ஒருத்தனுக்கும்? இந்த ஓட்டம் ஓடுகிறார்களே? இதில் மட்டும் ஏன் ஜடமாய் நிற்கிறார்கள்? இருட்டுக் குகையாக் கிடக்கே என்று தோன்றாதா?

இதெல்லாம் நம்ம வேலை இல்ல என்று நினைத்துக்கொள்வார்களோ இந்த ஐ.டி கனவான்கள்? தன் வேலையே உறுதி இல்லாதவர்கள். இவர்களுக்கு என்ன கௌரதை வேண்டிக் கிடக்கிறது? காலையில் ஆபீசில் காலடி எடுத்து வைக்கும்போது இப்டி உட்காருங்க என்று வாயிலிலேயே செக்யூரிட்டி நிறுத்திவிட்டானென்றால் கதை முடிந்தது. என்னவோ கோளாறு? என்று அர்த்தம். அந்த லட்சணத்தில்தான் இவர்கள் பார்க்கும் வேலை அலமந்து கிடக்கிறது!

ஒரு வேலை நிறுத்தம் செய்ய முடியுமா இவர்களால்? ஒரு கூட்டம் போட முடியுமா? ஒரு கோஷம்? ஒரேயொரு கோரிக்கையையாவது எடுத்து முன்வைக்க ஏலுமா? போய்யா... நீ இல்லாட்டி இன்னொருத்தன்! இதுதான் நிலை.

அவர்களுக்கும்தான். இந்த மடம் இல்லாட்டி இன்னொரு சந்தை மடம்! அப்படித்தானே மாறி மாறிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்? முப்பத்தஞ்சு வருஷம் கம்பீரமா சர்வீஸ் பண்ணி அம்பதாயிரம் பென்ஷன் வாங்குற கௌரதை உண்டா இவனுங்களுக்கு? என் பையனையும் சேர்த்துத்தான் சொல்லிக்கிறேன். அடிச்சிக்கிட்டனே... கேட்டானா? ஏதாச்சும் பாங்க் வேலை, சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஜாப்னு போ... இந்த ஐ.டி. வேல வேணாம். காதுல வாங்கினானா? படிச்சது இராமாயணம்... இடிக்கிறது பெருமாள் கோயில்!! இவன் படிச்ச பி.இ(இஇஇ)க்கும் பார்க்குற வேலைக்கும் என்ன சம்பந்தம்?

ஜெயகாந்தன் சொன்ன மாதிரி கொஞ்சம் இங்கிலீஷ், கொஞ்சம் கணக்கு, கொஞ்சம் தமிழ்ன்னுவார்... இதானே மிச்சம்ப்பார். பள்ளிப் படிப்புக்கே போகாத அந்த மனுஷனோட துல்லியமான விமர்சனம் இது. அதுதானே உண்மை. அப்டித்தானே சர்வீசை ஓட்டியாச்சு. ஆனாலும் அந்த மதிப்பு இந்த ஐ.டி ஃபீல்டுக்கு இருக்கா? வேலையே செய்யாம, வேலையே கத்துக்காம, அடுத்தவனப் போட்டுக்கொடுத்தே எத்தன பேர் இங்க வண்டியை ஓட்டுறான்? வேலை செய்றவனாப் பார்த்துக் கொல்றானுக. எட்டு மணிநேரம் வேலைங்கிறது என்னைக்கோ காணாமப் போயிடுச்சி. எல்லாப் பயலுகளும் பன்னெண்டு மணி நேரம் பாடாப்பட்டு முதுகு ஒடிஞ்சுபோய்க் கெடக்கான். நாப்பத்தஞ்சு வயசுக்குள்ளாறயே கூனு விழுந்துபோகுது... எப்டிச் சமாளிக்கப் போறானுங்களோ... எதுவும் நம்ம கைல இல்ல. எதெதுக்குன்னுதான் வருத்தப்படுவீங்க? அதுக்கும் உடம்புல தெம்பு வேணும்ல?

நோய் என்பது ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையிலிருந்து உருவாகக் கூடியது. அவ்வாழ்க்கை முறைக்குக் காரணமாக அமையும் மனோபாவமே ரிபு என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று ரிபுவாகிறது. இதை விரிவாகச் சொல்கிறது தாராசங்கர் பானர்ஜியின் ‘ஆரோக்கிய நிகேதனம்’. படித்தபோது இந்த ஐ.டி பசங்களின் வாழ்க்கை முறையை நினைக்க மனதில் பயம்தான் தொற்றிக் கொண்டது. ஐயோ பாவம் என்றிருந்தது.

அவனும்தான் என்ன... அப்பா இந்த வயசுல இப்படிக் கஷ்டப்படுறாரேன்னு துடிச்சா போறான்? நீதான வாங்கின இந்த அபார்ட்மெண்ட் வீட்டை... அனுபவி... என்பான்கள் போலிருக்கிறது. காலம்

கலிகாலம். என்னத்தைச் சொல்ல? எதைத்தான் சொல்ல? ஒவ்வொன்றுக்கும் இவர்தான் மேலுக்கும் கீழுக்கும் ஓடிக்கொண்டிருக்கிறார். நான் ஒருத்தனே பார்த்துக்கிறேன். எவனும் உதவிக்குத் தேவையில்லை... என்கிற வீராப்பு இருக்கிறதுதான். ஆனாலும் அவிழ்த்து விட்ட கழுதையாய்க் கதை மாறிப்போகுமே? பொறுப்பு பரவலாக நின்றால்தான் சமூகம் பிழைக்கும்.

“அய்யா மோட்டாரக் கவனிச்சு அணைக்கச் சொல்லுங்க... தண்ணி ஒவர் ஃப்ளோ ஆகி எங்க வீட்டுல மழை பொழிஞ்ச மாதிரித் தெறிக்குது...” எத்தனையோ வாட்டி நானும் சொல்லிச் சொல்லி அலுத்துப்போனேன். வேணும்னா ஒண்ணு செய்யுங்க... சுவிட்சு எங்கருக்குன்னு எனக்கும் சொல்லிப் புடுங்க... நானே வந்து அணைச்சிட்டுப் போயிடுறேன்... அப்பயாச்சும் உறைக்குதா பார்ப்போம்...” சுளீர் என்றது இவருக்கு, சமயம் பார்த்துப் பொருத்தமாய்ப் பேசுவது என்பதும் ஒரு தனிக் கலைதான்...

திரும்பி அந்தம்மாவின் முகத்தைப் பார்க்க லஜ்ஜையாக இருந்தது வாத்ஸல்யத்துக்கு. அமைதியாக மேலேறி வந்தார். படிகளில் அவசரமாய் இறங்கி வந்ததும் இப்போது திரும்பவும் மேலேறிப் போவதும் மூச்சு வாங்கியது. ஏற ஏறப் படிகள் நீண்டு கொண்டே போயின! ரெண்டு மாடிதானே? சந்தேகமே வந்துவிட்டது.

அடுக்ககத்தில் பையன் பெயரில் வீடு வாங்கி அவனைத் தீராத அவஸ்தைக்குள்ளாக்கி விட்டோமோ என்று அவர் மனம் குற்றவுணர்ச்சியில் தவித்தது. விரைவில் தனி வீடு ஒன்று கட்டி வெளியேறிவிட வேண்டும் என்றும் இதை வாடகைக்கு விட்டுவிட வேண்டும் என்றும் உறுதி செய்துகொண்டார்.

ushaadeepan@gmail.com ■



கவிதை

**ஆர். வத்ஸலா**

# தூது

ஊருக்குப் போன உன்னிடமிருந்து
சேதியொன்றும் வரவில்லையென
துயருற்றிருந்தேன்
கடந்த கணம் வந்த காற்று
உன் மௌனத்தை சுமந்துவந்து
என் துயர் நீக்கிச் சென்றது

vatsala06@gmail.com ■


கவிதை

**வெ. தமிழ்க்கனல்**

# வாழ்ந்து கெட்ட வீடு

ஊருக்குப் போன உன்னிடமிருந்து
சேதியொன்றும் வரவில்லையென
துயருற்றிருந்தேன்
கடந்த கணம் வந்த காற்று
உன் மௌனத்தை சுமந்துவந்து
என் துயர் நீக்கிச் சென்றது

mohanasundaram359@gmail.com ■



கட்டுரை

அய்யனார் ஈடாடி

# நிலத்தில் முளைத்த சொற்கள்

உழுகுடிப் பாதங்களின்
கொப்புளங்கள்

*வேளாண் மரபின் தமிழ் அடையாளம் எனும் நூலின் மூலம் ஏர் மகாரசன் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. வேளாண் மக்களின் பண்பாட்டு வழக்காறுகளை ஆய்வு செய்து தமிழ்ச் சமூகத்தில் பாராட்டுக்களைப் பெற்றவர்.ஆசிரியர் பணியோடு தொடர்ந்து எழுத்துப் பணியையும் விடாமல் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார். மண்ணோடும் நிலத்தோடும் கிடந்தமையால் தனது எழுத்துக்களில் பாடுபொருள்கள் காணிகளையே உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. மண்ணின் வாடை வீசும் கவிதைகள் நூல் முழுவதும் நிறைந்துள்ளன. தான் வாழ்ந்த அனுபவங்களை உணர்வுப்பூர்வமான சொற்களாய் கட்டமைத்திருக்கிறார். அந்தச் சொற்கள் இந்நூலுக்கு வலுவைச் சேர்ப்பதோடு மட்டுமின்றி வாசகனின் ஆழ்மனதில் பதியப்படுகின்றன.*

*தொளிப்பிரட்டி போட்ட நாற்றங்காலில் நிரம்பி வழியும் விதை நெல்மணிகளாய் நிரம்பி வழிகின்றன நாற்றங்கால் கவிதைகள்.*

*பசப்படித்த நிலமும் ஈரம் பொதிந்த மண்ணும் சுமக்கும் வலிகளைப் பேசுகிறது இந்நூல். இனத்தின் பசியும் நிலத்தின் வலியும் கண்களில் நீரைத் திரட்டி கொப்பளிக்கச் செய்கின்றன.கங்குகள் சுமக்கும் பெருங்காட்டின் வேதனைகளைச் சொல்லி மாளாது. அகம் நொந்து முடிவுறாத ஒப்பாரிகளாய்ப் பாடுகின்றன.*

*தொல்நிலத்தின் காணிகளைப் பிடுங்கி எக்காளமிட்டுச் சிரிக்கும் முந்நிறத்துக் கொடி இன்றும் தூக்குக்கயிறுகளாய் எண்ணற்ற உயிர்களைக் காவு வாங்கிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை பேசுகிறது இந்நூல்.*

*தொரட்டிகளால் முறிக்கப்பட்ட எம்நிலத்தின் பூங்கிளைகளைகளுக்காக அரற்றித் துடிக்கிறாள் நிலத்தாய்ச்சி.*

*ஊர் தெறிக்கும் மணிக்குலவையோடு பிள்ளைமுடி வாங்கும் குடும்பச்சியின் நடுகை நினைவுச் சுடராய் நிமிர்கின்றன.சொல்லளந்து போட்ட குடுகுடுப்பைக்காரனுக்கு*

நெல்லலளந்து போடும் குடும்பச்சிகளின் வெள்ளந்தி மனம் மனதை இறுகப் பற்றித் தழுவுகிறது.

ஆதி நிலத்தாய்ச்சிகள் சிந்திய உதிரங்கள் உறைந்து கிடப்பதைக் காண முடிகிறது மகாராசனின் எழுத்துக்களில். ஒவ்வொரு கவிதையும் வெவ்வேறு வகையான கோணங்களில் சித்தரிக்கப்படுகின்றன.

ஏர் மகாராசன் அவர்களின் எழுத்துழவு நிலத்தின் பாடுகளைச் செம்மையாக பாடுகின்றன. சொற்கள் வெடிக்கின்றன. சங்க இலக்கியங்கள் ஆங்காங்கே அணிவகுத்து நிமிர்கிறது.

வெடித்துச் சிதறிய நிலத்து மக்களின் வேதனைகள் சூட்டுக்காய்களாய் சுட்சியிருக்கிறது கவிஞரின் வெள்ளந்தியான சிவந்த இதயத்தை.

இன்னுமோர் தலைவனைத் தேடித்தான் அலைகிறது காய்ந்த நிலத்தின் மடி, கிடத்தி அமர்வதற்கு.

மகாராசன் ஏரைப் பிடித்து உழுது விதைத்த வயலைச்சுற்றி நார்ப்பெட்டியோடு அவரது அம்மா படியளக்கும் குடும்பச்சியாக வந்துகொண்டே இருக்கிறார்.

நெல் அவித்த அண்டாவில் இருந்து மணக்கும் அவித்த நெல்லாய் நான் உணர்ந்த சில கவிதைகள் இங்கே

1.

இன்னும் மிச்சமிருக்கும்
புழுதிக் காடுகளின்
பனையோலைத் தூர் இடுக்குகளில்
எச்சங்களை விதைத்துச் சென்ற
ஒரு பறவையின் நம்பிக்கை
ஆலமாய் இறுகப் பற்றி வளர்ந்திருக்கிறது.

குஞ்சுகளோடு தூரியாட
உயிர் நீட்டித் தொங்கி நீள்கின்றன விழுதுகள்.

வெளிரிய வானத்தில்
திசைகள் தேடிய பறவைகள்
கூடு திரும்பிய நாட்களில்
மனிதர்கள் யாருமேயில்லை.

நாதியற்றுக் கிடந்தாள்
நிலத்தாள் மட்டும்.

குக்கிராமங்களில் வாழும் எல்லோரும் காணக்கூடிய இயற்கையின் காட்சியை அழகியலின் ஓர் இயங்கியலை அசலாகக் காட்சிப்படுத்திருக்கிறார் கவிஞர் மகாராசன். ஆலமரமும் அய்யனார் கோயிலும் பறவையின் எச்சமும் ஆலம் விழுதுகளும் சமகாலத்தில் நம் கண்முன்னே நிறுத்தி ரசனையூட்டுகின்றன. புழுதிக்காடுகளை கொஞ்சம் மிச்சம் வைத்திருக்கின்றன என்பதை அறிய முடிகின்றது.

புழுதிக்காடுகளின் வாசம் தனித்து மிளிர்கின்றன. நாதியற்றுக் கிடப்பதோ நிலத்தாள் மட்டும் என்று எடுத்துரைக்கிறார் இக்கவிதையின் வாயிலாக.

2.

நிலத்தோடு தோய்ந்தும் தேய்ந்தும்
உழைப்புத் தடங்களால்
புடம்போட்ட பாதங்கள்
வெறும் பாதங்கள் அல்ல.

உழுகுடிப் பாதங்களின் கொப்புளங்கள்
நிலமெனும் ஆத்மாக்களின்
அழுகைத் துளிகள்...

உழைத்து உழைத்துத் தேய்ந்த உழுகுடிச் சம்சாரியின் பாதங்கள் வெடித்து நொந்து வேதனைப்படுவதை தத்தமது வலிகளாக கவிதையின் வழியே காயங்களாக, கொப்பளிக்கும் கண்ணீர்த் துளிகளாக

*அகத்தில் அடக்கிக்கொள்ள முடியாமல் கூறுகிறார்.*

3.

விதை நிலமெல்லாம்
வதை நிலமாகிக் கிடக்கிறது.
சோறுடைத்த மண்ணெல்லாம்
வயிறு காய்ந்து கிடக்கிறது.

வியர்வை மணக்கும் நெல்லை
அள்ளிக் கொடுத்த கைகளெல்லாம்
பருக்கைகளுக்காகக் கையேந்தி நிற்கிறது.

*இக்கவிதையை வாசிக்கும்போது மனம் அழுகிறது. விதை நிலமெல்லாம் இன்று காணாமல் போய்விட்டன என்பததைப் புரிந்துகொள்ள முடிகிறது. சோற்றுக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் வயிற்றின் பசியைச் சொல்கின்றன.*

*நெல்லை அளந்துபோட்ட கைகள் எல்லாம் இன்று பருக்கைகளுக்காகக் கையேந்தி நிற்கின்றன என்பதை ஆசிரியர் புலப்படுத்தியிருக்கிறார்.*

*காணிகளைப் பிடுங்கிவிட்டு கூலிகளாக மாற்றிய ஆதிக்கவாதிகளின் தந்திரத்தை ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.*

4.

வெறுமை மண்டியிருக்கும்
வாழ்நிலத்தில்
கூந்தல் சூடத் தவிக்கின்றன
கைக்கிளைப் பூக்கள்.
பறவையின் வரவுக்காய்
கிளைக்காம்பில் காத்திருக்கின்றன
பெருந்திணைக் கனிகள்.
மும்முலைத் தாயவளின்
குறள் கசிந்த நிலத்தில்
வான்முலைத் தாய்ச்சியின்




மழைப்பால் குடித்துத் தவழ்கிறது
ஐந்திணைச் செவல் காடு.
எழுதிணைக் காமத்தின்
இன்பத்தில் திளைக்கிறது ஏழ்பிறப்பு.

*நிலம் நிலமென இந்தப் பிரபஞ்சத்தின் பரந்த வெளியில் தன்னால் இயன்றவரை யாரும் சொல்ல முடியாததை, செய்ய முடியாததை இயற்கை, மரம், செடி, கொடி, மலை, உழவு, விதை, காதல் என ஒரு ரசனைப்பாட்டாய் கவிதைகளில் பாடச் செய்திருக்கும் மகாராசன் போற்றக் கூடியவர், பாராட்டக் கூடியவர். எனது அன்பு முத்தங்களை வாழ்த்துகளாக அள்ளித் தெளிக்கிறேன்.*

*ஆசிரியர்: ஏர் மகாராசன், வெளியீடு: யாப்பு, பக்கங்கள்:112*

ayyanaredadimduttm97@gmail.com ■



கட்டுரை
கார்த்திக் கிருபாகரன்

# தமிழ் சினிமாவும் விமர்சனங்களும்

கறுப்பு வெள்ளை சினிமாக்கள் தொடங்கி காலத்திற்கு காலம் சினிமா பல்வேறு பரிமாணங்களில் பயணம் செய்கிறது. சில விஷயங்களை தவிர்த்து.

எண்பதுகளில் எனது அப்பா சொல்லி கேட்டிருக்கிறேன் கல்லூரி காலத்தில் புதிதாக வெளிவரும் எல்லா சினிமாக்களும் நண்பர்களோடு சென்று பார்த்து வருவதாகச் சொல்வார். அதில் எல்லா நடிகர்கள் படமும் பார்ப்போம் என்பார். அதுவும் தூரல் நின்னு போச்சு படத்தை எத்தனை முறை பார்த்தேன் என்றே தெரியவில்லை. பலமுறை பார்த்திருக்கிறேன் என்று சொல்வார். அந்த அளவுக்கு அந்த படத்தில் கதையும், திரைக்கதையும் அதில் இடம்பெற்ற வசனம், காட்சி அமைப்புகள் அனைத்தும் அவ்வளவு அழகாக இருக்கும். அதே போல சினிமாவாலும், நடிகர்கள் பெயராலும் அன்றைய டீக்கடைகளிலும் ரசிகர் மன்றங்களிலும் கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் சண்டைகள் நிறையவே நடந்திருக்கின்றன. முக்கியமாக ரஜினி கமல் ரசிகர்கள் போட்டி போட்டு நிறைய சண்டை போட்டு இருக்கிறார்கள் என்று பலரும் கூறுவர்கள். படத்தைப் பற்றி இப்போது வரும் மோசமான விமர்சனங்கள் போல் அப்போது இல்லை என்பது ஆறுதலான ஒன்று. அப்பொழுதெல்லாம் நாள் கணக்கை வைத்து திரைப்படத்தின் வெற்றியை தீர்மானிப்பார்கள். அதுவும் வெள்ளி விழா கண்ட படம். ஒரே தியேட்டரில் 200 நாட்கள், 250 நாட்கள் ஓடிய படம், 100 நாட்கள் ஓடிய படம், 150 நாள் ஓடிய படங்கள் என்று தயாரிப்பாளர் தரப்பும், ரசிகர்களும் கொண்டாடுவார்கள். ஆனால் தற்போது உள்ள சூழலில் வேறு மாதிரி உள்ளது. ஒவ்வொரு திரைப்படத்தின் ஆயுட்காலம் மூன்று நாட்களை விட்டு தாண்டுவது மிகவும் சிரமமாக இருக்கிறது. 25 நாட்கள், 50 நாட்கள் என போஸ்டர் ஒட்டுவது இப்போது அபூர்வமாக உள்ளது. தற்கால விஜய் அஜித் சண்டையிலிருந்து புதுமுக நடிகர்கள் சண்டை வரை அதுபோல தான் உள்ளது. 10 வருடங்களுக்கு முன்பு கூட சோசியல் மீடியா பல youtube சேனல்கள் வராத நாட்களில் முதல் மூன்று நாட்களில் படத்தின் ரிசல்ட் தெரியும். தற்போது இன்டர்நெட் யூடியூப் சேனல்களின் அசுர வளர்ச்சி முதல் ஷோ முடிவதற்குள் காட்சிக்கு காட்சி, கதை, திருப்புமுனைகள் அதுவும் முக்கியமான தியேட்டரில் படம் பார்த்து வரும் நபர்களிடம் கருத்து

கேட்பதும், அதுவும் மக்களின் எதிர்மறை கருத்துக்களை மட்டும் தனது சேனலில் போட்டு படத்தை வறுத்தெடுக்கிறார்கள். இன்றைய படத்தின் வசூல் கணக்கை பொறுத்தே வெற்றி நிர்ணயம் செய்யப்படுகிறது. விஜய் - அஜித் ரசிகர்களைப் பொறுத்தவரை அவரவர் நடிகர்கள் படம் பிளாக்பஸ்டர் தான். அதுவும் படம் விஜய்க்கு முதல் நாட்களில் முதல் காட்சி ஓடி முடிவதற்குள் ஒரு பெரும் கூட்டமே எதிர்மறை விமர்சனங்களை அள்ளி கொட்டுகிறார்கள். ஆனால் போகப்போக குடும்ப ரசிகர்கள் தியேட்டருக்கு படையெடுப்பதால் படத்திற்கு எப்படியோ வசூல் கிடைத்து விடுகிறது. ஆனால் அஜித் படம் எதிர்மறை விமர்சனங்களை அள்ளி கொட்டினாலும், ரசிகர்கள் தீர்மானமாக படம் வெற்றி என்று உறுதியாக இருக்கிறார்கள். ஆனால் எதிர்மறை விமர்சனங்களில் மூன்று நாட்களுக்குப் பிறகு குடும்ப ரசிகர்கள் வராமல் தியேட்டர் காலியாக சில படங்கள் தோல்வி என்று முடிவு செய்யப்படுகிறது. அதுவும் புரொடியூசர் தரப்பில் இருந்து விஜய் படங்களுக்கு வசூல்களை போட்டாலும் அஜித் ரசிகர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அஜித் படத்தின் வசூலை வெளியிட்டாலும் அதை விஜய் ரசிகர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தற்போதைய நவீன சோஷியல் மீடியா சண்டையாக இந்த வசூல் சண்டை உள்ளது.

இப்போது கங்குவா படத்தைப் பார்க்கும் போது, 2017 ஆம் ஆண்டு அஜித்தின் விவேகம் படம் இதே இயக்குனரால் எடுக்கப்பட்ட படம் அப்போதும் இதே போல் எதிர்மறை விமர்சனங்களை விவேகம் படமும் சந்தித்தது. அப்போது அவரது ரசிகர்கள் சொன்ன ஒரு வார்த்தை, “தலயின் hardwork காக படத்தை பார்க்கலாம்” என்றார்கள். ஆனால் கதையோ பழிவாங்கும் பழைய கதை. திரைக்கதையில் பெரிய மேஜிக் இல்லை. “தலயின் hardworkகாக, தலயின் hardworkகாக” என்று அவர்கள் சொன்னாலும் தியேட்டருக்கு கூட்டம் வராத காரணத்தால் படமும் பல மோசமான விமர்சனங்களை சந்தித்தது. அதுபோலத்தான் இப்போது கங்குவாவும் உள்ளது. திரைக்கதை வலு இல்லை. கதையின் பயண ஓட்டமோ வேறு மாதிரி உள்ளது.

எல்லா திரையரங்குகளிலும் கங்குவா 12 நிமிட காட்சிகள் குறைக்கப்பட்டுள்ளன, 2Point சத்ததையும் குறைக்க சொல்லிருக்கிறது படக்குழு.

விஷுவல், சவுண்ட் எபெக்ட், சூர்யாவின் நடிப்பு திறமை என என்னதான் நம் பாசிட்டிவ் விமர்சனங்கள் கொடுத்தாலும் மக்கள் வரவேற்பு குறைந்து விட்டது.

சில நாட்கள் முன்பு ககார்த்தியின் மெய்யழகன் படத்திலும் இப்படி 18 நிமிட காட்சியை தியேட்டர்களில் குறைத்தார்கள். தியேட்டர்களில் படம் பார்ப்பதற்கும், ஓடிடி-யில் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஓடிடி-யில்வீட்டில் உட்கார்ந்து பார்க்கும் போது போன், குழந்தைகள் வீட்டு வேலைனு எந்திரிக்க விடாமல் கட்டிப்போட்ட மாதிரி ஒரே மூச்சில் பார்க்கும் படங்கள் ரொம்ப கம்மி. கொஞ்சம் கொஞ்சமா மாசக்கணக்குல ஒரு படத்தை வைச்சு பார்பவர்களும் உண்டு. அதனால்தான் சில சமயம் விமர்சனங்கள் இரண்டு தளங்களிலும் வித்தியாசமாக வருகிறது.

இப்போதுதான் இந்த பஞ்சாயத்து வருகிறது. முன்பெல்லாம் திரையரங்குகளில் ப்ரொஜக்டர் ஆப்பரேட்டர் என்ற ஒரு இனம் உண்டு. அவங்கதான் படத்தோட உண்மையான எடிட்டர்கள். படம் ரிலீஸாகி இரண்டு நாளில் ரசிகர்கள் மனநிலைய வைத்து படத்தை எடிட் பண்ணிடுவாங்க. நீளத்தை குறைக்குறது, பாட்டை தூக்குறது என்று

ஒவ்வொரு தியேட்டர்களிலும் ஒவ்வொன்று நடக்கும். பாட்டு கொஞ்சம் மெலடியா இருந்தாலே போர் அடிக்குதுனு தூக்கிடுவாங்க. ஒரு பாட்டுக்காவே தியேட்டர் போனா ஸ்லோவா இருக்குனு தூக்கிருப்பாங்க, இல்லை பாட்டை ஒரு நிமிஷமா குறைச்சிடுவாங்க. இப்படி மாற்றி போட்டதால ஓடிய, ஓடாத நிறைய படங்கள் சொல்லலாம்.

தொன்னூறு காலகட்டத்தில் மெல்ல திறந்தது கதவு படம் ரிலீஸாகி ரொம்ப மெதுவாகப் போவதாக எல்லா ஊர்களிலும் சொல்லி கொண்டிருக்க, மதுரையில் மட்டும் நன்றாக ஓடிக் கொண்டிருக்கு. பின் நிறைய ஊர்களில் கொஞ்சம் கொஞ்சமா ஓட "எப்படி என்று" விநியோகஸ்த்தர்களை கூப்பிட்டு கேட்டால், படத்தோட இரண்டாம் பகுதியை முதலிலும், முதல் பகுதியை தூக்கி இரண்டாவதாகவும் மாத்தி மாத்தி போட்டு ஓட்ட ஆரம்பித்து, விநியோகஸ்தர்கள் ஒவ்வொருக்கொருவர் பேசி மதுரையிலிருந்து இப்படி எல்லா ஊர்களிலும் செய்து, அது பின்னால் படம் வெற்றிதான். இதில் பிரச்சனை வரக்கூடாது என்று படத்துக்கு First Half, Second Half மாத்திக் காட்டி இன்னொரு சென்சார் வாங்கிருக்காங்க தயாரிப்பு நிறுவனம்.

எண்பதுகளில் வந்த சம்சாரம் அது மின்சாரம் படம் எல்லா ஊர்களிலும் நன்றாக ஓட, ஒரு நெகட்டிவ் ரிவியூ கூட வரவில்லை. படம் ரிலீசான சில நாட்களில் விசு ஏதோ உடல் நிலை பிரச்சனையால் ஆஸ்பத்திரியில் டெஸ்ட்க்கு குடுத்துட்டு ரிசல்ட்டுகாக காத்திருந்திருக்கார். அப்போது அங்க இருந்த ஒருவர் வந்து பேச்சு குடுத்து, "சம்சாரம் அது மின்சாரம் படம் பாத்தேன். சுமார்தான். பிடிக்கல எனக்கு" என்று சொல்லிருக்கார். "ஏன் பிடிக்கல" என்று கேட்டதற்கு "படத்துல குடும்பத்துல அவளோ சண்டைக்கு அப்பறம் சட்டுனு மறந்துட்டு சேந்துட்டீங்க கிளைமாக்ஸ் சப்புனு இருந்துச்சு" என்று சொல்ல, இவருக்கு பயங்கர அதிர்ச்சி. "எந்த ஊர்ல படம் பார்த்திங்கனு" விசு கேட்டதுக்கு, "குமாரபாளையத்தில்ன்னு" சொல்லிருக்காரு. இதை தயாரிப்பாளரிடம் சொல்லி விசாரிக்கச் சொன்னதுக்கு அப்பறம் குமாரபாளையம் மட்டும் வசூல் குறைவு. விசாரிச்சால் படத்தோட கிளைமாக்ஸ்ல Happy Ending வேனும்னு கோவில்லேந்து விசு பலூனோட குழந்தைய தூக்கிட்டு வர்ற காட்சியோட படத்தை முடிவு காட்டி சுபம் போட்டுவிட்டுருகாங்க. கடைசியில் லட்சுமி பேசற மொத்த காட்சியையும் தூக்கிட்டாங்க. கிளைமாக்ஸ் பெரிய பாதிப்பை தராம சப்புனு இருந்துருக்கு. இதுமாதிரி பல படங்களுக்கு நிறைய சம்பவங்கள் பண்ணிருகாங்க. ஐயா படத்தில் வடிவேலு, அருணாச்சலம் படத்தின் கிளைமாக்ஸை மாற்றி பாட்ஷா படத்தின் கிளைமாக்ஸை போடுவது போல நிறைய நடந்து இருக்கிறது.

சிறிய படங்களுக்கு ஓட அவகாசம் கிடைப்பதில்லை. கரகாட்டக்காரன் படத்தின் போது அதை வாங்கி வெளியிடுவதற்கு வினியோகஸ்தர்கள் தயாராக இல்லை. படத்தை ரிவ்யூ பார்த்து ஒருவர் வெளியிட முன்வந்து செய்தார். ஆனால் படம் வெளிவந்து ஒரு வார காலம் அந்தளவு கூட்டம் இல்லை. பின் மதுரை தொடங்கி எல்லா திரையரங்குகளிலும் பட்டையக் கிளப்பி ஒரு வருடத்திற்கு மேல் ஓடியது. தற்போது அந்த ஒரு வார கால அவகாசம் கூட தற்போது சிறிய பட்ஜெட் படங்களுக்கு கிடைப்பதில்லை. இன்றைய டிஜிட்டல் காலத்தில் எட்டிங் ஆப்ரேட்டர் கைகளிலும் இல்லை. இந்தக் காத்திருப்பு பெரிய பட்ஜெட் படங்களுக்கு கிடைக்கிறது. காலியாக பல திரைப்படங்கள் ஓடி இருக்கிறது. இந்த அவகாசம் கிடைக்காமல் பல நல்ல படங்கள் தோல்வியைத் தழுவி இருக்கின்றது. ஓடிடி-யில் ரிலீஸ் ஆன

பிறகு அந்த படத்தைக் கொண்டாடி தீர்த்தும், டிவியில் போட்ட பின் பாராட்டியும் ஒன்றும் பிரயோஜனம் இல்லை என்பது என் கருத்து. தற்போதைய காலகட்டத்தில் படத்தின் தரம், பாடல்கள் எல்லாம் குறைந்து வருகிறது. நாயகனை ஒரு சூப்பர் ஹீரோவாகப் பார்த்து பலருக்கும் சலிப்பு தட்டி விட்டது. வேட்டையன் படத்தின் கதையும் அதுபோல தான். ஒரு நல்ல கதை அதை நாயகனுக்காக மாற்றி, அந்தக் கதை பலவீனமானது. சூப்பர் ஹீரோவாகப் பார்த்த ரஜினியை கருத்து சொல்பவராகப் பார்க்க பலருக்கும் ஏற்க முடியாமல் இருந்தது. தமிழ் சினிமாவில் அத்தி பூத்தாற் போல் இந்த வருடம் ஆங்காங்கே சில நல்ல படங்கள் வெளியானது.

படம் நன்றாக இருந்தால் அதன் வெற்றியை எத்தனை எதிர்மறை விமர்சனங்கள் கொடுத்தாலும் யாராலும் தடுக்க முடியாது. என்பதற்கு சிறந்த உதாரணம் கத்தி, விசுவாசம், தற்போது வந்த அமரன் படங்கள்.

திரைப்படங்களைப் பற்றி கருத்துக்களை சொல்வது அவரவர் உரிமைதான். அதற்காக அவரவர்களின் பின்னணி வாழ்க்கையை சேர்த்து வைத்து விமர்சிப்பது, “அவர் ஏன் சாமியார் காலில் விழுந்தார். அவர் ஏன் நீட் பற்றி கருத்து சொன்னார்” என்று அவர்களின் தனிப்பட்ட விஷயங்களைப் படங்களுடன் சேர்த்து விமர்சிப்பது தவறான செயல்.

சினிமாவும், அதில் நடித்த முக்கிய நடிகர்களைச் சுற்றிதான் தமிழ்நாட்டு அரசியலும் அமைந்துள்ளது. அமையக் காத்திருக்கிறது.

srinikarthi10693@gmail.com ■



கவிதை

ஈசு

# கனமழையின் சாயல்

குறுகிய நாட்களில்
கொட்டித் தீர்க்கும்
கனமழைக்கு
ராணுவத்திலிருந்து திரும்பும்
அப்பாவின் சாயல்

eswaramesh22@gmail.com ■



கவிதை

**மு.முபாரக்**

மௌனம் காற்றாக
கடந்துகொண்டிருக்கும் இரவு,
குஞ்சுப்பறவையின்
குதுகலமான சத்தம்,
கடைசி பேருந்து
சென்ற பிறகு
நிழற்குடையில்
நிம்மதியாய் உறங்கும் நாய்க்குட்டி,
கடைசி உணவையும்
மிச்சமாகாமல் விற்றுவிட்ட மகிழ்ச்சியில்
தள்ளுவண்டி கடைகாரனின் முகம்,
பகலா இரவாயென
அறிய முடியாதவாறு
வெளிச்சத்தை அள்ளித்தெளிக்கும்
நிலவு,
பிடிக்காமல் வசிக்கும்
நகரத்தை கொஞ்சம்
பிடித்திருக்கிறது இப்போது!

ammubarak2011@gmail.com ■



கவிதை

**காரைக்குடி சாதிக்**

# சொன்னதைச் செய்வதற்கில்லை

நட்சத்திரத்தை வரைகிறேன்
மின்னுவதை வரைவதெப்படி?
மழையை வரைகிறேன்
குளிர்ச்சியை வரைவதெப்படி?
கடலை வரையச் சொல்கிறாய்
படகையும் அலையையும் வரைகிறேன்
வானத்தை வரையச் சொல்கிறாய்
மேகத்தையும் விண்மீன்களையும்
வரைகிறேன்
வெய்யிலை வரையச் சொல்கிறாய்
சூரியனை வரைகிறேன்
இரவை வரையச் சொல்கிறாய்
நட்சத்திங்களைத்
துணைக்கு அழைக்கிறேன்
வட்டம் வரைகிறேன்
பகலில் சூரியனாகவும்
இரவில் நிலவாகவும் மாறுகிறது
இடியைத் தான்
வரைய முடியவில்லை
பிறகு ஒலியை வரைவதெப்படி?
கவிதையை வரையச் சொல்கிறாய்
பேனாவை மூடி விட்டேன்.

sadiqrasool2017@gmail.com ■





இந்திரா பார்த்தசாரதி

# ஒரு நாடு, ஒரு வரலாறு

இது போன நூற்றாண்டில் எழுபதுகளில் நடந்த சம்பவம்.

டெல்லிப் பல்கலைக்கழகத்தில் மகாகவி பாரதியாருடைய திருவுருவப் படம் அணிசெய்யும் விழா. அந்த பெரிய அறையை ஏற்கனவே தாகூர், பிரேம்சந்த் முன்ஷி, சுமித்திரானந்த் பந்த் போன்றவர்களுடைய படங்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தன.ஆறுமாத விவாதங்களுக்குப் பிறகு, பாரதி படம் இடம்பெற அனுமதி தந்தார்கள்

துணை வேந்தர் சீனவியல் (Chinese Studies) அறிஞர்... இந்தி மொழி வல்லுநர். பாரதியைப் பற்றி நான்கு பக்கத்துக்கு ஒரு குறிப்பு ஆங்கிலத்தில் எழுதித் தரும்படித் தமிழ்த் துறையைக் கேட்டிருந்தார்..

நான் எழுதிக் கொண்டுபோய் அவரிடம் கொடுத்தேன்.

அன்று மாலை மூன்று மணிக்குக் கூட்டம்.

கூட்டம் தொடங்குவதற்கு அரைமணிக்கு முன்பு என்னை அவர் கூப்பிட்டு அனுப்பினார். போனேன்.

‘உங்கள் கவிஞர் தமிழில் எழுதினாரா, தெலுங்கிலா?’ என்று கேட்டார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் எழுதிக் கொடுத்ததைச் சுத்தமாக அவர் படிக்கவேயில்லையா என்று கேட்கத் தோன்றிற்று. மொழி அறிஞர், இவர் பாரதியாரைப் பற்றிக் கேள்விப்பட்டதே கிடையாதா என்ற கோபமும் வந்தது.

இதற்குள் அவருடைய தனிச்செயலர், ‘சாரி சார், நாளைக்கு இசைக்கல்லூரியில் பேச வேண்டிய கூட்டத்தின் ஃபைலைத் தவறாகக் கொடுத்துவிட்டேன்.’ என்று சொல்லிக்கொண்டே, அவர் கையில் வைத்திருந்த ஃபைலை வாங்கித் தம் கையிலிருந்ததைக் கொடுத்தார்

அவர் தமிழர். ‘நாளைக்கு ம்யூஸிக் டிபார்ட்மெண்ட்லே தியாகராஜர் படம் திறந்துவைக்கப் போறார் சார்’ என்று அவர் அசட்டுச் சிரிப்புடன் என்னிடம் சொன்னார்..

ஆகவே, வட இந்தியர், மொழி அறிஞர், துணை வேந்தர்-அவருக்குக் கர்நாடக இசைப் பிதாமகர்களில் ஒருவராகிய தியாகராஜரைப் பற்றியும், இந்தியாவின் முதல் தேசியக் கவிஞர் என்று சொல்வதற்கு முழுவதும் தகுதிவாய்ந்த மகாகவி பாரதியைப் பற்றியும் எதுவும் தெரியாது என்பதும் உறுதியாயிற்று.

இன்னொரு செய்தி. போன நூற்றாண்டு ஐம்பதுகளில், தில்லித் தமிழ்ச்சங்கம் கப்பலோட்டிய தமிழரின் நாளைக் கொண்டாடுவது என்று தீர்மானித்து, ஒரு பிரபல ஆங்கிலப் பேராசிரியராக இருந்த வட இந்திய பாராளுமன்ற அங்கத்தினரை அழைத்திருந்தார்கள். அவர் பெயரை டாக்டர் சுப்பராயன் பரிந்துரை செய்திருந்தார். அந்த எம்.பியை அழைக்கப்போனவர், அவரிடம், 'தமிழ்ச்சங்கம் வி.ஓ.ஸி டே கொண்டாட இருக்கிறது. நீங்கள் அவசியம் வரவேண்டும்' என்று சொல்லியிருக்கிறார். வ.உ.சிதம்பரம் பிள்ளைப் பெயரை, அவர் ஏன் ஆங்கில் 'இனிஷியல்'களுடன் சொன்னார் என்பது இறைவனுக்குத்தான் வெளிச்சம். அவர் வர ஒப்புக்கொண்டார்.

பிறகு, அவர் டாக்டர் சுப்பராயனைக் கேட்டிருக்கிறார், உங்கள் தமிழ்ச்சங்கத்துக்கும், ஏரோப்ளேன் ஸ்தாபனத்துக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் ஏன் கொண்டாட வேண்டும்?' என்று.

டாக்டர் சுப்பராயனுக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஏரோப்ளேன் ஸ்தாபனமா? தமிழ்ச் சங்கம் வ.உ.சிதம்பரம்பிள்ளை தினத்தை அல்லவா கொண்டாட இருக்கிறது? யார் சொன்னார்கள்? அவர் கப்பல் ஓட்டினாரே தவிர ஏரோப்ளேன் விடவில்லையே. அவர் காலத்தில் ஏரோப்ளேன் கூட இருந்திருக்காதே!' என்று சொல்லியிருக்கிறார்.

பிறகுதான் குழப்பம் தீர்ந்தது 'வி.ஓ.ஸி டே' என்பதை அந்த எம்.பி தவறாக 'பி.ஓ.எ.ஸிடே' என்று புரிந்துகொண்டிருக்கிறார். அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் ஏர்லைன்ஸ்' 'பிரிட்டிஷ் (B) ஓவர்ஸீஸ் (O) ஏர்லைன்ஸ் (A) கார்ப்பரேஷன் (C) என்றுதான் அழைக்கப்பட்டது. BOAC!

அழைக்கப்போனவர் 'வி.ஓ.ஸி டே' என்பதை எம்.பி 'பி.ஓ.ஏ.ஸி டே'என்று மனதில் வாங்கிக்கொண்டிருக்கிறார்.

இருந்தாலும், ஒரு சரித்திரப் பேராசிரியராக இருந்தவருக்கு, காங்கிரஸ் கட்சி அங்கத்தினருக்கு, சுதந்திரப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு பிரபலத் தமிழ்த் தியாகியை யாரென்று கூடவா தெரியவில்லை?

'என்ன சொல்லுகிறீர்கள்? கப்பல் ஓட்டினாரா? ரியலி?' என்று அவர் சுப்பராயனைக் கேட்டிருக்கிறார் அவர்.

ஆனால் தமிழகத்தின் தென்கோடியில் மதுரையிலிருந்த ஒரு மேடை நாடகக் கவிஞர் பாஸ்கரதாஸ் போன நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலேயே, லாலா லஜ்பத்ராய், மோதிலால் நேரு ஆகியவர்களைப் பற்றி அவர்கள் இறந்தபோது இரங்கற்பா பாடுகிறார்! கே.பி. சுந்தராம்பாள் அவற்றைப் பாடி இசைத்தட்டாக வெளியிட்டிருக்கிறார்!

அன்று மட்டுமன்று. இன்றும் அப்படித்தான். வடக்குக்கு தெற்கைத் தெரியாது. தெற்குக்கு வடக்கு அத்துப்படி!

இதுதான் ஒரு தேசம், ஒரு வரலாறு!

வட இந்தியப் பள்ளி, பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களில் தென்னிந்திய மாநிலங்களின் வரலாற்றைப் பற்றியச் செய்திகள் அந்தக் காலக்கட்டங்களில் மிகமிகக் குறைவு. பிறகுதான் ரொமிலா தாப்பர் போன்றவர்களின் முயற்சியால், வட இந்தியப் பல்கலைக்கழகங்களில்



தென்னிந்திய வரலாற்றைப் பற்றி விருப்பமுள்ள மாணவர்கள் தேர்ந்தெடுத்துப் படிக்கத் தொடங்கினார்கள். இந்தி மொழி வழங்கும் மாநிலங்களில், அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இன்றும் சேர, சோழ, பாண்டியர்கள் என்றால் யாரென்று நிச்சியமாகத் தெரிந்திருக்காது என்று உறுதியாகச் சொல்ல முடியும். இதுதான், 'ஒரு நாடு, ஒரு மொழியின்' கதை.

இந்தியத் தேசிய வரலாற்று நிறுவனம் (ICHR) கல்வித் திட்டத்தில் ஒரு புதிய சகாப்தத்தைத் துவங்கப் போவதாக அறிவித்திருக்கிறது. புள்ளியியலும் (Statistics) சரித்திரமும் ஆளுங்கட்சியின் உண்மை என்ற பெயரில் வழங்கும் கற்பிதங்கள். ஆள்பவர்கள் அவர் விரும்புகிறபடி புள்ளி விவரங்களை மக்கள் முகத்தில் வீசி, மணலைக் கயிறாகத் திரிக்க முடியும். அதே மாதிரிதான் வரலாறும்.

இந்திரா காந்தி பிரதம மந்திரியாக இருந்தபோது, அவருக்கு வேண்டிய சில 'முட்டைத் தலையர்களை'க்கொண்டு (egg-heads; அறிவு ஜீவிகள்) அவர் விரும்பியபடி இந்திய சரித்திரத்தைத் திரித்து எழுதி 'காப்ஸ்யூல்'களாக பூமியின் ஆழத்தில் பிற்காலச் சந்ததிகளுக்காகப் புதைத்து வைத்தார். அவற்றில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று யாருக்கும் தெரியாது. 1977ல் அவர் தேர்தலில் தோற்ற பிறகு, ஆட்சிக்கு வந்த ஜனதா கட்சி அரசாங்கம் புதைக்கப்பட்டனவற்றைத் தோண்டி எடுத்து அவற்றை அழித்துவிட்டது.

ஆனால் இன்றைய ஆட்சி திருத்தி எழுதப்படும் சரித்திரத்தை பூமியில் புதைக்க விரும்பவில்லை. அதிகாரப்பூர்வமான வரலாறாகப் பகிரங்கமாக அறிவித்து இந்தத் தலைமுறைக்கு மட்டுமல்லாமல், எதிர்காலத் தலைமுறை மாணவர்களுக்கும் பாடத் திட்டமாக வைக்க இருக்கிறது! இந்தப் பாடத் திட்டத்தின்படி இந்தியாவில் புராணங்கள், தொன்மங்கள் என்று எதுவுமே இருக்கப்போவதில்லை. அனைத்தும் சரித்திரச் செய்திகள்!

கம்பன் சொன்னான், அயோத்தியில் உண்மை பேசுகிறவர்களே இல்லை., காரணம், எல்லோருமே உண்மையைத் தவிர வேறொன்றும் பேசாவிட்டால் உண்மை, பொய் என்கின்ற பாகுபாடு எப்படி இருக்க முடியும்?

அதே மாதிரி, பொய்யே நாட்டின் சித்தாந்தமாகி விட்டால் அதுதானே நாட்டின் செங்கோலோச்சும் உண்மை?

parthasarathyindira@gmail.com

SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching

www.tnpscthervupettagam.com
www.shankariasacademy.com

# TNPSC
## GR I, II, & IIA PRELIMS COACHING

**ADMISSIONS OPEN NOW**
@ Annanagar

### Foundation course for TNPSC Exam - 2025

- Structure and Student - centric approach
- Hybrid class: Offline & Online (Live)
- Bilingual Teaching: English & Tamil
- Recorded Class Video for revision





**Shankar IAS Academy - Head Office**
No 259, AL Block, 4th Avenue, Shanthi Colony,
Anna Nagar, Chennai-600040.
enquiry@shankarias.in

044-43533445
044-45543082

Chennai | New Delhi | Bengaluru | Trivandrum | Hyderabad | Madurai | Trichy | Coimbatore | Salem | Namakkal


# விற்பனையில்!













வாழும் தலைமுறையும் வரும் தலைமுறைகளும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 1965 ஜூலை முதல் 1970 ஜூலை வரையிலான கணையாழி இதழ்கள் அப்படியே அச்சுப் பிசகாமல் 5 தொகுதிகளாக 2606 பக்கங்களில்.

**ஒவ்வொரு தொகுதியும் ரூ.500**

Kanaiyazhi padaippakam எனும் பெயரில் மணி ஆர்டரோ அல்லது காசோலையோ:
கே 502, விக்டோரியா டவர்ஸ், # 37, இராஜிவ் காந்தி சாலை (OMR),
கழிப்பட்டூர், தமிழ்நாடு -603103
எனும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது வங்கியில் நேரடியாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

வங்கியில் நேரடியாகச் செலுத்த -
Name of the Account : Kanaiyazhi padaippakam
Indian Overseas Bank, Valmiki Nagar Branch(1472)
Current Account No. 147202000000946
NEFT- IFSC Code - IOBA0001472

**கணையாழிப் படைப்பகம் வெளியீடு**